CANADA ULAHATHAMILAR
கனடா
உலகத்தமிழர்
சர்வதேச தமிழர் பத்திரிகை
www.worldtamils.com
குரல் 359 | மே 01 - மே 07, 2015 | இலவசம்!!

தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதா?

வெட்டுக்கொத்துக்குப்பின் 19வது திருத்தம் நிறைவேற்றப்பட்டது

மே 19 வரை நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

தேர்தலுக்கான 20வது திருத்தம் சுமூகமாக நிறைவேற வாய்ப்பில்லை

ஒன்ராறியோ புறோகிறசிவ் கன்சர்வேற்றிவ் தலைவர் தெரிவு இவ்வாரம்

பற்றிக் பிறவுண் - கிறிஸ்ரின் எலியற்

நேரடிப் போட்டி

வருமானவரித் தாக்கல் மே 5 வரை நீடிப்பு

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
Uthayan Sivarajah Broker 416 301 5555
Sugan Sivarajah Sales Representative 905 201 0066
Raj Sivarajah Sales Representative 416 843 3333
SivaKumar Sivarajah Sales Representative 416 453 7777
HOMELIFE/FUTURE REALTY INC., BROKERAGE | #205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide Mortgage Solutions Inc.
Suren Nathan AIMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

Now Open Open Mon-Sat: 10:00 am to 7:00 pm
Dr. Vidya Varathan DDS, Phd.
Dentist / Assistant Lecturer at the University of Toronto
416-335-3200
416-335-0600
www.ensuredental.com
15-2901 Markham Road, Scarborough ON M1X 0B6 (Markham & McNicoll Centre)

NOW HIRING!

INFORCE LIFe Financial Services Inc.
416 909 0400
career@inforcelife.com
www.inforcelife.com

Call me first and say "yes" to the home of your dreams!

Peter Sober 416-275-3571
MORTGAGE SPECIALIST | TD CANADA TRUST
TD Canada Trust
சகல Mortgage தேவைகளுக்கும் தமிழில் உரையாட என்னை அழையுங்கள்
Your Smile Is My Best Return!

INCOME TAX
Selva Vettyvel
Broker of Record
Cell: 416-568-4301
- Personal
- Small Business
- Corporate Returns
- Business Registration
- Corporation Registrations
- New house HST Rebate
- GST/HST Filling

FREE Real Estate Classes

Soccer Soccer Soccer Soccer Soccer Soccer Soccer Soccer
Rep U14, U12 (born 2001 & 2003)
player tryout
Call For more Details: 416-206-7145
CTSA Balachandran Sports Club

கமல் நவரட்ணம்
Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-671-4815
E mail:kamalhomesale@gmail.com

HOUSE FOR SALE
HomeLife/Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229
Independently Owned and Operated
See Pg.19
Trust and reliable services

காயம் அடைந்து விட்டீர்களா?
அழையுங்கள்
டரன் கிருபா
கனேடிய தமிழ் வழக்கறிஞர்
We specialize in serious personal injury and insurance claims.

Darren Kirupa, J.D.
Barrister and Solicitor
416.904.9118
FIREMAN STEINMETZ
PERSONAL INJURY LAWYERS
www.firemanlawyers.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TIME FOR SOLUTIONS

மாதாந்தக் கட்டணங்கள், நிதி நெருக்கடிகளுக்கான தீர்வு காண இதுவே தருணம்

உங்கள் அனைத்து மாதாந்தக் கட்டணங்களையும் ஒவ்வொன்றாக செலுத்துவதை விட, அவை அனைத்தையும் ஒன்று சேர்த்து மீள் அடமானக் கட்டணம் மூலம் செலுத்த முடியும். இதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியும்.

		Before	After
Mortgage Payment	320,000 @ 5.4%	1,934.67	-
Car Loan	21,000 @7.5%	764.25	0.00
Line of Credit	16,000 @ 6.5%	566.67	0.00
Line of Credit 2	12,500 @ 7%	447.92	0.00
Credit Card 1	8,800 @ 12%	352.00	0.00
Credit Card 2	5,200 @ 19%	238.34	0.00
Store Card	3,000 @ 24%	150.00	0.00
New Mortgage payment	386,500 @ 2.8%		1,584.80
Total Dept		386,500.00	386,500.00
Total Payment		**4,450.85**	**1,584.80**

இதன் மூலம் மாதாந்தம்

$2,866.05

சேமிக்க முடியும்

-digi Media Creations-

BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...

TD Canada Trust · Scotiabank · Street Capital Financial Corporation · First National Financial LP · MCAP · National Bank of Canada · Merix

Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479

Dir. **416-436-1111**

Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா உலகத்தமிழர்
இதயதாகம்
மே 01, 2015 - மே 07, 2015

சபை ஏறுமா எம் பிரச்சனை!

பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மிகப் பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இருபதாம் திருத்தச் சட்டமும் விரைவில் பாராளுமன்றத்தில் வரவிருப்பதாக முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுவிட்டது. 19-ம் திருத்தச் சட்டம் பெரும் சவாலுக்கு மத்தியிலேயே சட்ட வலுவைப் பெற்றுள்ளது. இதனை ஜனாதிபதி மைத்திரி சபையில் தாக்கல் செய்யும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. அது சட்டமாவதைத் தடுக்க மகிந்த கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். பாராளுமன்ற நடவடிக்கைகளை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டே மகிந்த, தமது சகாக்களுக்கு தொலைபேசியில் ஆலோசனை வழங்கியுள்ளார். ஆனாலும் அவை முக்கியத்துவம் பெறவில்லை. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களில் ஐம்பது சதவீதமானவை இத்திருத்தச் சட்டத்தின்மூலம் குறைக்கப்பட்டுள்ளன. முக்கியமாக ஜனாதிபதிக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய முடியுமென இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் சிங்கள அரசியலில் மிகப்பெரும் பரபரப்பாகப் பேசும் அளவுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் இவ்விடயம் பேசப்படவில்லை. ஏனெனில், தமிழ் மக்களுக்கு இதனால் எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை. தமிழரின் பிரச்சனைக்கும் இது தீர்வாகாது.

19, 20, 21, 22 என எத்தனை திருத்தச் சட்டங்கள் வந்தாலும் தமிழரின் பிரச்சனைக்குத் தீர்வு வழங்கும் திருத்தச் சட்டத்தை மாத்திரம் எந்த அரசும் கொண்டுவரத் தயாராகவில்லை. ஏன்? தம் உரிமைகளைப் பெறுவதற்காக தமிழினம் அதிகூடிய விலையைக் கொடுத்துள்ளது. ஆனாலும் எமது பிரச்சனை இன்னமும் சபை ஏறவில்லை. போரை நடாத்திய நாடுகளைக் கேட்டால் புதிய அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு தீர்வைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறுகின்றன. தமிழரின் பிரச்சனை நூறு நாள் வேலைத்திட்டத்தில் இல்லை. அதனால் கொஞ்சம் பொறுங்கள் நூறு நாள் வேலைத்திட்டத்தை முடித்துவிட்டு வருகிறோம் என புதிய அரசு கூறுகின்றது. நூறு நாள் வேலைத்திட்டம் முடிய, பாராளுமன்றத் தேர்தல் ஆரம்பமாகிவிடும். மீண்டும் பொறுங்கள் என்றே கூறப்படும். 19-ம் அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அமெரிக்கா உடனடியாக வரவேற்புத் தெரிவித்துள்ளது. முன்னைய மகிந்த அரசு அமெரிக்காவுடன் எதிர்ப்பு அரசியலே மேற்கொண்டிருந்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றிபெற்றிருந்தால், அமெரிக்கா மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணைகளில் கூடிய கவனம் செலுத்தவேண்டி ஏற்பட்டிருக்கலாம் என அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. மகிந்தவை பதவியிலிருந்து துரத்தினால் எல்லாப் பிரச்சனைக்கும் தீர்வு ஏற்பட்டுவிடுமென அமெரிக்கா கருதுகின்றது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் செரியின் இலங்கை விஜயமும் அதனையே காட்டி நிற்கின்றது. இலங்கையில் ஜனநாயகத்தை மைத்திரி கொண்டுவந்துவிடுவார் என அவர் நம்புகிறார். தமிழரின் பிரச்சனைக்கு தீர்வு காணும் விடயத்தில் அமெரிக்கா அதீத அக்கறை எடுக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பாகும். மகிந்த ஆட்சிக் காலத்தில் தமிழரிடமிருந்து பறிக்கப்பட்ட ஒரு இலட்சம் ஏக்கர் காணி, அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கக்கூடமுடியாத நிலையிலேயே புதிய அரசு செயற்படுகின்றது என்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

"உலகத் தமிழினத்தின் உண்மைத்தளம்"
www.worldtamils.com

கனடா உலகத்தமிழர் பத்திரிகையில் வெளிவரும் உங்கள் உறவுகளின் பிறந்தநாள் வாழ்த்து, அரங்கேற்றம், மரண அறிவித்தல்கள், மற்றும் ஏனைய அறிவித்தல்கள் www.worldtamils.com இணையத்தளத்தில் இலவசமாக வெளியிடப்படும். கனடா உலகத்தமிழர் பத்திரியில் வெளியிடப்படும் வர்த்தக விளம்பரங்களை இணையப்பத்திரிகை (E- Paper) ஊடாக www.worldtamils.com இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

www.worldtamils.com

கனடா உலகத்தமிழர் பத்திரிகை
Canada Ulahathamilar
705 Progress Avenue, Unit 106,
Scarborough, Ontario. M1H 2X1
தொலைபேசி / TeL: 416 303 7675 / 416 438 3030
தொலைநகல் / Fax: 416 438 6999
மொன்றியல் / Montreal: 514 660 5891
மின்னஞ்சல் / Email: editor@worldtamils.com
இணையம் / Web: www.worldtamils.com

Markham McNicoll Urgent Care Centre
MMUCC URGENT CARE

OPEN Mon - Fri : 8am - 9pm
Sat, Sun & Holidays: 9am - 4pm
* Walk-In Clinic
* Urgent Care
* Lab Services (For our patients)
* X Ray & Ultrasound, Pharmacy & Physiotherapy (In the same building)
Unit -11, 2901 Markham Road, Scarborough, ON M1X 0B6
Call:. 416-609-3333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nineth Line/16th Ave

Bedrooms: 2+1 Markham
Washrooms: 2 $475,900

Markham Road/Ellesmere Road

Bedrooms: 4+1 Toronto
Washrooms: 2 $488,000

Scar Golf Club/Lawrence Avenue

Bedrooms: 3+2 Toronto
Washrooms: 2 $494,900

Bellamy/Benleigh



Bedrooms: 3 Toronto
Washrooms: 1 $509,900

16th Ave / Markham Rd

Bedrooms: 3 Markham
Washrooms: 2 $529,000

Salem/Hwy 401

Bedrooms: 3 Ajax
Washrooms: 3 $529,900

Markham Rd & Brimorton

Bedrooms: 3+2 Toronto
Washrooms: 2 $535,000

Salem Rd/Kingston Rd

Bedrooms: 3 Ajax
Washrooms: 3 $537,000

Why Pay Rent ?

When you can buy a home with...
0% Down / No Credit / Bad Credit

#1 RE/MAX

Chairman's Club Award

RE/MAX
All-Stars Realty Inc., Brokerage

Raj Paramasamy
Sales Representative
Cell: 416-587-1619
Email: raj.paramasamy@hotmail.com



"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

Low Mortgage Rates

Supen Subramaniyam
Manager, Residential Mortgage

416-844-8692 1-888-809-9154

supenthiran.subramaniam@td.com

TD Canada Trust

ADVICE WHEREVER WHENEVER

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

TD Canada Trust
Banking can be this comfortable

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Albert Campbell Square
(Scarborough Town Centre)

அல்பேர்ட் காம்பெல் சதுக்கத்தில்

தமிழின அழிப்பு நினைவு நாள்

மே 18, திங்கட்கிழமை மாலை 5:00 மணி

தமிழின அழிப்பின் 6ஆம் ஆண்டு நினைவு நாள்

- Conduct independent, international investigation on war crimes, crimes against humanity and genocide
- Give back the seized land: Remove Prevention of terrorism act: Release political prisoners
- Conduct UN monitored referendum among the Tamils originally from North and East of Sri Lanka

- போர்க் குற்றங்கள், மனிதத்திற்கு எதிரான குற்றம் மற்றும் இன அழிப்புக்கான அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும்
- ஈழத் தமிழரிடம் அபகரித்த பூர்விகக் காணிகளை திரும்பக் கொடு : பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அகற்று : அரசியல் கைதிகளை விடுதலை செய்
- ஐ.நா கண்காணிப்பில் தமிழர்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்தி அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும்

முள்ளிவாய்க்கால் உறவுகளுக்கு
நினைவுத் தீபம் ஏந்துவோம்

தொலைபேசி: 416 830 7703

கனடியத் தமிழர் சமூகம் - கனடியத் தமிழ் மாணவர் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க இன்றே திட்டமிடுங்கள்



போதுமான பாதுகாப்பே குடும்பத்தில் நிறைவான நிம்மதியைத் தரும்.

உங்களிடம் உள்ள காப்புறுதி உங்களுக்கு எவ்வாறான பாதுகாப்பைத் தருகிறது என்று அறிய வேண்டுமா? இலவச ஆலோசனைக்கு என்னை அழையுங்கள்.

Super Visa 100% Refund if Visa Denied

உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்யலாம்

ஆயுள் காப்புறுதி விலைவிபரங்கள்

Age		25		30		35		40		45		50	
		M	F	M	F	M	F	M	F	M	F	M	F
200K	T10	15	11	15	12	15	14	19	18	26	21	34	26
500K	T10	28	18	28	19	29	23	36	28	51	37	76	54
200K	T20	17	14	18	15	20	16	26	21	40	29	63	43
500K	T20	34	23	34	24	37	28	50	38	80	54	136	83
100K	WL	49	44	58	52	69	61	81	69	103	86	122	107
250K	WL	95	83	115	102	142	126	178	149	234	195	280	239

Non medical- Term & Permanent Products

Age		45		50		55		60		65		70	
		M	F	M	F	M	F	M	F	M	F	M	F
150K	T10	46	41	64	53	92	72	166	121	292	197	586	369
100K	T10	33	30	46	38	64	51	113	83	197	134	393	248
50K	T10	20	20	33	23	36	29	60	45	102	71	200	128
150K	T20	56	46	92	67	147	104	243	164	398	257	675	442
100K	T21	40	33	64	47	101	72	165	112	268	174	452	297
50K	T22	24	20	36	27	54	40	86	60	138	91	230	152
20K	SI	45	37	49	41	61	52	80	66	111	86	157	117
30K	SI	64	53	71	59	89	75	117	96	164	126	232	173
40K	SI	84	69	92	76	117	98	154	126	217	167	308	229
50K	SI	104	85	114	94	144	121	191	156	270	207	384	285
75K	SI	153	124	169	139	214	178	283	231	402	308	573	425
100K	SI	202	164	223	183	283	236	376	306	534	409	763	564

திலீபன் இராமநாதன் BBM (Hons)
ஆயுள் காப்புறுதி முகவர்
Thileepan Ramanathan
Insurance Advisor
Dir : (647) 381-8445
fax: (416) 646 9052
Email: itsthil@yahoo.ca

Life100 INSURANCE & INVESTMENTS INC.

Life 100 Insurance & Investment Inc.
10 Milner Business Ct, Suite 208,
Scarborough, ON, M1B 3C6
Tel:647 381 8445
Off:4163212500 / Fax: 416 646 9052
Web.life100.ca

$549,900
3+3BrBungalowDetachedHome
Closetoall Amenities
Markham/Ellesmere

$283,900
1+Den TridelCondoLotsOf Amenities
Close To All Amenities...
Kennedy/401

$599,900
4+1BrBacksplitHomeFinishedBsmt
RedevelopmentOpportunity
HWY7/Durham YorkLine

$2.8 Million
Call For More Info.

$449,900
3+1BrBungalowDetachedHome
Close To All Amenities..GrowHouse
Brimley/Eglinton

$549,000
3BrBungalowDetachedHome
RedevelopmentOpportunity .....
Meadowvale/Ellesmere

$1.38Million
4+1Br2StoreyDetachedHome
Close Toall Amenities...
Bathurst/Bloomimgton

$1.2 Million
Call For More Info.

Gnanendran Narasingham
Mobile: 416.937.8090
Sales Representative

Judy Gnanendran
Mobile: 416.629.9797
Sales Representative

Finch Ave. E. Suite 203, Toronto, ON, M15 0C2

OFFICE: 416.321.6969
FAMILY OWNED & OPERATED, REALTOR

$1.5 Million
Call For More Info.

$2.8 Million
Call For More Info.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச சார்பற்ற நிறுவனங்கள் வலிகாமத்தில் செயற்படத் தடை?

வலிகாமத்தில் மீள்குடியேற ஆரம்பிக்கின்ற மக்களுக்கான உதவிகளை வழங்க, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தடை ஏற்படுத்தப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீள்குடியேற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக நிய மிக்கப்பட்டுள்ள, ஜனாதிபதி செயலணி இதற்கு தடையாக இருக் கிறது. அங்கு பணியாற்றி வரும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது.

அங்குள்ள மக்களுக்கு குறித்த நிறுவனங்கள் உதவிகளை வழங்க வேண்டுமாக இருந்தால், ஜனாதிபதி செயலணியிடம் அனு மதி கோர வேண்டும் என்று அரசாங்க அதிபரினால் வலியுறுத்தப் படுகிறது. எனினும் ஜனாதிபதி ஆணைக்குழு இதற்கு அனுமதி வழங்க மறுக்கிறது. இராணுவம் மற்றும் அமைச்சிக்களின் செயலா ளர்களை உள்ளடக்கியதாக இந்த செயலணி உருவாக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○

படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என யாழ். ஆயர் கோரிக்கை

இலங்கை இராணுவத்தின் வசமுள்ள வடக்கு கிழக்கு தமிழர் காணிகள் அனைத் தையும் விடுவித்து மக்களிடம் கையளிக்க வேண்டும் என்று யாழ் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியு றுத்தியுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இல ங்கை ஆயர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது யாழ். மறைமாவட்ட ஆயர் ஜனாதிபதிக்கு இந்த விடயத்தை எடுத் துரைத்துள்ளார்.

வடக்கு கிழக்கு மக்களின் அதிகப்படியான வாக்குகளில் ஜனா திபதியாக வெற்றி பெற்றமையிட்டு வாழ்த்திய யாழ். ஆயர் அதற் கான செயற்பாடுகளை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது மிகவும் கஷ்டமான சவால் நிறைந்த பணி என தான் அறிந்திருப்பதாக தெரிவித்த ஆயர் அதனை துணிந்து செய்யும் வல்லமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இருப்பதாக தான் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரசாலும் இராணுவத்தால் கைப்பற்றட்ட தமிழர் நிலத்தை மீள கையளிப்பதற்கு மைத்திரிபால சிறிசேன எடுக்கும் முயற்சிகளை பாராட்டுவதாக குறிப்பிட்ட ஆயர் மக்கள் தமது சொந்த இடங்களில் மிள்குடியேறுவது மகிழச்சி அளிப்பதாக கூறினார்.

ஆயிரம் ஏக்கரை விடுவித்தமை போன்று இராணுவத்தின் வசமுள்ள எஞ்சிய நிலங்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தவிடயங்களை குறித்து ஜனாதிபதி அவதானமாக செவி மடுத்ததாகவும் அது தொடர்பில் உரிய நடவடிக்கையை எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்திற்கு உறுதியளித்துள்ளதாகவும் ஆயர் இல்லம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○

போர்க்குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த அமெரிக்கா கடமைப்பட்டுள்ளது

சிறிலங்கா உள்ளிட்ட நாடுகளில் இடம் பெற்ற குற்றங்கள் பற்றிய உண்மைகளைக் கண்டறிவதற்காக விசாரணைக் குழுக் களையும், பொறிமுறைகளையும் உருவாக் குவதற்கு அமெரிக்கா ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளதாக, அமெரிக்க அதிபர் ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் தெரிவித்துள்ளார்.

நியூஜேர்சியில் உள்ள செற்றன் ஹோல் பல்கலைக்கழகத்தில், உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொடூரங்கள் இழைக்கப்படும்போது, உலகெங்கும் நாம் பொறுப் புக்கூறலை வலுப்படுத்துகிறோம். சிறிலங்கா, கிர்கிஸ்தான், லிபியா, ஐவரிகோஸ்ட் மற்றும் மிக அண்மையில் வடகொரியாவில் நிகழ்ந்த அட்டூழியங்கள் குற்றங்கள் தொடர்பான உண்மைகளை கண்டறிய உதவும் விசாரணைக் குழுக்களை அமைக்கவும், பொறிமுறை களை உருவாக்கவும் நாம் ஆதரவளித்துள்ளோம்.

எந்தவொரு அனைத்துலக நீதிமன்றத்தினாலும் கொடுமை களை இழைத்தவர்களாக குற்றம்சாட்டப்பட்ட தனிநபர்களை கைது செய்வதற்கான தகவல்களை வழங்குவோருக்கான பணப்பரிசு களை அறிவிக்க அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அதி காரமளிக்கும் திட்டத்தை விரிவாக்கும் சட்டத்தில் அதிபர் ஒபாமா கையெழுத்திட்டுள்ளார்.

அறிவுக்கு ஒவ்வாத குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு எமது பங்காளர்களுடன் இணைந்து பணியாற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைச் செய்திகள்

19வது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டது

சிறிலங்கா ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன 19வது திருத்தச்சட் டத்தை நிறைவேற்றுவதற்காக செவ் வாய்க்கிழமை முழுநாளும் நாடாளு மன்றத்திலேயே தங்கியிருந்துள்ளார்.

சிறிலங்காவின் நாடாளுமன்றத் துக்கு செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் சென்ற அவர், 19வது திருத்தச்சட்டம் தொடர்பில் ஆளுங் கட்சி மற்றும் எதிர்க்கட்சிக்கு இடை யில் நிலவிய கருத்து முரண்பாடுகளை தீர்ப்பதில் முக்கிய கவனம் செலுத்தி யிருந்தார்.

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிர மசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா உள்ளிட்ட தரப்பினரை தொடர்ச்சியாகச் சந்தித்த இவர், 19வது திருத்தச்சட்டம் தொடர் பில் இவ்விரு தரப்பினருக்கும் இடை யில் இணக்கத்தை ஏற்படுத்துவதில் ஈடுபட்டிருந்தார்.

இந்த திருத்தச்சட்டத்தில் ஆளும் கட்சியால் 63 திருத்தங்களும், எதிர்க் கட்சிகளால் 11 திருத்தங்களும் முன் வைக்கப்பட்டன.

இவற்றுள் சிறிலங்காவின் அரசிய லமைப்புச் சபைக்கான உறுப்பினர் களைத் தெரிவு செய்யும் விவகாரத்தி லும், அமைச்சர்களை நியமிக்கும் ஜனாதிபதியின் அதிகாரம் தொடர் பான விவகாரத்திலும் இரு தரப்பின ருக்கும் இடையில் இழுபறி நிலை காணப்பட்டது.

சிறிலங்காவின் அரசியலமைப்புச் சபை அரசியல் சார்பற்றதாக இருக்க வேண்டும் என்று அரசதரப்பு வாதிட் டது. அது முற்றிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தெரிவித் தது.

சிறிலங்காவின் அரசியலமைப்பு சபை உறுப்பினர்களாக மாதுளுவ ாவே சோபித தேரர், பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் சிராணி பண்டா ரநாயக்க ஆகியோரை நியமிக்க அரச தரப்பு முயல்வதாக எதிர்க்கட்சி தரப் பில் குற்றம் சுமத்தப்பட்டது.

இறுதியில், சிறிலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலையீட் டைத் தொடர்ந்து, 7 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், 3 துறைசார் நிபுணர்களையும் கொண்டதாக அரசி யலமைப்பு சபை விளங்கும் என்று முடிவு செய்யப்பட்டது.

அதேவேளை, அமைச்சர்கள் நிய மனம் தொடர்பில் ஜனாதிபதி பிரதம ரின் அனுமதியை பெற வேண்டும் என்ற விதிமுறையையும் மாற்ற வேண் டும் என்று எதிர்க்கட்சி தரப்பில் வாதி டப்பட்டது.

அத்துடன், இவ்விரு திருத்தங் களும் செய்யப்படாமல் 19வது திருத் தச்சட்டத்தை ஆதரிக்க மாட்டோம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், சிறிலங்கா ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன எடுத்த முயற்சிகளை அடுத்து, அமைச்சர்கள் நியமனம் தொடர்பான பிரிவில் சிறிய மாற்றம் செய்யப்பட்டதையடுத்து, வாக் கெடுப்புகள் நடத்தப்பட்டன.

இவ்விடயம் தொடர்பில் இரு தரப் பிலும் இணக்கப்பாட்டை ஏற்படுத்து வதில் நேற்று முழுதும் தீவிரமாக இருந்த சிறிலங்கா ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன, 19வது திருத்தச்சட் டம் நிறைவேற்றப்பட்ட பின்னரே தனது இல்லத்துக்குச் சென்றார்.

அரசியலமைப்பு சபைக்கு நாடா ளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப் படக்கூடாது என்பதில் ஐக்கிய தேசி யக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பும் உறுதியாக இருந்த போதி லும், 19வது திருத்தச்சட்டத்தை நிறை வேற்ற வேண்டும் என்பதற்காக இந்த விவகாரத்தில் விட்டுக்கொடுக்க நேரிட் டதாக இந்த வாக்கெடுப்பின் முடிவில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க தெரிவித்திருந்தார்.

சம்பூரில் முதலீட்டு சபைக்கு வழங்கப்பட்ட காணியின் வர்த்தமானியை இரத்து செய்ய நடவடிக்கை

சம்பந்தன்

சம்பூரில் பொது மக்களுக்கு சொந்தமான 800 ஏக்கர் காணியை முதலீட்டு சபைக்கு வழங்கி வெளியி டப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை இரத்து செய்வதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இதனைத் தெரிவித் துள்ளார்.

குறித்த காணிப்பரப்பு முதலீட்டு சபைக்கு வழங்கப்பட்டுள்ளதால், குடி யேற்றத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை இரத்து செய் வதற்கான ஆவணம் சட்ட மா அதிபர் திணைக்களத்தினால், ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் வாரம் இந்த வர்த்தமானியை ஜனாதிபதி இரத்து செய்வார் என்றும், அதன் பின்னர் குடியேற்றம் இடம்பெறும் என்றும் தெரவிக்கப்பட்டுள்ளது.

சந்திரிக்காவிற்கு எதிராக முறைப்பாடு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் களான விமல் வீரவன்ச மற்றும் வாசு தேவ நாணயக்கார ஆகியோர் முறைப் பாடு செய்துள்ளனர்.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகக் காணிகள் உரிய விதி முறைகளுக்கு புறம்பான வகையில் தனியார் நிறுவனமொன் றுக்கு சந்திரிக்கா வழங்கியதாக குற் றம் சுமத்தப்பட்டுள்ளது.

பத்து ஏக்கர் காணி இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

2007ம் ஆண்டில் முன்னாள் ஜனா திபதி உள்ளிட்டவர்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு வின் அடிப்படையில், இந்த கொடுக் கல் வாங்கல்களில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக நீதிமன்றம் அறி வித்திருந்தது என வாசுதேவ நாணயக் கார தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் தனியார் நிறுவ னத்திடமிருந்து காணி மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குற்றச் செயல்களில் ஈடு பட்டவர்கள் இதுவரையில் தண்டிக்கப் படவில்லை என அவர் தெரிவித்துள் ளார்.

ஆந்திரா படுகொலைச் சம்பவம் எமது நாட்டில் நடந்ததை ஞாபகப்படுத்துகின்றது

ஆந்திர வனப்பகுதியில் கடந்த 7ம் திகதி இடம்பெற்ற சம்பவம் எங்கள் நாட்டில் சிறிது காலத்திற்கு முன்னர் இடம்பெற்ற கண்மூடித்தனமான படு கொலைகளை எமக்கு நினைவு படுத்துவதாக உள்ளது என வட மாகாண சபை முதலமைச்சர் விக்கி னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் 28வது அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் தொடர்ந்து உரை யாற்றுகையில், தமிழர்கள் என்பதற் காக பேருந்தில் பயணித்த அப்பாவி தமிழர்கள் செம்மர கடத்தல் தடுப்பு பிரிவின் தனிப்படையினரால் தான் தோன்றிதனமாக படுகொலை செய் தமைக்கு வடமாகாண மக்கள் சார்பில் நாம் எமது கண்டனங்களை தெரிவிப் பதுடன், குறித்த சம்பவத்தில் உயிரி ழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ் ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின் றோம். என மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GAS STATION FOR SALE

- Near Porthope Area
- 3.5 Acre Land
- Chip Truck Rented
- 2 Pump
- House with 4 bedrooms
- Convenience Store
- Lotto 649

- Located at Cobalt
- 1.6 Acre Land
- 3 Bedroom House
- Coin Car Wash
- Convenience Store
- Lotto 649

வவுனியாவில் வீடு
விற்பனைக்குண்டு



Vaheesan Jeyaveerasingam

Sales Representative

2012 PLATINUM CLUB MEMBER | 2013 DIAMOND CLUB MEMBER | 2013 TOP 5% SALES REP IN CANADA

416-278-3161

vaheesan@vaheesanhomes.com

www.vaheesanhomes.com

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Future Realty Inc., Brokerage
Tel: 905 201 9977
205-7 Eastvale Dr., Markham ON L3S 4N8
Independently owned & operated

MLS NOT INTENDED TO SOLICIT BUYERS & SELLERS CURRENTLY UNDER CONTRACT

கொடிய நோய்க்குரிய காப்புறுதி

Critical Illness Insurance - 100% Money Back at Age 65

AGE		M 25	F	M 30	F	M 35	F	M 40	F	M 45	F	M 50	F
50K	T75	44	42	56	51	67	62	87	82	117	110	171	148
100K	T75	76	72	96	88	118	107	152	140	205	195	312	258

- Alzheimer's Disease
- Aortic Surgery
- Aplastic Anemia
- Bacterial Meningitis
- Benign Brain Tumour
- Blindness
- Cancer (Life-threatening)
- Coma
- Coronary Artery Bypass Surgery
- Deafness
- Heart Attack (Myocardial infarction)
- Heart Valve Replacement
- Kidney Failure
- Loss of Independent Existence
- Loss of Limbs (Dismemberment)
- Loss of Speech (Muteness)
- Major Organ Failure - On Waiting List
- Major Organ Transplant
- Motor Neuron Disease
- Multiple Sclerosis
- Occupational Injury-HIV
- Paralysis
- Parkinson's Disease
- Severe Burns
- Stroke (CVA)

Thana Manickavasagar Broker

Cell : 416-728-5772
Off : 416-519-3896
Fax : 647-547-8147

இது போன்ற 25 கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி வழங்கப்படும்.
நோய் ஏற்படாவிடின் கட்டியபணம் முழுவதையும் 65 வயதில் மீளப்பெறலாம். வேறுவிதமாக இறந்தாலும் கட்டிய பணம் முழுவதும் திரும்பப்பெறலாம்.

RBC Insurance | Manulife | Industrial Alliance Insurance and Financial Services Inc. | La Capitale Financial Group | Assumption Life Financial Services | BMO Insurance | Sun Life Financial

E-mail : thana7@gmail.com Web : www.thana.ca
80 Nashdene Road, Unit D218, Scarborough, ON, M1V 5E4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தித் திறனாய்வு

தமிழ் மண்ணில் என்ன நடக்கிறது?

பாகம் - 04

உலக வரலாற்றில் வேறு எந்த இனமும் ஈழத் தமிழினம் போல் பேரழிவைக் கண்டதில்லை. எந்த ஒரு நாடும் இவ்வளவு கொடுமைகள் ஈழத்திலே நடைபெறுகின்றதே என்று சிறு குரல்கூடக் கொடுக்கவில்லை. 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் அனைத்து உதவிகளையும் கொடுத்துத் தமிழின அழிப்புப் போரை வெற்றிகரமாக முன்னெடுத்தன.

அன்று மகிந்தர்; இன்று மைத்திரி - சந்திரிகா - ரணில் கூட்டு. நாளை எவர் வந்தாலும் அவருடன் கூட்டு. இவைதான் இவர்களின் கோமாளித்தனம்.

ஐக்கிய நாடுகள் அவைகூட கண்ணை மூடிக்கொண்டுதான் இருந்தது. தமிழினத்தின் எதிர்காலம் இருண்டபடியே உள்ளது. தமிழ் மக்களின் இழப்பை – அவலங்களை வைத்து தமிழ்க் கட்சிகள் அரசியல் நடத்துகின்றன.

தமிழ் மண்ணிலே அரசியல் செய்பவர்கள் என்ன செய்கின்றார்கள்? அவர்களின் நோக்கு என்ன? அடுத்து என்ன செய்யப் போகின்றார்கள் என்றால் தெளிவான விடை கிடைக்கமாட்டாது. ஆயுதப் போராட்டத்துக்கு முன்பிருந்த அரசியல் தலைமைக்கும் இப்பொழுதிருக்கும் தலைமைக்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றது. அன்று சில கொள்கைகளை அவர்கள் முன்வைத்தனர். அவற்றை மக்கள் முன்கொண்டு சென்றனர்.

இன்று எதுவும் இல்லை. தற்பொழுது பார்க்கும் பொழுது நடப்பவைகள் அனைத்தும் அரசியல் கோமாளித்தனங்களாகவே காட்சியளிக்கின்றது.

அரசியல் கோமாளிகள்

மாபெரும் தலைமையின் கீழ் ஒன்றுதிரண்டிருந்த தமிழ் மக்களின் மத்தியில் எத்தனை அரசியல்கள் இன்று கடை விரித்துள்ளன. இவற்றில் தாயகம் சுயநிர்ணயம் பற்றிய சிந்தனை உடையவை உள்ளனவா என்றால் ஒன்றைத் தவிர வேறு எவையும் அவ்வாறில்லை என்பதே யதார்த்தமாகும். இக்கட்சிகளின் கூற்றுக்களும் செயல்களும் முற்றிலும் கோமாளித்தனமாகவே காட்சியளிக்கின்றன.

தமிழ்த் தேசியம் என்று கூறுகின்றார்கள். ஆனால் தேசியத்துக்குத் தேவையான தேசம் அல்லது நாடு அல்லது மாநிலம் அவசியம் என்று கூறக்கூடாது. அவ்வாறு கூறுவது இனவாதம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கூறி வருவது முழுக் கோமாளித்தனம்தானே. ஒற்றையாட்சி அலகின் கீழ் தேசியம் கிடைக்கும் என்பது எவ்வகையானது?

இவர்களின் கோமாளித்தனத்துக்கு அடுத்த எடுத்துக்காட்டு 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலாகும். தமிழினத்தை வெற்றி கொண்டவர் யார் என்பதை வைத்தே அத்தேர்தல் நடைபெற்றது. மகிந்ததானே வெற்றிக்குக் காரணம் என்றார். சரத் பொன்சேகா தான்தான் காரணம் என்றார்.

தமிழர் தரப்பு இரண்டையும் சமதூரத்தில் அல்லவா வைத்திருக்க வேண்டும். அவ்வாறு நடக்கவில்லையே. சரத் பொன்சேகாவை ஆதரித்து மகிந்தவின் எதிர்ப்பை ஏற்படுத்திக் கொண்டனர். மகிந்த கூட்டிய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்ற மறுத்தனர். அது ஒரு காலம் கடத்தும் செயல் என்றனர். 5 ஆண்டுகள் கழிந்தும் இவர்கள் எதனையும் சாதிக்க முயற்சிக்கவில்லையே. ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறலாம். தற்போதைய ஆட்சியாளர்கள் தமிழ்த் தேசியத்தை ஏற்பதாக இல்லையே. தமிழினத்தைப் பிளவுபடுத்தி வெற்றி கண்டவர்தான் என்று ரணில்.

தாயகத்திலிருந்து கதிர் செல்லமுத்து

யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றி 75 விழுக்காடு போரை வெற்றி கண்டவர்தான் என்று சந்திரிகா. போரை வெற்றி கண்டதற்காக பீல்ட் மார்சல் பட்டம் பெறுகிறார் சரத் பொன்சேகா. அப்பட்டத்தை வழங்கி மகிழ்கிறார் இன்றைய ஜனாதிபதியும் அன்றைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான மைத்திரிபால. இவர்களின் ஆட்சியில் எவ்வாறு தமிழ்த் தேசியம் நிலைநாட்டப்படும்.

இது ஒரு கோமாளித்தனமான அரசியல் நடவடிக்கை அல்லவா?

தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களையும் தங்களின் சொந்த மண்ணையும் தேடித் திரிகின்றார்கள். ஆனால் இவர்கள் சிறிலங்காவின் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பற்றிய நீதிமன்ற விசாரணையில் பங்குபற்றுகின்றார்கள். அரசியல் திட்டப் 19ஆவது திருத்தத்தை ஆதரிக்கப் போவதாக அறிக்கை விடுகின்றார்கள். இதனால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. இதில் ஏன் அக்கறை காட்டுகின்றார்கள்? இதுதான் அடுத்த கோமாளித்தனம் என்பது.

இலங்கைத் தீவின் அனைத்து மாகாண சபைகளின் அதிகாரங்களையும் குறைப்பதற்காக 'திவிநெகும' என்று சட்டம்கொண்டு வந்த வாழ்வின் எழுச்சித் திட்டம் என்று மகிந்த கூறினார். ஆனால் வடமாகாண சபையின் அதிகாரங்களை மீறி ஒரு செயலணியைக் கிளிநொச்சியில் அமைக்க உள்ளார் ரணில்.

இதைப் பார்த்துக் கொண்டுதானே இவர்கள் உள்ளார்கள். இது எவ்வகைக் கோமாளித்தனம்.

நாம் ஆட்சியாளர்களுடன் பங்காளிகளாக இருந்த பொழுது நம்மைக் கேலி செய்தார்கள். இன்று இவர்கள் ஆட்சியாளர்களுடன் தானே இருக்கிறார்கள். நாமாவது உருப்படியான திட்டங்களை மக்களுக்காகச் செய்தோம் என்று கூறித் தமது துரோகங்களை மறைத்து எக்காளமிடுகின்றனர் வேறு ஒரு பகுதியினர்.

இவர்களின் கோமாளித்தனங்களையும் மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றனர். அன்று மகிந்தர்; இன்று மைத்திரி சந்திரிகா ரணில் கூட்டு. நாளை எவர் வந்தாலும் அவருடன் கூட்டு.

இவைதான் இவர்களின் கோமாளித்தனம்.

இதைவிட மூன்றாமவரின் கோமாளித்தனம் அதற்கும் மேல். இவர் பலருக்கும் கடிதம் எழுதுவதையே தொழிலாகக் கொண்டுள்ளார். இவர் எழுதும் கடிதங்களை உரியவர்கள் வாசிப்பதில்லை என்பது தெரிந்தும் எழுதுவது ஏமாளித்தனமா? கோமாளித்தனமா?

இவர் பெரிய போராளி தலைமறைவாக இருந்து புரட்சி செய்தவர். செய்த தியாகங்கள் வார்த்தைகளில் அடங்காது. தமிழரசுக் கட்சி என்ன போராட்டம் செய்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியல்லவோ போராடியது என்று வீரம் பேசுகிறார் இவர். இவர் எந்தப் போராட்டத்தில் பங்குபற்றினார். எத்தனை ஆண்டுகள் சிறை சென்றார்? கூற முடியுமா?

ஒரு நாளாவது சிறை சென்றாரா? அல்லது தடுத்து வைக்கப்பட்டாரா?

தமிழர் விடுதலைக் கூட்டணி என்பது தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசும் இணைந்து ஏற்படுத்தியது. இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கும் சில விலக்குகள் அளிக்கப்பட்டன. அது தனித்தே தேர்தலில் போட்டியிட்டது. அமைச்சரவையிலும் போய் சேர்ந்துவிட்டது. இதில் மாமனிதர் குமார் பொன்னம்பலம் வழக்கில் வெற்றியடைந்து காங்கிரசைத் தனியாகக் கொண்டு சென்றுவிட்டார்.

தமிழரசுக் கட்சிதான் தமிழர் விடுதலைக் கூட்டணி அதில் சில தனி நபர்கள் இருந்தனர். அந்தக் கட்சியைச் சரியாக நடத்தத் தெரியாததால் சம்பந்தனால் தமிழர் விடுதலைக் கூட்டணி சங்கரிக் கூட்டணியாகிவிட்டது.

இது தான் கட்சிக்குள் நடந்த பெரிய கோமாளித்தனம்.

தமிழினத்தை வழிநடத்த இத்தகைய கோமாளித்தனங்களிலிருந்தும் ஆக்கிரமிப்பிலிருந்தும் விடுபட மக்கள் விழித்தெழ வேண்டும். காலம் பிந்தினால் விளைவு மிக மோசமானதாவே இருக்கும்.

Dr. Bhaminy Mohendran
Family Dentist
3351 MARKHAM ROAD # 119
MARKHAM & STEELES (RED BUILDING)
416 609 0606
Friendly, gentle and caring environment
பல், முரசு சம்பந்தமான அனைத்து சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்
▶ Free initial consultation
▶ Flexible payment plan
▶ All dental plans accepted

• Gum disease treatment
• Root canal treatment
• Wisdom tooth extraction
• Braces for children & adults
• Dentures – Full & Partial
• White fillings & Teeth whitening
New Patients & Emergencies Welcome
Open 7 days
Saturday-Sunday 10am-7pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

லைன் ஒப் கிரெடிட் எடுக்க, குறைந்த வீதத்தில் மோட்கேஜ் பெற்றுக்கொள்ள, ரீபைனான்ஸ் செய்ய, 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க, பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ் எடுக்க, வீடு வாங்க, விற்க, வாடகைக்கு விட, பெற்றுக்கொள்ள, அனைத்து கடன்களை யும் ஒன்றுபடுத்த மற்றும் எதுவாக இருந்தாலும்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?

மோட்கேஜ் கிளினிக்

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for appointment)

வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00 மணி வரை

WIN UP TO $100,000

Everyone Who Funds A Mortgage With US Ask How !

*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

எமது முகவரி

1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)

சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent /Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240

Corporate Office :
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

$1மில்லியன் டொலருக்கான ஆயுட்காப்புறுதி- மாதாந்தக் கட்டணம்

ஆண் $41.40* பெண் $27.90*

*based on current rates for 10 year term insurance to elite non smoker age 30

- நோய்வாய்ப்பட்டால் அல்லது விபத்துக்குள்ளானால் மாதாந்த வருமானத்துக்கான காப்புறுதி
- கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி
- ஆயுட்காலம் வரை நீடிக்கும் ஆயுட்காப்புறுதி
- மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதி

Life100 INSURANCE & INVESTMENTS INC.

LIFE • CRITICAL ILLNESS
• MEDICAL INSURANCE FOR SUPER VISA
• HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE

உங்களுக்கு உகந்த காப்புறுதித் திட்டங்களை பல்வேறு நிறுவனங்களுடன் ஒப்பிட்டு குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்.

FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS

La Capitale · Desjardins · Manulife Financial · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Assumption Life · Canada Life

MDRT Member of Million Dollar Round Table

Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: 416.918.9771
Business: 416.321.2500

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HOUSE FOR SALE

Midland/ Lawrence

1 Bedroom, 1Washroom

One Bedroom Condo, Prime Location & Spacious Rooms.Amenities Include Indoor Pool And Sauna..... $129,800

Midland & Danforth Rd

2 Bedrooms Condo

2 Bedroom Tridel-Built Condo, In A Gated Area With Security, Walk To Park, Nature Trails, Subway, Ttc, Great Shopping, School.... $204,800

Midland/ Lawrence

2 Bedrooms, 2 Washrooms

Recently Renovated Condo, Bright Corner Unit, Open Concept Living And Dining Room, 2 Bedroom, Beautiful Unobstructed North West ... $214,900

NELSON/Mclevin Ave

Bedrooms 2 Washrooms 2

2 Bdrm,2 Bath Split Plan Layout Open Concept Living & Dining -Upgraded Engineered Wood Flr.Thoughtfully $199,900

$649,900 **Warden/Lawrence**

3+3 Bedrooms, 3 Washrooms, 2 Kitchens

Renovated Beautiful All Brick Bungalow In A Quiet & Safe Residential Neighborhood. Steps To Ttc,Major Hwys,Shops & Amenities.Separate Entrance To The Finished Basement.....

$928,800 **Markham/Steeles**

5 + 1 Bedrooms, 4 Washrooms

5 + 1 Bdrm Detached Home In A Quiet Staines & Steeles Neighborhood. Thousands Spent In Upgrades,Customized Kitchen W/Hidden Spice Racks. Pull Out Pantry,Maple Cabinetry,

✓ Buy ✓ Sell ✓ Rent

Residential - Commercial

416 897 2233

Kumar ANNAMALAI Realtor

www.MrHome.info

Virtual Tour

இலங்கைச் செய்திகள்

19வது திருத்தத்தை எதிர்த்தவர்கள் மீது சுதந்திரக் கட்சி ஒழுக்காற்று விசாரணை

சிறிலங்கா நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த வாக்கெடுப்பில் 19வது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவளிக்காத தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளது.

19வது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவளிப்பதென, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுவில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அந்த தீர்மானத்துக்கு முரணாக, 19வது திருத்தச்சட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அட்மிரல் சரத் வீரசேகர, அதற்கு எதிராக வாக்களித்திருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், இவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது. அட்மிரல் சரத் வீரசேகரவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமை கடுமையான எச்சரிக்கையை விடுக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, 19வது திருத்தச்சட்ட வாக்கெடுப்புக்கு முன்னதாக, வெளிநாடு சென்ற முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறித்தும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

முன்னாள் பிரதமர்கள் டி.எம்.ஜெயரட்ன, ரட்ணசிறி விக்கிரமநாயக்க உள்ளிட்டோரும், வாக்கெடுப்பு நாளன்று நாடாளுமன்றத்துக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

'போர் தவிர்ப்பு வலயம்' ஆவணப்படம் சிறிலங்கா அதிபருக்கு கையளிப்பு

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களை வெளிப்படுத்தும், போர் தவிர்ப்பு வலயம், ஆவணப்படத்தின் சிங்கள மொழியாக்கப் பிரதியொன்று, சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, அந்த ஆவணப்படத்தை தயாரித்த கலும் மக்ரே தெரிவித்துள்ளார்.

லண்டனில் உள்ள சிறிலங்கா தூதரகத்தில், சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டம் ஒன்றில், சிறிலங்கா அதிபருக்கான இந்த ஆவணப்படப் பிரதியை கலும் மக்ரே, அதிகாரிகளிடம், ஒப்படைத்தார்.

இந்த ஆவணப்படப் பிரதியுடன், சிறிலங்கா அதிபருக்கான செய்தி ஒன்றையும், கலும் மக்ரே அனுப்பி வைத்துள்ளார்.

"உண்மை வெளியே வருகிறது. அந்த செயல்முறைகளை நீங்கள் தடுக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

உண்மைகளை வெளிக்கொண்டு வரும் செயல்முறைகளை ஊக்குவியுங்கள். உண்மையின் பக்கத்தில் நில்லுங்கள்" என்று சிறிலங்கா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் கலும் மக்ரே குறிப்பிட்டுள்ளார்.

சம்பூர் மின் நிலையத் திட்டத்துக்கு சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்பு

கிழக்கு மாகாணத்தில் சம்பூர் பிரதேசத்தில் இந்திய உதவியுடன் அமையவுள்ள அனல் மின் உற்பத்தி நிலையத்திற்கு சுற்றுசூழல் பாதுகாப்பு அமைப்புகளிடமிருந்து பலவான எதிர்ப்புகள் தோன்றியுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வியாழக்கிழமை மூதூர் நாவலடி சந்தியில் ஆர்ப்பாட்டமொன்றும் நடைபெற்றது.

கடந்த அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் இலங்கை - இந்தியா இரு நாடுகளுக்குமிடையில் இது தொடர்பிலான ஒப்பந்தமொன்றும் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மூதூர் பிரதேசத்திலுள்ள நாவலடி சந்தியில் நடைபெற்ற அனல் மின் நிலையத்திற்கான எதிர்ப்பு ஆர்பாட்டத்தில் பசுமை திருகோணமலை, மூதூர் பீஸ் ஹோம் உட்பட சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்பு உட்பட பல்வேறு அமைப்புகள் கலந்து கொண்டன.

மகிந்தவின் கூற்று நகைப்பிற்குரியது

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கூற்று நகைப்பிற்குரியது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

"19ம் திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதி இரண்டு தடவைக்கு மேல் பதவி வகிக்க முடியாது என வரையறுக்கப்பட்டது, நான் மீண்டும் பதவிக்கு வருவேன் என்ற அச்சத்தினாலேயே" என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் இந்தக் கூற்று நகைப்பிற்குரியது என ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மக்கள் கோரி வந்த 19ம் திருத்தச் சட்டத்திற்கு துரோகம் இழைக்க வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதியிடம் கோருகின்றேன்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

எனவே முன்னாள் ஜனாதிபதியின் கூற்று நகைப்பிற்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இத்தனைக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HomeLife Champions Realty Inc., Brokerage*

206-8130 Sheppard Ave E, Toronto, ON, M1B 3W3

GRAND OPENING

Under New Management

Saturday May 09th, 2015

11:00am to 4:00pm

As a thank you for helping us serve our community,

we cordially invite you to join us in celebrating

28 years of 5 Star Service

Utayan Ponnuthurai

Broker of Record Bsc(Hons)

D: 416-505-2120

B: 416-281 8090

HOMELIFE HIGHER STANDARDS

*Independently Owned & Operated

Free Admission

Free BBQ and Drinks

Hourly Draw to Win a Prize at our Sweepstake

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நறுக்கென

ஐ.நா நடத்திய விசாரணை அறிக்கை ஆச்சரியங்களை உள்ளடக்கியதாக இருக்கும்

சிறிலங்காவில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் நடத்திய விசாரணை அறிக்கை ஆச்சரியங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் தெரிவித்துள்ளார்.

இந்த தகவலை, சிறிலங்காவுக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாரணை அறிக்கை வரும் செப்ரெம்பர் மாதம், வெளியிடப்படும் என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் தமக்கு உறுதியளித்திருப்பதாகவும், எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பதிவுடன் அவர், ஐ.நா மனித உரிமை ஆணையாளருடன் எடுத்துக் கொண்ட படத்தையும் எரிக் சொல்ஹெய்ம் வெளியிட்டுள்ளார்.

எனினும், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் எங்கு, எப்போது இந்த வாக்குறுதியை வழங்கினார் என்ற விபரங்கள் எதையும் எரிக் சொல்ஹெய்ம் வெளியிடவில்லை.

யாருக்கு ஆச்சரியங்களைக் கொடுக்கும் என்பதே முக்கியம்...!

19வது திருத்தம் நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்தும்!

சம்பந்தன்

அரசியலமைப்புச் சட்டத்தின் 19வது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம் நாட்டில் ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் ஸ்தாபிக்கும் சந்தர்ப்பம் உருவாகியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று 19வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இந்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைகின்றது.

நாடாளுமன்ற அதிகாரங்களை கவனத்தில் கொள்ளாது கட்சி மாறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுத்து, மீண்டும் நாடாளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் சம்பந்தன் கூறினார்.

ஐயா சம்மந்தர் முதலில் கூட்டமைப்புக்குள் ஜனநாயகத்தை ஏற்படுத்துங்க...

மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட எண்ணமில்லை

மகிந்த

தான் மீண்டும் ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தெதிகம விகாரையில் இடம்பெற்ற பூஜைகளில் கலந்துக்கொண்ட பின்னரான மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு விடுவேன் என நினைத்து புதிய சட்டங்களை உருவாக்குகின்றார்கள்.

எனினும் நான் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

மகிந்தவுக்கு எண்ணமுள்ளது என்பது தெரிகிறது... அது நல்லாட்சியில் தான் தங்கியுள்ளது...!

தந்தை செல்வா நினைவுப் பேருரையில் சந்திரிகா

சிறிலங்கா போரில் வெற்றி பெற்றபோதும், அமைதியை இன்னமும் வெற்றி கொள்ளவில்லை என்று சிறிலங்காவின் முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட, கட்சியின் நிறுவுனரான எஸ்.ஜே.வி.செல்வநாயகம், நினைவுப் பேருரையை நிகழ்த்திய போதே, சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது உரையில், "தந்தை செல்வா அவர்களை எனக்குத் தெரியும். எனது தந்தையாருடன் வந்து பேசியபோது அவரை நான் சந்தித்திருக்கிறேன்.

டாக்டர் நாகநாதனுடைய கடைசி மகள் எனது நண்பியாகவிருந்த காரணத்தினாலே அங்கே நேரம் செலவிடுகின்ற போது, சில வேளை அங்கேயும் அவரை சந்தித்திருக்கின்றேன். அவரையொரு நேர்மையான அரசியல்வாதியென நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம்." என சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டார்.

தந்தை செல்வாவே உங்களுக்காக நினைவுப்பேருரை செய்ய. ஒரு தமிழனுக்கும் தகுதி இல்லையா...? செம்மணிப் புகழ் சந்திரிக்காவுக்குத்தான் தகுதி உண்டா?

ரணிலுக்கு பாராளுமன்றத்தில் ஜால்ரா போடுகிறது கூட்டமைப்பு!

19வது திருத்த சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பொழுது அனைவரும் அணிதிரண்டு வாக்களித்தோம். வாக்களிப்பின் பின் திருத்தங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது திருத்த பிரதிகளில் சிங்களமும் ஆங்கிலமும் மட்டுமே இருந்தன.

இதனை சபையில் சுட்டிக்காட்டிய பொழுது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரக் குறைவான வார்த்தைகளை எனக்கு எதிராக பிரயோகித்ததன் மூலம் தமிழ் மக்களின் மொழி உரிமைகளுக்கு எதிராக செயல்படுகின்றார் என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கமந்திரன் ஆங்கிலத்தில் இருப்பதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று என்னிடம் வேண்டுகோள் விடுத்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு தேவைப்படும் பொழுது அங்கே தமிழ் இருக்க வேண்டும் பாராளுமன்ற நேரம் தாமதமாகிவிடும் என்ற எண்ணத்தில் அங்கே தமிழில் பிரதி தேவையில்லை என்று சொல்கின்றார்கள். இது தான் தமிழ் தேசியமா?

ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஜால்ரா போடுவதை தான் இன்று பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு செய்து வருகின்றது.

அண்ணை பிரபா கமந்திரனுக்கும் தமிழ் தேசியத்துக்கும் சம்பந்தம் இல்லை... கூட்டமைப்பு ரணிலுடன் சிங்கக் கொடி தூக்கி ஜால்ரா போட்டது தெரியாதா? அதேபோல் நீங்களும் மகிந்தவுக்கு ஜால்ரா போட்டதும் மக்களுக்குத் தெரியும்...

கனவாகிப் போன ஜனாதிபதிப் பதவி

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தாம் வெற்றி பெறுவது உறுதியென்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உறுதியாக நம்பியிருந்தார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தேர்தல் வாக்களிப்புக்கள் முடிவடைந்த நிலையில் இரவு வேளையில் அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி, மகிந்தவை தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டார். இதன்போது தேர்தலில் தோல்வியடைந்தால் அதிகாரத்தை அமைதியாக கையளிப்பது குறித்து கெரி வினவினார்.

இதன்போது பதில் வழங்கிய மகிந்த ராஜபக்ச, "தேர்தல் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. தாம் வெற்றியில் நம்பிக்கையாக இருக்கிறேன். எனவே வெற்றியின் பின்னர் உங்களுடன் தொடர்புகொள்கிறேன்" என்று உறுதியாகக் கூறியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பாவம் மகிந்த. தான் அமெரிக்க ராஜங்க செயலாளருடன் கதைத்துக்கொண்டிருக்கிறேன் என்பதை மறந்துவிட்டார் போலும்....

கோத்தபாயவைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் பரிந்துரை?

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் உட்பட ஐந்து பேரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சட்டமா அதிபர் இரகசியப் பொலிசாருக்கு பரிந்துரை செய்துள்ளதாக அறிய வருகின்றது.

சட்டமா அதிபரின் பரிந்துரைக்கமைய முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, அவன்கார்ட் கப்பல் சேவை தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி, பணிப்பாளர் மஞ்சுளகுமார யாப்பா, முன்னாள் மேலதிக பாதுகாப்பு செயலாளர் திருமதி ஜெயரட்ன, ரட்ன லங்கா ஆயுதக் களஞ்சிய தலைவர் மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகியோரையே கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

முறையான அனுமதியற்ற ஆயுதக் களஞ்சியம், ஆயுதக் கப்பல் களஞ்சியம் பரிவர்த்தனை, ஆயுதக் குவிப்பு ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

ஆனாலும் இவற்றை அரச தரப்பு முற்று முழுதாக உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கோத்தா எத்தனை பேரை சிறையில் போட்டிருப்பீங்க... இப்ப சிறையில் போடுவாங்களா இல்லையா என்று யோசிக்கிறீங்க....

உலகத் தமிழினத்தின் உண்மைத்தளம்
www.worldtamils.com
கனடா உலகத்தமிழர் பத்திரிகையில் வெளிவரும் உங்கள் உறவுகளின் பிறந்தநாள் வாழ்த்து, மரண அறிவித்தல்கள் என்பனவை இணையத்தளத்தில் இலவசமாக வெளியிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CROWN WOODS

KITCHEN CABINET MANUFACTURERS

• Natural Granite, Quartz Countertops

Thermofoil Doors Manufactures
ஒப்பந்தகாரருக்கு விசேட கழிவு உண்டு!

Tel: 416 291 4800 | Fax: 416 291 5200

02-1200 Tapscott Road, Toronto ON M1X 1M5 | crownwoods@live.com | www.crownwoods.ca

Specializing in All Your Financial Needs

SUPER VISA Insurance

Do you want to invite your parents or some one you love Please call

உங்கள் பெற்றோர், மற்றும் அன்புக்குரியவர்களை *SUPPER VISA* உடன் *CANADA* வுக்கு அழைக்க என்னை அழையுங்கள்

VISA DECLINED
100% REFUNDABLE

Mortgages

Through all major Banks

1st, 2nd, 3rd Mortgage

Refinance & Ect

FSCO # 1211 Agent # M11002358

VISITORS TO CANADA MEDICAL INSURANCE & MEDICAL INSURANCE FOR NEW IMMIGRANTS

5 Years VRM: 2.20 %

5 Years Fixed: 2.59%

Life Insurance

Life Insurance all kinds
Critical Illness Insurance
Mortgage Insurance

Non Medical Insurance up to 85 years

85 வயது வரை மருத்துவப் பரிசோதனை அற்ற காப்புறுதி

RRSP

- With Loan & Investements

RESP

- With Maximum Flexibility

RATES FOR LIFE INSURANCE - TERM -10 (preferred non smokers)*

AGE	for $ 250,000		for $ 500,000	
	FEMALE	MALE	FEMALE	MALE
30	9.68	12.38	13.05	18.45
35	10.13	13.15	15.03	18.54
40	13.05	15.75	18.99	23.79
45	16.45	22.05	22.77	33.99
50	22.95	31.73	36.63	52.38

* CONDITIONS APPLY * RATES ARE SUBJECT TO CHANGE

Jeeva Samithamby

Insurance Broker

416-646-8860

416-294-4855

உங்கள் பிள்ளைகளின் உயர் கல்விக்காக அரசாங்கம் வழங்கும் Grant $9200 வரை பெறலாம்

RBC Insurance | BMO | INDUSTRIAL ALLIANCE | Manulife Financial | Canada Life | Equitable Life of Canada | Empire Life | Foresters | Canada Protection Plan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கட்டுரை

தமிழரசுக் கட்சியின் மௌனம் கலையட்டும்

மாவீரரின் பெற்றோர் ஒருவரின் மனக்குமுறல்

தமிழரசுக் கட்சி தொடர்பாக மாவீரர் குடும்பங்களின் பெற்றோரின் உணர்வலைகளை அவர்களில் ஒருவனான நான் எமது மக்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

சிறிலங்காப் பாராளுமன்றில் நிகழ்த்திய தமது கடைசி உரையில் தந்தை செல்வா அவர்கள் 'எமது அடுத்த சந்ததி எங்களைப் போல் உங்களோடு பேசிக்கொண்டிருக்காது' என்று ஆளும் சிங்களத் தரப்புக்குச் சில விடயங்களைச் சுட்டிக்காட்டினார். தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதில் அரசுத் தரப்பு தவறி வருவதால் எதிர்காலத்தில் இரு இனங்களுக்குமிடையில் இரத்தக்களரி உருவாகும் என்பதையே அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டார்.

ஆயுதப் போராட்டத்தின் முன்னோடிகளாக விளங்கிய பலரின் பின்னணியைப் பார்த்தால் அவர்கள் தமிழரசுக் கட்சியின் வழித்தோன்றல்களாகவே இருப்பர்.

தலைவர் பிரபாகரனின் பெரிய தந்தையார் சண்முகம்பிள்ளை ஞானமூர்த்தி ஐயா அவர்கள் தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர். தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியதில் அவருக்கும் மிகப்பெரிய பங்குண்டு.

கிட்டுவின் தாயார் திருமதி. ராஜலட்சுமி சதாசிவம் யாழ் கச்சேரிக்கு முன்பாக நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் முன்னணியில் திகழ்ந்தவர். பருத்தித்துறை எம்.பி துரைரட்ணத்தின் மகன் மேஜர் கமல் (துரைரட்ணம் பரமேஸ்வரராஜா) 1987 யூலை 5 நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்தினார்.



பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணத்தின் மகன் ரஞ்சன் கொக்குளாய் இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் லெப் சைமனாக வீரச்சாவெய்தினார். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் சகோதரர்கள் சிவஜெயம், சுதர்சன் ஆகியோர் அவருடன் கைதுசெய்யப்பட்டு சிறையில் வாடினர். 1984ல் அவர்களது சகோதரி சிவமலரும் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலம் துன்பங்களை அனுபவித்தவர். இவர்களில் முதலில் சிவஜெயமும் பின்னாளில் காசி ஆனந்தனும் விடுதலைப் புலிகளின் முழுநேர உறுப்பினர்களாயினர்.

தமிழ்த் தேசிய உணர்வை விதைத்ததில் சுதந்திரன் பத்திரிகைக்கும் காசி ஆனந்தனுக்கும் தலையாய இடம் உண்டு. தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கூட்டங்களில் திருமதி. மங்கையற்கரசி, அமிர்தலிங்கம் போன்றோர் அக்காலத்தில் இசை நாடாக்களில் வெளிவந்திராத காசி ஆனந்தனின் பாடல்களையே பாடுவதுண்டு. இவரது பாடல்களே அம்பகாமம் முதல் விடுதலைப் புலிகளின் அனைத்துப் பயிற்சிப் பாசறைகளிலும் ஒலித்தன. குறிப்பாக மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வளர்ச்சியில் முன்னாள் தமிழ் இளைஞர் பேரவை தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான காசி ஆனந்தனுக்குப் பெரும்பங்குண்டு.

தமிழ்த் தேசிய உணர்வுள்ள இளைஞர்களாக காசி ஆனந்தனால் இனங்காணப்பட்ட இளைஞர்கள் பின்னாளில் அவரது தம்பி சிவஜெயத்தால் தொடர்புகொள்ளப்பட்டு இயக்கத்தில் இணைக்கப்பட்டனர்.

சிறிமாவின் ஆட்சிக் காலத்தில் தீவிரவாத எண்ணம் கொண்டவர்களாக இனங்காணப்பட்ட 52 இளைஞர்கள் தொடர்ச்சியாகத் தடுத்துவைக்கப்பட்டனர். இறுதியில் இவர்கள் ஒரேயடியாக விடுவிக்கப்பட்டனர். இவர்கள் பயணம் செய்த புகையிரதம் இவர்களை வரவேற்கச்சென்ற தமிழ் இளைஞர்களால் நிரம்பி வழிந்தது.

யாழ் புகையிரத நிலையத்தில் வந்திறங்கிய காசி ஆனந்தன் "எனது வெள்ளைச் சட்டை சிவப்பு நிறமாக மாறிவிட்டது" என்று கூறினார். அந்தளவுக்கு இளைஞர்கள் அவருக்கு இரத்தத்திலகமிட்டனர்.

இவர்கள் எல்லோருமே தமிழரசுக் கட்சியின் வழித்தோன்றல்களே. இவர்களில் குறிப்பிட்ட தொகையினர் தீவிரவாதிகளாகவும் பின்னாளில் உருவாகினர். வேறொரு இடத்தில் காசி ஆனந்தனுக்கு இரத்தப்பொட்டு வைத்த இளைஞர் பின்னாளில் புலிகளின் நிதி ஆயுதங்கள் மற்றும் தளத்துக்கும் பொறுப்பாளராக உருவானார். அவரே கப்டன் பண்டிதர் (சின்னத்துரை ரவீந்திரன்). ஏன் பொட்டம்மான் என்று அறியப்பட்ட சண்முகநாதன் சிவசங்கர் என்பவர் தமிழ் எம்.பி வெற்றிவேலு யோகேஸ்வரனுக்கு இரத்தப்பொட்டு வைத்தவர் தான். அதனால் தான் அவருக்கு "பொட்டு அம்மான்" என்று காரணப்பெயர் கிடைத்தது.

இந்த மிரட்டல்கள் தேவனுக்கு கடும் சினத்தையும் அதேவேளை படையினர் மீது நகைப்பையும் ஏற்படுத்தியது. எத்தனை களங்களுள் படையினரைச் சின்னாபின்னமாக்கி, சடலங்கள் ஆக்கிய அந்தச் சண்டைக்காரனுக்கு இந்த மிரட்டல்கள் எம்மாத்திரம்? கையில் ஆயுதம் இல்லாமல் அவன் வீட்டில் இருந்தாலும் எத்தனை களங்களைக் கண்டு எத்தனை போராளிகளோடு உறவாடி அந்த நினைவுகளை மனசுக்குள் சுமந்த அவன் முடிவெடுக்கின்றான். எந்த நிலைவரினும் படையினரிடம் மண்டியிடுவதில்லையென்று. அன்றிலிருந்து தேவனின் தலைமறைவு வாழ்க்கை தொடங்குகின்றது.

அப்போது அவனிற்கும் இயக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. அவன் தலைமறைவாகினாலும் அவனிடம் தற்பாதுகாப்பிற்கு ஆயுதமும் இருக்கவில்லை.

தொடக்கத்தில் அவன் வைத்திருந்தது கத்தி ஒன்றைத் தான். போராளிகளுடன் தொடர்பை மேற்கொள்ள அவன் முயற்சித்த போதும் தொடர்புகள் கிடைக்கவில்லை. தேவன் ஆயுதம் ஒன்று கிடைக்குமா என்று தேடிக்கொண்டிருந்தான். அவனது முயற்சிக்கு ஒரு 'சொட்கண்' கிடைத்தது. அதை வைத்துக்கொண்டு படையினர் மீது தாக்குதலை மேற்கொண்டு ஆயுதம் ஒன்றைக் கைப்பற்ற அவன் முயற்சித்துக் கொண்டிருந்த போது போராளிகளின் தொடர்பு அவனுக்குக் கிடைத்தது.

தேவன் தலைமறைவானதுமே சிங்களப் படையினர் அவனைத் தேடினார்கள். தேவனின் வீட்டிற்குச் சென்று அவனது மனைவியை மிரட்டினார்கள். இராணுவத்தின் தொல்லை அதிகரித்ததால் அவளும் அவளது குழந்தையும் தேவனுடன் சேர்ந்து தலைமறைவாகினார்கள். ஒரு குழந்தையுடன் தலைமறைவு வாழ்க்கை என்பது எத்தனை கடினமானது. ஒவ்வொரு இரவுகளும் அவர்களுக்கு நெருக்கடியைக் கொடுத்தன.

ஆனால் அந்த நெருக்கடிகளுக்குள்ளாலும் தேவனின் திட்டங்களிற்கு அவள் ஒத்துழைப்புக் கொடுத்தாள். இந்தக் கடினங்களைத் தாங்கியபடி தேவன் நடாத்தவிருக்கும் தாக்குதலுக்கு அவனது துணைவியும் குழந்தையும் வேவு பார்த்துக்கொண்டிருந்தனர்.

அவள் குழந்தையைத் தூக்கிக்கொண்டு படைக் காப்பரண்கள் அமைந்திருக்கும் இடம், அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள், அங்கு நிலைகொண்டுள்ள படையாட்களின் எண்ணிக்கை போன்ற விடயங்களை அவதானித்து வந்து தேவனிற்குக் கொடுப்பாள். போராளிகள் சேர்த்த வேவுத் தகவல்களோடு இந்தத் தகவல்கள் சரிபார்க்கப்பட்டு அதன் பின் தாக்குதல் நடக்கும்.

இரணைஇலுப்பைக் குளத்தில் தேவனால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு இப்படித்தான் வேவு பார்க்கப்பட்டது. தாக்குதல் நடைபெறவிருந்த அன்றைய நாள் காலையும், தேவனின் மனைவி வேவு பார்த்துக்கொடுத்தாள். வேவுத் தகவல்களின்படி அங்கு காப்பரண் அமைத்திருந்த சிங்களப் படைகள் மீது அதிரடித்தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. திட்டத்தின்படி தாக்குதல் வெற்றிகரமாக நடந்துமுடிந்தது. ஐந்து படையினர் கொல்லப்பட்டனர். நான்கு துப்பாக்கிகளும் இதர பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

> தன் தாய்நாட்டிற்காகத் தான் மட்டுமல்லாது போராளி அல்லாத தன் மனைவியோடும், குழந்தையோடும் தேவன் அதிகம் சாதித்த மாவீரன். களத்தில் சண்டையிடுவதற்கு குடும்பம் ஒரு சுமையல்ல: அது துணையென்று நிரூபித்தவன் தேவன்.

தேவன் இப்படி பல நெருக்கடிகளைச் சந்தித்தான். அவனது களவாழ்விற்குள் ஒரு பொழுதில் அரவம் தீண்டி கடும் உபாதைக்கு உட்பட்டான். இனி தப்பமுடியாது என்று எண்ணும் அளவிற்கு நிலைமை விபரீதமாக இருந்தது. தேவனிற்குப் பாம்பு கடித்த செய்தி படையினரின் காதுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. தேவன் இனி செத்துவிடுவான் என மகிழ்ச்சிக்கொண்டாட்டம் போட்டார்கள்.

ஆனால் தேவன் தப்பிவிட்டான்.

'உங்கட சேவைக்காலம் காணும்தானே' என்று கேட்டால் 'நான் சண்டைபிடித்து வீரச்சாவுதான் அடையவேண்டும் அதுதான் என்ர விருப்பம்' என்று சொல்லுவான். 'அப்பிடி நடக்காட்டி என்ர பிள்ளையள் வளர்ந்த பிறகு நான் அவயளுக்குச் சண்டை பழக்கி அவையும் சண்டை பிடிக்கத் தொடங்கினாத்தான் நான் சண்டையில இருந்து ஓய்வு பெறலாம்' என்று சண்டையைப் பற்றியே கதைத்துக் கொண்டிருப்பான்.

இந்திய படைக் காலத்திலிருந்து இற்றை வரை பல சண்டைக்களங்களைத் தேவன் சந்தித்திருக்கின்றான். படை நகர்வு முறியடிப்புக்கள், பதுங்கித் தாக்குதல்கள், காவலரண் மீது தாக்குதல்கள், தேச விரோதிகள் மீதான தாக்குதல், கடற்புலிகள் அணியில் சிறிதுகாலம் இருந்தபோது கடற்சண்டை என இதுவரை 55இற்கும் மேற்பட்ட களங்களைச் சந்தித்துச் சாதனை படைத்தவன் தேவன். இந்த நீண்ட களச் சாதனைகளின்போது பலமுறை அவன் விழுப்புண் அடைந்திருக்கின்றான். அவனது உடலெங்கும் காயத்தழும்புகள் சாட்சியமாய் இருக்கிறது. தலையில், தோள்மூட்டில், நெஞ்சுப் பகுதியில், மூச்சுப் பையில், தொடையில், காலில் என உடலின் பல்வேறு பகுதிகளிலும் விழுப்புண் தழும்புகள். இந்த விழுப்புண்களை அவன் ஒரு பொருட்டாகக் கருதியதில்லை.

தன் தாய்நாட்டிற்காகத் தான் மட்டுமல்லாது போராளி அல்லாத தன் மனைவியோடும், குழந்தையோடும் தேவன் அதிகம் சாதித்த மாவீரன். ஒரு போர் வீரன். களத்தில் சண்டையிடுவதற்கு குடும்பம் ஒரு சுமையல்ல. அது துணையென்று நிரூபித்தவன் தேவன்.

இறுதி நாட்களில் அவன் மணலாறு மாவட்டத்தில் பகுதிப் பொறுப்பாளராகக் கடமையாற்றினான். தன் பணியைச் சரிவர நிறைவேற்றுவதில் இங்கும் கடுமையாய் உழைத்தான். இந்த வீரன்தான் 29.03.2007 அன்று மணலாற்றுப் பகுதியில் எதிரியுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வித்தாகிப் போனான். வித்துக்கள் புது வீரியத்தோடு முளைவிடும். அந்த வீரியம் இந்தத் தேசத்தை எப்போதும் காத்து நிற்கும்.

LOAD KING
Everywhere... you want to be

We are looking for experienced AZ HWY Drivers and HWY Owner Operators for USA-Canada Runs - Dedicated and Open Board

Highway Drivers and Owner Operators:
- Guaranteed 12,000 Miles (Empty or Loaded) + Health Benefits (Dental, Drug, Life Insurance & More)
- No Pickups and Deliveries in Ontario
- Paid Insurance, Plates, and Tolls
- Semi-Monthly Settlements
- Brand New 53 Air-Ride Equipped Dry Vans
- Long/Short Hauls, Great Lanes & Steady Work
- Driver Friendly General Freight
- Safety-Minded and Open Door Environment
- Stable Customers in Canada/US
- Paid Drug Testing
- Fuel Card and TCH Check system
- Full Loads
- No Start-up Cost

REQUIREMENTS:
- 2 Years on Road Experience
- Clean Abstract and CVOR
- Criminal Record Search or FAST Approved
- Positive and Professional Experience

Ph: 905-794-2040 • Fax: 905-794-2035
Email: mj@loadkingtransport.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் கனவு இல்லத்தை அடைய இன்றே அழையுங்கள்

PRASATH SATHIYANATHAN
Sales Representative
Cell: 647-296-7932
www.highspeedsales.ca

உங்கள் சேமிப்பின் அடையாளம்
சிறந்ததோர் இல்லம்
அழையுங்கள்

GOLD AWARD 2009 | GOLD AWARD 2010 | DIAMOND AWARD 2011 | GOLD AWARD 2012 | GOLD AWARD 2013 | DIAMOND AWARD 2014

HomeLife/FutureRealty Inc., Brokerage*
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229
* Independently Owned and Operated. *Not intended to solicit buyers or sellers currently under representation agreement

WE PROVIDE MORTGAGE SOLUTIONS FOR EVERYONE!

LOW RATES STARTS AT
2.59% FOR 5 YEAR FIXED*
2.05% FOR 5 YEAR VARIABLE*
*OAC

- Purchase
- Refinance
- Renewals / Switches
- 1st, 2nd, 3rd Mortgage
- Equity Lines of Credit
- Bad Credit / No Credit
- Bankruptcy/ Consumer Proposals
- Power of Sales
- Tax & Mortgage Arrears



Visit us at www.lenderhub.ca

Ram Krish
Mortgage Agent - Mortgage Alliance
Call Now : 416-427-5555
Lic # M08002015

MORTGAGE ALLIANCE
10 Milner Business Court, Suite 401
Scarborough, ON M1B 3C6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டதை வரவேற்கிறது அமெரிக்கா

சிறிலங்காவில் அதிபரின் அதிகாரங்களைக் குறைக்கும் வகையில், மேற்கொள்ளப்பட்டுள்ள 19வது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

வாசிங்டனில் புதன்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கப் பதில் பேச்சாளர் மேரி ஹாப் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவின் அதிபரின் பதவிக்காலம் வரையறுப்பது உள்ளிட்ட சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதையிட்டு அமெரிக்கா திருப்தி கொள்கிறதா என்று செய்தியாளர் ஒருவர் கேட்டபோது, "சிறிலங்கா அரசாங்கத்தின் உள்நாட்டு சீர்திருத்த நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக அதிபரின் அதிகாரங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை நிச்சயமாக நாம் வரவேற்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

○○○○○○○○○○○○○○○

ஜோன் கெரியின் பாதுகாப்புக்காக 200 படை அதிகாரிகள்

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியின் பாதுகாப்புக்காக, அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் 200 பேர், 40 மோப்ப நாய்கள் சகிதம், சிறிலங்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி வரும், சனிக்கிழமை சிறிலங்காவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இதனையொட்டி அவருக்கு பாதுகாப்பு வழங்குவது மற்றும் அவரது பாதுகாப்புக்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காகவே, அமெரிக்க படை அதிகாரிகள், மோப்ப நாய்கள் சகிதம், கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஏற்கனவே ஜோன் கெரி பயணம் செய்யும் பாதைகள், அவர் செல்லும் இடங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும், கண்காணிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

அமெரிக்க அதிபர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது வழங்கப்படும் பாதுகாப்பை விடவும், அமெரிக்க இராஜாங்கச் செயலருக்கு சிறிலங்காவில் அதிகமான பாதுகாப்பு வழங்க அமெரிக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இலவச திருமண சேவை
மார்க்கம் சந்திரன்: 416 844 7453
22 Holloway Road, Markham, ON. L3S 4P4

இலங்கைச் செய்திகள்

19வது சட்டத்தால் நாமலுக்கும் கோத்தாவுக்கும் சங்கடம்

2021ம் ஆண்டு நடைபெறும் சிறிலங்காவின் அடுத்த அதிபர் தேர்தலில், ராஜபக்ச குடும்பத்தின் வாரிசான நாமல் ராஜபக்ச போட்டியிடும் வாய்ப்பை இழந்துள்ளார். 19வது திருத்தச் சட்டத்தின் மூலம், சிறிலங்கா அதிபர் தேர்தலில், போட்டியிடும் வேட்பாளரின் ஆகக்குறைந்த வயதெல்லை, 35 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர், 32 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் அதிபர் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற நிலை இருந்தது.

ஆனால், 19வது திருத்தச்சட்டத்தின் மூலம், இது 35 வயதாக உயர்த்தப்பட்டுள்ளதால், வரும் 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறும் அடுத்த அதிபர் தேர்தலில் நாமல் ராஜபக்சவினால் போட்டியிட முடியாத நிலை ஏற்படும்.

2021ம் ஆண்டு அதிபர் தேர்தலில் நாமல் ராஜபக்சவைப் போட்டியிட வைக்கும் திட்டத்துடனேயே, மகிந்த ராஜபக்ச தனது அரசியல் நகர்வுகளை மேற்கொண்டிருந்தார்.

ஆனால், 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் அடுத்த அதிபர் தேர்தல் நடத்தப்படும் போது, நாமல் ராஜபக்ச 35 வயதைப் பூர்த்தி செய்யமாட்டார்.

1986ம் ஆண்டு ஏப்ரல் 10ம் நாள் பிறந்த நாமல் ராஜபக்சவினால், அடுத்த அதிபர் தேர்தல் முடிந்து மூன்று மாதங்களின் பின்னர்தான், அதிபர் வேட்பாளராகப் போட்டியிடும் தகைமையைப் பெற முடியும்.

இதனால், அவர் அடுத்த தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 19வது திருத்தச்சட்டத்தில், அதிபர் வேட்பாளரின் குறைந்தபட்ச வயதெல்லையை அதிகரித்தமைக்கு, நாமலைப் போட்டியிட முடியாமல் தடுப்பதே முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

அதேவேளையில், இதன்மூலம் சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்சவின் அரசியல் எதிர்காலமும் சூனியமாக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டிருந்த அவருக்கு, 19வது திருத்தச்சட்டம், தேர்தலில் போட்டியிட முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள், சிறிலங்காவில் எந்த தேர்தல்களிலும் போட்டியிடத் தடை விதிக்கின்றது இச்சட்டம்.

கோத்தாபய ராஜபக்ச சிறிலங்காவில் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ளவர் என்பதால், அவர் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், அரசியல் கட்சியின் ஊடாகவோ அல்லது சுயேட்சையாகவோ போட்டியிட முடியாது.

அவரை நாடாளுமன்றத் தேர்தலில் களமிறக்குவதற்கு, சிங்கள கடும்போக்குவாதக் குழுக்கள் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டிருந்தன.

அதேவேளை, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 19வது திருத்தச்சட்டம் தடையை விதிக்கவில்லை என்றும், சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். பசில் ராஜபக்ச அமெரிக்க குடியுரிமை கொண்டவர் அல்ல என்றும், வதிவிட உரிமையை (கிறீன் காட்) மட்டுமே அவர் கொண்டவர் என்பதால் தேர்தலில் போட்டியிடத் தடையில்லை.

போர்க்குற்ற, மனித உரிமை மீறல் கரிசனைகளை சிறிலங்காவிடம் வெளிப்படுத்துவார் ஜோன் கெரி

சிறிலங்காவின் மனித உரிமை மீறல்கள் குறித்த அமெரிக்காவின் நீண்டகால கரிசனைகள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகளை, சிறிலங்காவிடம் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி வலியுறுத்துவார் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் சிறிலங்காவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகளில் முறுகலான நிலை இருந்து வந்தது.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், இருதரப்பு உறவுகள் சுமுகமடைந்துள்ள நிலையில், ஜோன் கெரியின் இந்தப் பயணம் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயணத்தின்போது, வெற்றிகரமாக நடத்தப்பட்ட அதிபர் தேர்தல் மற்றும் சுமுகமாக நடந்த அதிகார கைமாற்றல் குறித்து ஜோன் கெரி, சிறிலங்காவுக்குப் பாராட்டுத் தெரிவிப்பார் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், சிறிலங்காவின் உள்நாட்டுப் போரின்போது, இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும், மனித உரிமைகள் குறித்த அமெரிக்காவின் நீண்டகால கரிசனைகளை ஜோன் கெரி சுட்டிக்காட்டுவார் என்று அமெரிக்க அதிகாரிகள் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

ஒன்ராரியோ மாகாண தன்னார்வத் தொண்டர்களுக்கான விருது வழங்கும் விழா

கடந்த மாதம் ஏப்ரல் 9ம் திகதி வியாழக்கிழமையன்று ஒன்ராரியோ மாகாண தன்னார்வத் தொண்டர்களுக்கான விருது வழங்கும் விழா Ellas Banquet மண்டபத்தில் நடைபெற்றது. ஒன்ராரியோ மாகாணத்தில் தன்னார்வுத் தொண்டு செய்யும் பல்லினத்தை சேர்ந்த 185 தொண்டர்கள் சேவை மூப்பு அடிப்படையில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழ் கத்தோலிக்க சமூக அமைப்பின் தொண்டர் திரு. அஞ்சலோ சுவாம்பிள்ளை அவர்கள் 20 வருட சேவைக்காக கௌரவிக்கப்பட்டார், செல்வி மயூரிக்கா சிதம்பரநாதன், அபிநயா பாலசோதி ஆகியோர் இளையோருக்கான தன்னார்வத் தொண்டு விருது (Youth Volunteer Award) வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர் அபிமன்யு குலமோகன், குமாரசபேசன், முத்துராசலிங்கம், புவிதா நாகேந்திரம், சிவபாதம் சுப்பிரமணியம், சியாமளா தேவி துரைசிங்கம், ஜெயக்குமாரி ஜோகநாத், சிவலிங்கம் ஆகியோர் தன்னார்வத் தொண்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கனடியத் தமிழர் நிகழ்வுகள்

ஒன்ராறியோ இலங்கை ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் - கனடா அங்கத்தவர் விபரம்

மேற்படி எமது அமைப்பு கனடாவில் வாழும் இலங்கை ஓய்வூதியம் பெறுவோரின் நலன்களுக்காக இந்நாட்டின் சட்டங்களுக்கமைய இலாப நோக்கற்ற நிறுவனமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம். இதன் அங்கத்தவர் விபரங்கள் வருமாறு:

தலைவர்: திரு.ஆர்.எஸ்.ஜோகேந்திரா, உபதலைவர்: திரு.ஜி.எள். டி சில்வா மற்றும் திரு. மாயா கந்தையா செயலாளர்: திரு.ஆர்.ரகுபதி, உதவிசெயலாளர்: திரு.ஆர்.சண்முகரட்ணம், பொருளாளர்: திரு.என்.சதானந்தன் உதவிபொருளாளர்: திரு.வி.விவேகானந்தன் செயலாட்சிக் குழு உறுப்பினர்கள்: திரு. கீர்த்தி பெரேரா, திரு. எஸ். மதியாபரணம், திரு. கே.சி.நடராஜா, திரு. ஆர்.சுந்தரலிங்கம், திரு.வி.வி.சோமசேகரம், திரு. சிவா சிவராமலிங்கம், திருமதி. ரி.சுந்தரலிங்கம், திரு. கே.வடிவேலு, திரு. எஸ்.எல்.ஜேம்ஸ், திரு. டி.திசைவீரசிங்க, திரு. ரி.தங்கராஜா, திரு. ஏ.பொன்னம்பலம். கணக்காய்வாளர்: திரு. எம்.வேலாயுதபிள்ளை ஆலோசகர்: திரு. மனுவேல் ஜேசுதாசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

FINANCIAL PROBLEM

With Credit Cards - Loans - Taxes?

Do You Have

கடன் அட்டைகளினது தொல்லையா? வங்கிக்கடன் தொல்லையா? சம்பளத்தில் பறிமுதலா?
CREDIT CARD PROBLEMS, BANK LOAN PROBLEMS, WAGE GARNISHEE PROBLEMS

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், கடன் தொடர்பான சட்டப் பிரச்சனை
COLLECTION COMPANIES PHONING AT WORK OR HOME, LAWSUITS

கடன் தொல்லையால் உங்கள் குடும்பங்களில் பிரச்சினையா?
FIGHTING AT HOME BECAUSE OF MONEY PROBLEMS

Good News - We have a solution

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப் பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
We can reduce your debts by up to 85%. Make only one low monthly payment and pay no interest. It's like getting a free debt consolidation

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC, Life Insurance, Stocks, Bonds & Shares)

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
No need to file for Bankruptcy

CALL NOW AND START TO BUILD YOUR NEW LIFE IMMEDIATELY

பலவருடகால அனுபவமுள்ள

Suren Sornalingam BBA
Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

CREDIT RECOVERY CANADA
OFFICES:
10 Milner Business Court, Suite 300, Scarborough, Ontario, M1B 3C6.
(One block north of 401 on Markham)

2 Robert Speck Parkway, Suite 750, Mississauga, Ontario, L4Z 1H8.

Tel: 416-264-1272
Fax: 416-332-0914
Web: www.creditrecoverycanada.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தித் திறனாய்வு

சந்திரிகாவிற்கு பாவமன்னிப்பு வழங்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு

தந்தை செல்வா ஞாபகார்த்த நினைவுப் பேருரையினை நிகழ்த்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தடவை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவினை அழைத்திருக்கின்றது. அவர் 'யுத்தத்தின் முடிவு சமாதானமாகாது' என்ற தலைப்பில் தனது நினைவுப் பேருரையை ஆற்றியிருக்கின்றார்.

தந்தை செல்வா தமிழ்த் தேசிய அரசியலின் ஒரு கால கட்டத்தை நகர்த்திய பெருமைக்குரியவர். 1949 ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியை தோற்றுவித்ததன் மூலம் தமிழ் இன அரசியலை தமிழ்த் தேசிய அரசியல் என்ற கட்டத்திற்கு வளர்த்துச் சென்றார். மக்களை இணைத்த வெகுஜனப் போராட்டம் என்ற அரசியல் அணுகுமுறையினை ஆரம்பித்து வைத்தார்.

தந்தை செல்வாவினது இந்தப் பண்புகள் அடுத்த தலைமுறைக்கு கடத்தப்பட்டபோது அவரது அரசியல்வாரிசாக பிரபாகரன் எழுச்சியடைந்தார்.

கொள்கை, நேர்மை, விலை போகாமை என்ற பண்புகளை கொண்ட பிரபாகரன் அதற்கு மேலாகச் சென்று தியாகம் நிறைந்த போராட்டத்தை வளர்த்தெடுத்தார். இதனூடாக தமிழ்த் தேசிய அரசியலை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு சென்றார். பிரபாகரன் தந்தை செல்வாவின் நிழலில் நின்று அரசியல் செய்தார். இன்று அரசியல் செய்பவர்கள் அனைவரும் பிரபாகரன் வழங்கிய அடித்தளத்தில் நின்றே அரசியல் செய்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பான விமர்சனங்கள் அனைத்தும் பிரபாகரன் தந்த அடித்தளத்தில் நின்று கொண்டு தமிழ்த் தேசியத்திற்கு எதிரான அரசியல் செய்வது தொடர்பாகவே தோற்றம் பெற்றது.

இங்கே கவனிக்க வேண்டிய முக்கிய விடயம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலூன்றி நிற்பது பிரபாகரன் உருவாக்கிய அடித்தளத்தில். ஆனால் 2009ற்கு முன்னர் புலிகள் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வை வலியுறுத்த சம்பந்தனோ அதிகாரப் பகிர்வை வலியுறுத்தியதன் மூலம் முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு துணை நின்றனர். புலிகளை அழித்த பின்னர் பிரபாகரன் உருவாக்கிய அடித்தளத்தில் நின்று இன்று செய்வதோ தமிழ்த் தேசியத்திற்கு எதிரான அரசியல்.

இந்த தமிழ்த் தேசிய நீக்க அரசியலின் ஒரு வேலைத்திட்டம்தான் இன அழிப்புக் குற்றவாளிகளுக்கு பாவமன்னிப்பு வழங்குவது. கூட்டமைப்பினர் முதலில் இன அழிப்புக் குற்றவாளியான சரத் பொன்சேகாவிற்கு பாவமன்னிப்பு வழங்கினர். 2010 ஜனாதிபதி தேர்தலில் கொத்துக் கொத்தாக தமிழ் மக்களைக் கொலை செய்த சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக கூட்டமைப்பு பிரச்சாரம் செய்தது.

இரண்டாவது நிலையில் இன்னோர் இனப் படுகொலையாளியான ரணில் விக்கிரமசிங்கவிற்கு பாவமன்னிப்பு வழங்கியது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டமைப்பு மேதினத்தை நடத்தியதுமல்லாமல் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து சம்பந்தன் யாழ் மண்ணிலேயே சிங்கக் கொடியேற்றினார்.

தற்போது மூன்றாவது பாவமன்னிப்பு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு வழங்கியுள்ளது. அதுவும் தமிழ்த் தேசியத்தின் பிதாமகன் எனக் கருதப்படுகின்ற தந்தை செல்வாவின் நினைவு தினத்தில் வழங்கியிருக்கின்றது. இதன் மூலம் தனது துரோகத்தனங்களுக்கு தந்தை செல்வாவையும் பங்காளியாக்கியிருக்கின்றது. வாரிசுகள் தமது தலைவரின் பெயரை பாதுகாக்க வேண்டுமே தவிர, அவர் மீது மண் அள்ளிக் கொட்டக் கூடாது. கூட்டமைப்பு மண் அள்ளிக் கொட்டும் வேலையைச் செய்திருக்கின்றது.

இன்னும் சிறிது காலத்தில் பாவமன்னிப்பு வழங்குதல் தொடர்பாக கூட்டமைப்பு கின்னஸ் சாதனை நிகழ்த்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மைத்திரியை ஆட்சிக்கு கொண்டு வந்தது போல, சந்திரிகாவும் தமிழ் மக்களுக்கு சமஸ்டித்தீர்வு தருவேன் என்று கூறிய காரணத்தால், 1994 தேர்தலில் தமிழ் மக்கள் அபரிமிதமாக வாக்களித்து ஆட்சிக்குக் கொண்டு வந்தனர். சந்திரிகா எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் பெறாத 62.5 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார். அவருக்கு அதிக வாக்கு வீதத்தில் வாக்களித்தவர்கள் தமிழ் மக்களே!

ஆனால் சந்திரிகா வெற்றி பெற்றதும் முதன் முதலில் வெளியிட்ட அறிக்கையில் பெரும்பான்மை மக்கள் விரும்பாத அரசியல் தீர்வை தான் முன்வைக்கப் போவதில்லை எனக் கூறியிருந்தார்.

அவரது ஆட்சிக் காலத்தில் சர்வதேச நிர்ப்பந்தங்கள் காரணமாகவும் ஆயுதப் போரின் உக்கிரம் காரணமாகவும் அரசியல் தீர்வுப் பொதி ஒன்றினை முன்வைத்தார்.

ஆனால் அந்தத் தீர்வுப் பொதி மூன்று தடவைகள் வெட்டப்பட்டு வெறும் சக்கைதான் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முயற்சிக்கப்பட்டது. அந்தச் சக்கையினையும் நிறைவேற்றவிடாமல் ஐக்கிய தேசியக் கட்சியினர் பொதி நகலை கிழித்தெறிந்ததுடும், சந்திரிகா 1957 இல் அவரது தந்தையார் பேரினவாதிகளிடம் சரணடைந்தது போல சரணடைந்தார்.

தொடர்ந்து அதனைக் கொண்டு செல்லும் துணிவோ, விருப்பமோ அவரிடம் இருக்கவில்லை.

ரணிலுக்கும், புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை முன்வைத்தனர். இலங்கை என்ற அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் தமிழ் மக்கள் ஒரு தேசமாக இணைவதற்கான யோசனைகள்தான் அது. சர்வதேச சமூகமும் அதனை வரவேற்றிருந்தது.

ஒரு நாட்டிற்குள் தீர்வைக் காணக்கூடிய இடைக்காலத் தீர்வு யோசனையை முன்வைப்பார்கள் என்பதனை சற்றும் எதிர்பாராத ரணில் அரசாங்கம் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் சந்திரிகாவிடம் இருந்த பேரினவாத உணர்வு கிளர்ந்தெழுந்தது. அதுவரை காலமும் தாராள முகத்தை காட்டிய சந்திரிகா பேரினவாதத்தின் கோரமுகத்தைக் காட்டினார்.

விளைவு ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து முக்கிய அமைச்சுப் பதவிகள் பறிப்பும் தொடர்ந்து பாராளுமன்றக் கலைப்பும் இடம் பெற்றது. புலிகளின் இடைக்கால யோசனைகள் தானாகவே கிடப்புக்குள் சென்றன.

எனவே சந்திரிகா அரசியல் தீர்வு தொடர்பாக தாராளமாக நடந்து கொண்டார், தமிழ்த் தரப்பு அதனை ஒழுங்காக பயன்படுத்தவில்லை என சம்பந்தன் கதையளப்பதெல்லாம் சுத்தப் பொய். தயான் ஜயதிலக, குமார் ரூபசிங்கா போன்ற சிங்கள புத்திஜீவிகளைப் போல சந்திரிகா, சமாதானம், சமஸ்டி என நிறைய கதையளந்தாலும் இறுதியில் பேரினவாதத்திடமே தஞ்சமடைந்தார்..

இங்கேதான் இப்பத்தியாளர் தொடர்ச்சியாக வலியுறுத்துவது போல, சிங்கள சமூக உருவாக்கமும் அதன் வழி சிங்கள அரச உருவாக்கமும் மிகவும் முக்கியமானது.

முத்துக்குமார்

இதன்படி இலங்கைத்தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானது. ஏனையவர்கள் வாழ்ந்துவிட்டுப் போகலாம். ஆனால் உரிமைகள் எதுவும் கேட்கக் கூடாது. இந்த அரசுருவாக்க கருத்து நிலையை மீற எந்த சிங்கள புத்திஜீவியும் எந்த சிங்கள அரசியல்வாதியும் தயாராக இல்லை.

பண்டாரநாயக்கா தொடக்கம் சந்திரிகா ஊடாக, வாசுதேவ நாணயக்கார வரை அரசியல்வாதிகள் தொடர்பாக இதுதான் அனுபவம். அதேபோல குமார் ரூபசிங்கா தொடக்கம் தயான் ஜயதிலக வரை புத்திஜவிகள் தொடர்பாகவும் இதுதான் அனுபவம்.

> **சந்திரிகா தமிழ் மக்களது அரசியலையும் தமிழ் உயிர்களையும் கொலை செய்த ஒரு இனப்படுகொலையாளி. அவரது கைகள் முழுவதிலும் தமிழனின் இரத்தக் கறை. அந்த இரத்தக்கறை காய்வதற்கு முன்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவருக்கு பாவமன்னிப்பு வழங்கியுள்ளது.**

சந்திரிகா போன்ற சிங்களத்தவர்களிடம் விருப்பமும் இல்லை. இயலுமையும் இல்லை என்பதே உண்மை நிலை.

சந்திரிகா பேரினவாதி மட்டுமல்ல இனப் படுகொலையாளியும் கூட. யாழ்ப்பாண இடப் பெயர்வு, நவாலி தேவாலயப் படுகொலை, நாகர்கோவில் மகா வித்தியாலய மாணவர்கள் படுகொலை, கிரிசாந்தி குமாரசுவாமி படுகொலை, பண்டாரவளை பிந்தன்வேவ சிறைக் கைதிகள் படுகொலை, மாமனிதர் குமார் பொன்னம்பலம் படுகொலை என்பன சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலேயே அரங்கேற்றப்பட்டன. முப்படைகளின் தலைவராக சந்திரிகா இருந்ததினால் இவரது கட்டளைகள் இன்றி இந்தப் படுகொலைகள் நடந்திருக்கும் எனக் கூற முடியாது.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் சந்திரிகா பதவியிலிருந்த காலத்தில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினராலேயே கொலை செய்யப்பட்டார் எனக் கூறப்படுகின்றது.

குமார் பொன்னம்பலம் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னரே சந்திரிகா தன்னை கொலை செய்யலாம் எனக் கூறியிருந்தார்.

தொடர்ச்சி 39ம் பக்கம்...



இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON

- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Avenue East, Unit 5
(Markham Road & Eglinton Avenue)
Tel: 416.264.3232

3351 Markham Road, #129
Markaham Road & Steeles Avenue)
Tel: 416.609.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாங்க விற்க அழையுங்கள் ராஜ் நடராஜா

Meadowvale & Sheppard

3 Bedrooms + 3 Washrooms

Gerrard & Dryden

4 Bedrooms + 3 Washrooms

Seasons & Staines



3+1 Bedrooms + 4 Washrooms

Markham & Painted Post

3+2 Bedrooms + 2 Washrooms

McCowan & 401



1+1 Bedrooms + 1 Washrooms

Salem & Kingston

4 Bedrooms + 3 Washrooms

Harwood & Taunton

4 Bedrooms + 4 Washrooms

Markham & Denison

3 Bedrooms + 3 Washrooms

Airport & Castlemore

4 Bedrooms + 4 Washrooms

St.Clair & Danforth

4+2 Bedrooms + 5 Washrooms

Markham & Elson

4Bedrooms + 4 Washrooms

Markham & Steeles

5+1 Bedrooms + 4 Washrooms

Raj Nadarajah

Nagendrarajah

Sales Representative

nanohomes@gmail.com

HomeLife/Future Realty Inc., Brokerage*
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Independently Owned and Operated

COMPUTER

TOP PRODUCER 2013

TOP PRODUCER 2014

EXPERIENCED FULL TIME REALTOR **416-333-6115**

Guaranteed Monthly Income

உங்கள் குடும்பத்தினருக்கான மாத வருமானக் காப்புறுதி

- $500 முதல் $10000 வரை மாத வருமானமாக காப்புறுதி பெற முடியும்
- மிகக் குறைந்த மாதாந்தக் கட்டணம்
- முழு உத்தரவாதம் உள்ள மாத வருமானம் up to 25 years
- வருமான வரிகள் எதுவும் இல்லாத மாத வருமானம்
- 60 வயதுக்குள் உங்களுக்கு Total Disability ஏற்பட்டால் 50% வீத மாத வருமானத்தை நீங்கள் பெறமுடியும்

$500.00 மாத வருமானத்திற்குரிய காப்புறுதிக் கட்டணம்
(For 20 years with 100K Term Insurance for 20 years)

வயது →	30	35	40	45	50
மாதக் கட்டணம் Male	$20.93	$24.17	$31.68	$47.20	$74.87
மாதக் கட்டணம் Female	$16.82	$19.18	$24.33	$33.80	$52.10

உதாரணமாக சைமன் என்பவர் (40 வயது) மாத வருமானக் காப்புறுதி வைத்திருப்பதாக கருதுவோம் (Policy: 20 Years Fix Term with $500 Monthly Income) 50 வயதில் சைமன் இறந்தால் அவருடைய Beneficiary க்கு $500.00 அடுத்த 20 வருடங்களுக்கு மாத வருமானமாகக் கிடைக்கும்.

An affordable solution that allows your family to maintain its current standard of living

Non Medical Insurance

குறைந்த கட்டணத்தில் 85 வயது வரையிலான மருத்துவப் பரிசோதனை அற்ற காப்புறுதி - Final Expenses

RESP கல்வி சேமிப்புத் திட்டம்

பிள்ளைகளின் உயர்கல்வி சேமிப்புத் திட்டத்தின் மூலம் அரச மானியமாக $9200 வரை பெறமுடியும்

2 வருடங்களுக்கு ஒரு தடவை உங்கள் ஆயுள் காப்புறுதியை மீள்பரிசீலனை செய்தல் அவசியம்!

இலவச ஆலோசனைகளுடன் பூரண விளக்கம் தருகின்றோம்

Drug, Health and Dental Plans Available

Critical Illness Insurance

கொடிய நோய்கள் வராது விட்டால் கட்டிய பணம் முழுவதும் 65 வயதில் திருப்பித்தரப்படும். கட்டிய பணத்திற்கு முழு உத்தரவாதம் உள்ளது

ROYAL BROKERS

Mogan Selliah
Insurance Advisor
Royal Brokers
Direct: **416.569.3200**
moganselliah@gmail.com

Assumption Life · Sun Life Financial · La Capitale · RBC Insurance · Equitable Life · Industrial Alliance

Knowledge. Passion. Results.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம் + தளம் + புலம் = தாயகம்

சிங்கக்கொடி ஏற்றியதால் புலிக்கொடிக்கு அங்கீகாரம்!

வீ. ஆர். வரதராஜா

என்றும் இல்லாத திருநாளாக சிங்களவர்கள் சிங்கக்கொடி ஏந்தி போராட ஆரம்பித்து விட்டார்கள். அது தேசியக்கொடியல்ல என்பதை தெரிந்தே அவர்கள் சிங்கக்கொடி பிடித்தார்கள்.

சிறிலங்காவின் தேசியக் கொடியில் சிறுபான்மை மக்களுக்கும் கோடுகள் உண்டு. சிறிலங்கா ஒரு தனிச் சிங்கள நாடு அல்ல என்பதை அந்தக்கோடுகள் உணர்த்தி நிற்கின்றன. அதனால் அந்த தேசியக் கொடிமீது அவர்களுக்கு எப்போதும் விசுவாசம் இல்லை. சிறிலங்கா எப்போதும் சிங்களவருக்கு உரித்தான நாடு என்ற எண்ணமே அவர்கள் மத்தியில் ஓங்கி நிற்கின்றது.

> சிறிலங்கா என்ற ஒரே நாட்டுக்குள் தமிழரும் சிங்களவரும் ஒன்றாக இணைந்து வாழ முடியாது. ஆனால் சிங்கக்கொடி புறம்பாகவும் புலிக்கொடி புறம்பாகவும் பறக்கும் நிலை ஏற்பட்டால் ஒரு நட்பு வட்டம் ஏற்படலாம். இரு நாடுகளும் நட்புடன் இருக்கலாம்.

சிங்களத் தலைவர்கள் 1948ம் ஆண்டு முதல் நிகழ்த்திவந்த தமிழினப் படுகொலைகளின் எதிரொலியாகச் சிங்களவர்கள் மாறிவிட்டார்கள். குறிப்பாக மகிந்த சிங்கள மன்னர்கள் வரிசையில் மகாவம்சத்தில் இடம் பிடிக்க தமிழர்களைக் கொலை செய்தார்.

தமிழர்களை கூடுதலாகக் கொலை செய்பவர்களே மகாவம்சத்தில் இடம்பிடிக்க முடியும். அவ்வகையில் மகிந்த முதலிடம் பெறுகின்றார். அவரின் ஆட்சியில் எண்ணற்ற தமிழர்கள் கொல்லப்பட்டனர். அதனால் அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் ஆர்ப்பாட்டத்தின் போதே சிங்களக்கொடி பிடிக்கப்பட்டது. 'சிங்களவர்களின் பாதுகாவலன் மகிந்த' என்று கோஷங்களும் எழுப்பப்பட்டன.

தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது மகிந்தவுக்கு விழவில்லை. சிங்களவர்கள் மாத்திரமே வாக்களித்தார்கள். ஆனாலும் மகிந்த தோற்றுப் போனார். இதனால் சிங்கள மக்கள் மத்தியில் மகிந்த மேலும் இனவெறியைத் தூண்டிவிடுகிறார். அதன் விளைவாக தனிச்சிங்கள சிங்கக்கொடி தென்னிலங்கையில் எழுந்துள்ளது.

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமான இடைவெளி மேலும் அதிகரித்துள்ளது. நல்லிணக்கம் ஏற்படும் வாய்ப்புகளோ வாசல்களோ கண்ணுக்கெட்டிய தூரம்வரை தெரியவில்லை.

சிங்களவர்கள் தவறான தேசியக்கொடியை ஏந்தக்கூடாதென பிரதமர் ரணில் நிலைமையைச் சமாளிக்கப் பார்க்கிறார். அவர்கள் தேசியக்கொடியை அங்கு பிடிக்கவில்லை.

தனிச்சிங்களத்தை வெளிப்படுத்தும் சிங்கக்கொடியை அவர்கள் ஏந்தினார்கள் என்பதை ரணில் மிக நன்றாகவே அறிவார். ஒரு வகையில் அவரும் அதனை ஆதரித்தேயாக வேண்டும். சிங்கள மக்களிடமே சிறிலங்காவின் ஆட்சி அமையவேண்டும் என்பதில் அவருக்கும் மாற்றுக்கருத்துக் கிடையாது.

ஆனால் ஓர் உண்மையை அவர்கள் உணரத் தவறிவிட்டார்கள். சிறிலங்காவின் அடிப்படைப் பிரச்சனையின் வெளிப்பாடு அது. சிங்களவர்கள் சிங்கக்கொடி ஏற்றும் போது, தமிழர்களின் தேசிய புலிக்கொடி அங்கு அங்கீகாரம் பெறுகின்றது. இது சிங்களவரின் நாடு என்று தென்னிலங்கையைக் குறிப்பிடும்போது, வடகிழக்கு இணைந்த நாடு தமிழீழம் அங்கு உருவாகின்றது.

அந்தத் தென்னிலங்கையைக் குறிவைத்துத்தான் பாரதியாரும் "சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்" என அவர் பாடினார். அந்தத் தென்னிலங்கை தற்போது தனிச் சிங்கள நாடாக மாற அத்திவாரமிட்டுள்ளது.



அதன் கொடி தனிச் சிங்களக்கொடி. தமிழர்களின் கொடி புலிக்கொடி. சிங்கக்கொடி தனியாகப் பிரிந்து செல்லும்பொது புலிக்கொடி அங்கீகார முத்திரை பெறுகின்றது.

காலம் காலமாக ஏற்பட்டுவந்த-ஏற்பட்டுக் கொண்டிருக்கும்-நேரடிச் சம்பவங்களுக்கு ஒரு கண்ணாடி அவசியமில்லை. சிறிலங்கா என்ற ஒரே நாட்டுக்குள் தமிழரும் சிங்களவரும் ஒன்றாக இணைந்துவாழ முடியாது. ஆனால் சிங்கக்கொடி புறம்பாகவும் புலிக்கொடி புறம்பாகவும் பறக்கும் நிலை ஏற்பட்டால் ஒரு நட்பு வட்டம் ஏற்படலாம். இரு நாடுகளும் நட்புடன் இருக்கலாம்.

இதனைத்தவிர புரையோடிப்போன இந்தப் பிரச்சனைக்கு எவ்விதத் தீர்வையும் நாம் பெற முடியாது. தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் தீர்வைப்பற்றிக் கதைத்தால் சிங்கள மக்கள் கோபப்படுகின்றார்கள். சிங்கள இனவாதிகள் கூச்சல் போடுகின்றார்கள். அவர்களோடு இணக்க அரசியலில் ஈடுபட்டால் சில சலுகைகள் கிடைக்கலாம். ஆனால் நிரந்தரத் தீர்வு ஏற்பட வாய்ப்பு இல்லை.

தற்போதுள்ள சிங்கள தலைவர்கள் எவரும் தமிழ் மக்கள் தொடர்பாக வெளிப்படையாகப் பேசத் தயாராகவில்லை. ஆனால் எல்லா இனமக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என ஆலோசனை கூறிக்கொள்வார்கள்.

தமிழ்-சிங்கள மக்களிடையே நல்லிணக்கம் ஏற்படுவதில் பாரிய இடைவெளி ஏற்பட்டுள்ளதை அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை.

தமிழர்களின் தேசியக்கொடி புலிக்கொடி என்பது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். பிரித்தானிய நீதிமன்றம் ஒன்றில் சட்டச் சிக்கல் ஒன்றை ஏற்படுத்தியது. அது தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடி. தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் கொடியைப் பாவிக்கமுடியாது என அங்கு வாதிடப்பட்டது. ஆனால் புலிக்கொடி சோழர்காலம் முதல் தமிழரின் தேசியக்கொடியாகப் பாவிக்கப்பட்டு வந்துள்ளது குறித்து நீதிமன்றில் விளக்கம் கொடுக்கப்பட்டது.

ஈழத்தில் மன்னராக விளங்கிய எல்லாளன் என்ற சோழ மன்னரும் புலிக்கொடியையே தமது தேசியக் கொடியாகப் பாவித்ததாகவும் மேலும் குறிப்பிடப்பட்டது.

இதனையடுத்து, தமிழர்கள் தமது நிகழ்ச்சிகளில் புலிக்கொடியை தேசியக்கொடியாகப் பாவிக்கலாம் என்றும், ஆனால் அதில் விடுதலைப் புலிகள் என எழுதப்பட்டிருக்கக் கூடாது என்றும் நீதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இதன்பின்பே பிரித்தானியாவில் தமிழர்கள் புலிக்கொடியை சகல அரசியல் போராட்டங்களின்போதும் பாவித்தனர். அதற்கு முன்னைய காலங்களில் பிரித்தானிய காவல்துறையினர் அதற்குத்தடை விதித்துவந்தனர்.

எனவே, புலிக்கொடியை தற்போது சிங்களமும் அங்கீகரிக்கும் முகமாக சிங்கக்கொடியை ஏற்றிவருகிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சந்திரிகாவிற்கு...

37 ஆம் பக்கத் தொடர்ச்சி

இக்காலத்தில் தமிழ் மிதவாதிகளின் அரசியல் நிலைப்பாடு வேறு, புலிகளது அரசியல் நிலைப்பாடு வேறு என்றே பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. சமாதானச் செயற்பாட்டுக்கு எதிராகப் புலிகள் உள்ளனர் என இந்த மிதவாதிகள் எனக் கூறப்படுகின்ற சம்பந்தன், நீலன் திருச்செல்வம் வகையறாக்கள் சர்வதேச ரீதியாக பிரச்சாரம் செய்தனர்.

குமார் பொன்னம்பலம் அதனை நிராகரித்து தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதனை சர்வதேச ரீதியில் வலியுறுத்தினார். அதன் மூலம் ஒரு நாட்டிற்குள் தமிழ்த் தேசத்தின் இறைமை அங்ககரிக்ப்பட்ட தீர்வை பெறுவதே புலிகளினதும், தமிழ் மிதவாதிகளினதும் அரசியல் இலக்கு என வாதிட்டார். தேர்தல் வரும்போது புலிகள் குமார் பொன்னம்பலத்தை முதன்மைப்படுத்தக் கூடிய நிலையும் இருந்தது.

குமார் பொன்னம்பலம் முன்னிலைக்கு வந்தால் புலிகள் வேறு, மிதவாதிகள் வேறு என்ற பிரச்சாரத்தைக் கொண்டு செல்ல முடியாமல் போய்விடும் என்பதற்காகவே அவர் கொலை செய்யப்பட்டார்.

இனப்படுகொலை என்பது வெறுமனவே உயிர்க்கொலை மட்டுமல்ல. ஒரு மக்கள் கூட்டத்தின் அரசியலைக் கொலை செய்வதும் இனப்படுகொலைதான். சந்திரிகா தமிழ் மக்களது அரசியலையும் தமிழ் உயிர்களையும் கொலை செய்த ஒரு இனப்படுகொலையாளி.

அவரது கைகள் முழுவதிலும் தமிழனின் இரத்தக் கறை. அந்த இரத்தக்கறை காய்வதற்கு முன்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவருக்கு பாவமன்னிப்பு வழங்கியுள்ளது.

சுயமரியாதை என்பது ஒவ்வொரு இனத்திற்கும் உண்டு. அந்த இனத்திற்கு தலைமை தாங்கும் அரசியல் இயக்கத்தினாலேயே அது வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திரிகாவிற்கு பாவமன்னிப்பு வழங்கியதன் மூலம் தமிழ் மக்களின் சுயமரியாதையை மிக மோசமாக அவமானப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் பிரவுண் அவர்களுக்கு வாக்களிக்க முன்வந்திருக்கும் உங்களுக்கு நன்றி

மே 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமையே உங்கள் வாக்குக்களை அளித்திடுமாறு வேண்டிக் கொள்கிறோம்

மே மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியிலிருந்து 5.00 மணிவரையும், மே 7ம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியிலிருந்து இரவு 9.00 வரையும் தேர்தல் நடைபெறும்.

மே 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமையே வாக்குச் சாவடிக்கு சென்று உங்கள் வாக்குக்களை அளித்திடுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

வாக்களிப்பிற்கு செல்வதற்கு போக்குவரத்து வசதிகள் உட்பட சகல உதவிகளும் செய்து தரப்படும்.

வாகன வசதி வேண்டுமானால் அல்லது உங்கள் இடத்துக்குரிய வாக்குச் சாவடி விபரம் தேவைப்படின் (416) 646 9761 என்ற இலக்கத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

மின்னஞ்சல்: info@tamilsforpatrick.ca
இணையம்: www.tamilsforpatrick.ca
முகப்புத்தகம்: tamils for patrick

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BMO Bank of Montreal

For all your mortgage needs

Sivacantharasa (Siva) Thurairatnam

Mortgage Specialist
Serving Greater Toronto Region
BMO Bank of Montreal

Cell: 416-476-5419
416-274-2830

Email: sivacantharasa.thurairatnam@bmo.com

LIST YOUR PROPERTY WITH
LOW COMMISSION

Sugi Senthinathan
Sales Represenative
416.880.3200
sugi.properties@gmail.com

Ramesan Kulasekaram
Sales Represenative
647.668.0486
ramesan1900@yahoo.ca

எந்தவொரு இமிக்கிரேசன் பிரச்சனையானாலும்
முதலில் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

WALDMAN & ASSOCIATES

Founded in 1979 by Lorne Waldman, Waldman & Associates is a leading Canadian law firm in the area of immigration and refugee law.

Our Services include:

- Judicial Reviews
- Deportation Appeals
- Admissibility Hearings
- Refugee Hearings
- Refugee Appeals
- Spousal Sponsorships
- Sponsorship Appeals
- Parental Sponsorships
- H&C Applications
- Pre-Removal Risk Assessments

Please call us to set up a consultation.
We will do our utmost to assist you.

Waldman & Associates
281 Eglinton Avenue East
Toronto, Ontario M4P 1L3
Tel: 416-482-6501
Fax: 416-489-9618

தமிழில் தொடர்புகளுக்கு
S. Nada (எஸ். நடா)
416-939-9481

Century 21
Percy Fulton Ltd., Brokerage
#1 Office in Canada

Uthayakumar Yogalingam
Sales Representative
Cell: 416-893-9309
Bus: 416-298-8200
uyogalingam@trebnet.com
www.Uthayan-Homes.com
www.FindYourHomesAndCondos.ca

Scarborough $2100

Scarborough $399,900

Scarborough $499,000

$635,000

Scarborough $389,000

Ajax $319,000

Ajax $324,900

Toronto $158,000

Ajax $374,900

Ajax $399,900

Ajax $449,000

Toronto $135,900

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Buying or Selling a House ?

$ 219,900

MISSISSAUGA
Hurontario / Hillcrest
Condominium Apt.
Bedrooms : 2+1
Washrooms : 1

$ 274,900

TORONTO
Markham / Finch
Townhouse
Bedrooms : 3
Washrooms : 2

$ 468,800

TORONTO
Sheppard / Meadowvale
Townhouse
Bedrooms : 3
Washrooms : 3

$ 559,000

TORONTO
Ellesmere / Markham
Bungalow
Bedrooms : 3+2
Washrooms : 2

$ 559,800

CLARINGTON
401 / Bloor / Prestonvale
Bungalow
Bedrooms : 3
Washrooms : 2

$ 579,000

TORONTO
Painted Post / Markham
Bungalow
Bedrooms : 3+2
Washrooms : 2

$ 599,000

AJAX
Salem / Kingston
Detached - 2 Storey
Bedrooms : 4
Washrooms : 3

$ 759,900

AJAX
Salem / Harper Hill Dr.
Detached - 2 Storey
Bedrooms : 4
Washrooms : 4

$ 879,900

MARKHAM
Markham / Elson
Detached - 2 Storey
Bedrooms : 4
Washrooms : 4

HomeLife / Future Reality Inc .,
Brokerage *

205-7 Eastvale Drive
Markham ON L3S 4N8
Bus :- 905-201-9977
Fax :- 905-201-9229

*Independently Owned and Operated

HOMELIFE HIGHER STANDARDS

Terrence Thambyrajah

Sales Representative

Dir :- 647-709-1202

E mail :- terrence.thambyrajah@gmail.com
Web :- www.terrencethambyrajah.com

40 Cavehill cres (Pharmacy & 401)
5 Bed 3 Bath Detach Bungalow
$ 699,800

421 Oakborough Dr
(9th line and 14 th Ave)
4 Bed 4 Bath 2700 Sq.Ft Home
$ 839,800

Selling your house?

Guaranteed to get these service:

- Staging Consultation
- FULL MLS SERVICE
- VIRTUAL TOUR /VIDEO
- 1000 JUST LIST FLYERS
- 50 FEATURE SHEETS
- FREE HOME STAGING
- OPEN HOUSES
- THREE HOURS FREE CLEANING SERVICE
- ONLINE CENTURY 21 ADVERTISEMENT
- PERSONAL WEBSITE OF YOUR HOME

Contact me today at **416-888-5730** so we can go over your option togethaer. I haye the expertise to guide you to the perfect investment opportunity for your needs.

Mathan Markandu
Sales Representative
416-888-5730
info@mmhomes.ca
www.mmhomes.ca

Century 21

LEADING EDGE REALTY INC. Brokerage
6393 Main Street. Stouville, On L4A 1G4
905-642-8870
Independently Owned and Operated
Not Intended to solicit Sellers or Buyers currently under Written contract With another Realtor.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிஸ்டின் எலியட்டை தலைவராக தெரிவு செய்யுமாறு வேண்டுகிறார் ஜான் பெயட்

2006இல் இருந்து பிரதமர் காப்பரின் அரசில் பணியாற்றும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. தமிழர் சமூகம் ஒன்ராரியோ முழுமையாக என்னை விரும்பியழைத்தது. சிறீலங்காவில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்து பொறுப்புக்கூறலை வலியுறுத்தி அதற்கு கனடா தலைமைத்துவம் தாங்கி தொழில்பட்டமை குறித்து நாங்கள் அனைவரும் பெருமிதம் கொள்கின்றோம்.

கடந்த ஆட்சியாளர்களின் எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையாக போராடியது குறித்தும் பெருமை கொள்கின்றோம். தமிழர்களின் தீர்வு குறித்து பிரச்சாரம் செய்வதற்காக பெருமை கொள்கின்றோம்.

கிரிஸ்டினும் இந்த விடயங்களில் என்னுடன் ஒத்துப்போகின்றார். எமது அரசின் நடவடிக்கைகளை அவரும் அதரிக்கின்றார். கிரிஸ்டின் ஒன்ராரியோ தமிழர் சமூகத்தின் நண்பர் என்னுடன் இணைந்து மே 3 மற்றும் 7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தலைவருக்கான தேர்தலில் நண்பர் கிரிஸ்டின் எலியட்டுக்கு வாக்களித்து எமது கட்சியின் தலைவராகவும் ஒன்ராரியோவின் எதிர்கால முதல்வராகவும் தெரிவு செய்யுமாறு உங்கள் அனைவரையும் வேண்டுகிறேன்.

அன்புடன்
John Baird, Former MP, Ottawa West-Nepean

John Baird urges you to vote for Christine Elliott for leader

I had the privilege of serving in Prime Minister Harper's government since 2006, and I have been welcomed into the Tamil community all across the province. We take tremendous pride in Canada's leadership in pushing for accountability for the war crimes that took place in Sri Lanka, tremendous pride in fighting against the authoritarian actions of the previous government, and tremendous pride in campaigning for reconciliation for the Tamil minority there.

Christine shares my pride. She agrees with our Conservative government's actions. Christine is a friend of Ontario's Tamil community.

Please join me May 3rd or May 7th in supporting my friend Christine Elliott for leader of our party and the next Premier of Ontario, and let's get Ontario back on track.

Sincerely,
John Baird, Former MP, Ottawa West-Nepean

CHRISTINE
Ready to Lead.

The Only Choice to Win in 2018

Cast Your Vote on May 3rd or May 7th

www.christineelliott.ca
1-800-352-9694

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW SPICELAND
SUPER MARKET

NEW SPICELAND

SUPER MARKET FAST, FRIENDLY AND EFFICIENT SERVICE

என்றும் பசுமை நிறைந்த உடன் மரக்கறி,
மீன், இறைச்சி வகைகளில் ஓர் புரட்சி...

சகல விதமான
Fresh மரக்கறி வகைகள்,
பழவகைகள் மற்றும்
தரமான இறைச்சி,
மீன் வகைகளை எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

மான வாகன தரிப்பிட வசதிகளுடன்...

5790 Sheppard Ave. E, Unit 4,5 & 6 Scarborough ON M1B 5J6
Tel: 416 292 9769 Fax: 416 292 9709

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க.. மோட்கேஜ் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்

இவ்வார குறள்

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

பொருள்: நாம் எந்த உதவியும் செய்யாத போதும் ஒருவர் தாமாக முன்வந்து செய்யும் உதவிக்கு இந்த பூமியையும் வானத்தையும் தந்தாலும் ஈடாகாது.

Kiri Thevathas
Realtor
HomeLife/Future Realty Inc, Brokerage
205-7 Eastvale Dr. Markham ON L3S 4N8
Independently Owned & Operated

Cell: 416-902-8313
Bus: 905-201-9977 Fax: 905-201-9229
Email: kiri84@hotmail.com

Listing

Leasing

Finch /Baldoon
$423,596



Bedrooms:4+1 Washrooms:2

Brimely/Lawrence
$529,900

Bedrooms:3+2 Washrooms:2

Mccowan/ Brimorton
$2,000

Bedrooms:3+1 Washrooms:2

Morningside/Ellesmere
$169,900

Bedrooms:2+1 Washrooms:2

Eglinton/Markham
$169,900

Bedrooms:3 Washrooms:2

Ellesmere / Birchmount
$1,150

Bedrooms:2 Washrooms:3

Radford/Delaney
$409,000

Bedrooms:3 Washrooms:3

Ritchie/Hwy 2
$499,900

Bedrooms:4+1 Washrooms:4

Staines/Finch
$900

Bedrooms:2 Washrooms:1

Mccowan/Lawrence
$649,900

Bedrooms:3+3 Washrooms:3

Steeles/Mccowan
$669,000

Bedrooms:3+2 Washrooms:4

Steeles/Mccowan
$750

Bedrooms:2 Washrooms:1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அனைத்து நிதி சம்பந்தமான தேவைகளுக்கும் நீங்கள் நம்பிக்கையுடன் அழையுங்கள்.

- முதல்தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்
- மீள்பண வசதிகள்
- வீட்டினை உறவுகளுக்கிடையில் அல்லது 3ம் நபருக்கு பெயர் மாற்றம் செய்து மோட்கேஜ்ஜினை புதுப்பித்தல்
- இரண்டாம்தர அடமான கடன் வசதிகள்
- சுயதொழில் புரிவோருக்கான மோட்கேஜ் ஏற்பாடு
- கடன்களை ஒன்று படுத்தல்
- புதிய மோட்கேஜ்ஜுக்கான Pre- Approvals
- பழுதடைந்த கிறடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
- புதிய குடிவரவாளர்களுக்கான மோட்கேஜ்
- 2ம் 3ம் வீட்டுக் கொள்வனவாளருக்கான ஆலோசனைகள்
- 5% Down paymentஇல் மோட்கேஜ் வசதிகள்

மோட்கேஜ் பெறுவதில் சிக்கலா?

அழையுங்கள்!!!

Kiri Thevathas

Mortgage Agent

Brokerage Licence # 10216

BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...

Cell: 416-902-8313

Email: kiri84@hotmail.com

Bus: 9416-848-7475 Fax: 416-548-7496

203-7 Eastvale Dr. Markham ON L3S 4N8

*Some conditions may applay

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr.Aathy Somasuntharam

Dental Surgeon

We treat you Royally

பிரபல பல் வைத்திய நிபுணர்

டாக்டர். ஆதி கணபதி சோமசுந்தரம்

416 750 9969, 647, 8888788

2191, WARDEN AVENUE, TORONTO, ONTARIO,

* முழு குடும்பத்திற்கான பல் வைத்தியம்
* அவசர பல் சிகிச்சை
* ஞான பல் எடுத்தல்
* நிரந்தர செயற்கை பற்கள் கட்டுதல்
* பல் வேர் அடைத்தல்
* வாய் துர்நாற்றம் அகற்றல்
* முரசு கரைதலுக்கான பிரத்தியேக சிகிச்சை
* குழந்தைகளுக்கான பல் வைத்தியம்
* பல் சீரமைப்பு
* பல், வாய் சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

* Emergency Patients Are Welcome
* Wisdom Tooth Removel
* Orthodontic Treatment (Braces)
* Crown, Bridge, Implant
* Full Dentures, Patial Dentures
* Root Canal Treatment
* Bad Mouth Smell Treatment
* Gum Treatment
* Dental Treatment For Children
* Family Dental Care

All kind of Mouth & Teeth Diseases are Treated

வாரத்தில் 7 நாட்களும் வைத்திய சேவை வழங்கப்படும்.

noolaham.org | aavanaham.org

Brampton's HOTTEST NEW ADDRESS

Alloa Greens
OF MOUNT PLEASANT

Own a Detached Home for $2500 / per month

LUXURIOUS
DETACHED HOMES

40' / 45' / 48' / 64' LOTS WITH
DOUBLE CAR GARAGE
4 Rooms 4 Washrooms
2700 SQFT & upwards

WHERE
PRESENTATION CENTRE
11438 CREDITVIEW RD., BRAMPTON, ON L7A 0G1

WHEN?
OPEN HOUSE
MAY 23rd & 24th
11am – 5pm

HURRY
To Avoid Disappointments
Call & Register for Special Incentives

THE REAL REALTORS
Siva Sivagnanam and Team
416.216.4545
www.therealrealtors.com

HOMELIFE/GTA REALTY INC.
BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED
GTA SQUARE 5215 Finch Ave. E. #203 Toronto, M1S 0C2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AVIS®
CAR RENTAL

DAILY, WEEKLY & MONTHLY
DISCOUNTED PRICE
Mini Vans & 8 Seater 4X4s Available

***WEEKEND SPECIAL**
$99
ONLY SMALL CAR

aeroplan Earn Aeroplan reward miles with every rental

Vic Seevaratnam
416 882 5599

416 754 2847

*Applicable taxes and fees extra. Limited time offer. Rate subject to change. Blackout period apply. Advance reservation required. Rate is non discountable and cannot be combined with any other promotions or coupons. Renter must meet Avis age, driver and credit requirements. An additional daily surcharge may apply for reters under 25 years of age. CALL US FOR MORE DETAILS.

*OFFER EXPIRES JUN 24TH 2015

4240 Sheppard Ave. E Scarborough (Midland and Sheppard)

3+2 Bedrooms: Washroom:2

4 Bedrooms: Washroom: 3

3+2 Bedrooms: Washroom:3

3+2 Bedrooms: Washroom:2

3+1 Bedrooms: Washroom:2

4+1 Bedrooms: Washroom: 3



3 Bedrooms: Washroom: 3

4 Bedrooms: Washroom: 3

New Condos With VIP Price
www.NewCondoInGta.com

3 Bedrooms: Washroom:3

4 Bedrooms: Washroom: 3

3 Bedrooms: Washroom: 1

Krish Sivapatham
Sales Representative
Direct : 416-895-4457
krishome.ca
Indepently Owned and Operated, REALTOR

54 HOUSES **SOLD BY KRISH**
MAY 2013 TO APRIL 2015

Top 5% Sales Rep in Canada
2010, 2011, 2012 ,2013 & 2014

HomeLife / Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229

Full Time Realtor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

சொத்துக் குவிப்பு வழக்கில் அரசு வழக்கறிஞராக பி.வி. ஆச்சாரியா

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில், அரசுத் தரப்பு வழக்கறிஞராக பி.வி. ஆச்சாரியா நியமிக்கப்பட்டுள்ளார். உதவி வழக்கறிஞராக சந்தே சவுட்டா நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை கர்நாடக அரசு பிறப்பித்துள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கு மேல் முறையீட்டில், விரைவில் தீர்ப்பு வெளிவருமென எதிர் பார்க்கப்படுகிறது. இந்த வழக்கில் பவானி சிங்கை அரசுத் தரப்பு வழக்கறிஞராக நியமித்தது சரியல்ல என உச்ச நீதிமன்றம் முன்னர் தீர்ப்பளித்தது. இதையடுத்து புதிய அரசுத் தரப்பு வழக்கறிஞரை கர்நாடக அரசு நியமித்திருக்கிறது.

இந்த வழக்கில், பவானி சிங்கிற்கு முன்பாக, பி.வி. ஆச்சாரியாவே அரசுத் தரப்பு வழக் கறிஞராக ஆஜராகிவந்தார். ஆனால், சில அழுத்தங்களின் காரணமாகத் தான் விலகிக் கொள்வதாக கூறி, இந்த வழக்கிலிருந்து அவர் விலகிக் கொண்டார்.

கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நடந்துவரும் இந்த வழக்கில், ஏற்கனவே விசாரணை முடிவடைந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், புதிதாக நியமிக்கப்பட்டு ள்ள அரசுத் தரப்பு வழக்கறிஞர் பி.வி. ஆச்சார்யா, தனது தரப்பு வாதத்தை உயர்நீதிமன்ற த்தில் தாக்கல்செய்தார்.

ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் மீதான இந்த சொத்துக் குவிப்பு வழக்கை முன்னதாக விசாரித்த தனி நீதிமன்றம் நான்கு பேருக்கும் சிறை தண்டனையும் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது.

விஜயகாந்த் கருணாநிதி சந்திப்பு கூட்டணிக்கு முன்னோட்டமா?

தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவரும் தே.மு.தி.க. தலைவருமான விஜயகாந்த் கடந்த ஞாயிற்றுக்கிழமை, தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி, பா.ஜ.க. மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்திரராஜன், காங்கிரஸ் மாநிலத் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகி யோரை சந்தித்துப் பேசியிருக்கிறார்.

தமிழகத்தின் முக்கியப் பிரச்சனைகள் குறித்து, குறிப்பாக மேகதாது விவகாரம், நிலம் கையகப்படுத்தும் விவகாரம், செம்மரக்கடத்தல் துப்பாக்கிச்சூடு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக இந்தத் தலைவர்களை சந்தித்துப் பேசியதாக விஜயகாந்த் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்.

மேலும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஆகியோரையும் தாம் சந்திக்கவிருப்பதாகவும் விஜயகாந்த் தெரிவித் திருக்கிறார்.

இந்தச் சந்திப்புகளுக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழ்நாட்டில் இனி மக்களைப் பாதிக்கும் எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் அனைத்துக் கட்சிகளும் இணைந்து போராடுவோம் என்று தெரிவித்தார்.

தமிழக சட்டமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் பின்னணியில் இன்றைய சந்திப்புக்கள் அந்த தேர்தல் கூட்டணிக்கான முன்னோட்டமா என்று செய்தியாளர்கள் கேட்டபோது சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் பல நாட்கள் உள்ளதால், கூட்டணி குறித்து தேர்தல் நேரத்தில் முடிவுசெய்யப்படும் என்று விஜயகாந்த் பதிலளித்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு தஞ்சைப் பெரிய கோவிலில் தேரோட்டம்



உலக புகழ்பெற்ற தஞ்சை பெரியகோவிலில் சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு, சித்திரைத் திருவிழாவில் தேரோட்டம் நடைபெற்றிருக்கிறது.

19ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு தஞ்சைப் பெரிய கோவிலில் தேரோட்டம் நடைபெறவில்லை என்கின்ற னர் ஆய்வாளர்கள்.

தஞ்சாவூர் மராட்டிய மன்னர்களின் கீழ் இருந்த போது, 18 நாட்கள் நடந்த சித்திரைத் திருவிழாவில் தேரோட்டம் என்பது மிக முக்கியமான ஒரு நிகழ்வாக இருந்துவந்தது. ஆனால், அந்தத் தேர் சிதிலமைடந்த நிலையில், பல ஆண்டுகளுக்கு முன்பாக தேரோட்டம் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் புதிதாக தேர் ஒன்றைச் செய்ய தமிழக அரசு 50 லட்ச ரூபாயை ஒதுக்கீடு செய்திருந்தது.

இதையடுத்து, 16.5 அடி உயரத்தில் புதிய தேர் 3 அடுக்குகளுடன் 40 தொன் எடையில் உருவாக்கப்பட்டது. இந்தத் தேரின் வெள்ளோட்டம் சில நாட்களுக்கு முன்பாக நடைபெற்றது.

அதற்குப் பிறகு புதனன்று காலை 6.30 அளவில் தியாகராஜர் என்ற உற்சவர் தேரில் வைக்கப்பட்டு தேர் நிலையிலிருந்து புறப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை இழுத்துச் சென்றனர். சில இடங்களில் ஜேசிபி எந்திரங்களின் மூலமும் தேர் தள்ளப்பட்டது.

100 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தேரோட்டம் நடப்பதாக பலரும் கூறினாலும், 1818ஆம் ஆண்டிற்குப் பிறகு, தேரோட்டம் நடந்ததற்கான சான்றுகளே இல்லை என தஞ்சாவூரைச் சேர்ந்த ஆய்வாளர் குடவாயில் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். பல்வேறு தரப்பினரையும் இந்தத் தேரோட்டம் ஒருங்கிணைக்கிறது என்கிறார் பாலசுப்பிரமணியம்.

தேரோட்டம் நடைபெற்ற 4 ராஜவீதிகளிலும் போக்குவரத்து முழுமையாக நிறுத்தப்பட்டது.

பிரபல சித்திரக் கலைஞர் கோபுலு மரணம்

தமிழ்நாட்டின் பிரபல கேலிச் சித்திரக் கலைஞரான கோபுலு என்ற எஸ். கோபாலன் காலமானார். அவருக்கு வயது 92.

60 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இதழ்களில் ஓவியங்களை வரைந்து வந்தார் கோபுலு.

1924ஆம் ஆண்டு தஞ்சாவூரில் பிறந்த கோபுலு, சித்திரக் கலையின் மீது இருந்த ஆர்வத்தின் காரணமாக, கும்பகோணம் ஓவியக் கல்லூரியில் பயின்றார்.

ஆனந்த விகடனில் பணியாற்றிய மாலியை தன் மானசீக குருவாக ஏற்றுக் கொண்ட கோபுலு, 1945ல் விகடனில் பணியில் சேர்ந்தார். கோபாலன் என்ற பெயரை மாலிதான் கோபுலு என்று மாற்றினார். தேவனின் கதைகள், கொத்தமங்கலம் சுப்புவின் தில்லானா மோக னாம்பாள், சாவியின் வாஷிங்டனில் திருமணம் உள்ளிட்ட படைப்புகளுக்கு கோபுலு வரைந்த ஓவியங்கள் அழியாப் புகழைப் பெற்றவை.

சாவியின் வாஷிங்டனில் திருமணம் தொடருக்கு கேலிச் சித்திர பாணியில் கோபுலு வரைந்த ஓவியங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன.

தவிர, நகைச்சுவைத் துணுக்குகள், கேலிச்சித்திரங்கள், புராணத் தொடர்களுக்கான ஓவியங் கள் என 60 ஆண்டுகளுக்கும் மேலாக பத்திரிகைகளுக்கு ஓவியங்களை வரைந்துள்ளார் கோபுலு.

TERM 20 YEARS FOR $250,000

RBC Insurance

BMO Insurance

Age	* Female	* Male	* Female	* Male
35 வயது	$14.63	$17.78	$14.22	$17.82
40 வயது	$18.45	$24.08	$18.36	$23.94
45 வயது	$26.78	$35.55	$26.91	$35.37
50 வயது	$53.10	$58.73	$41.94	$58.50
55 வயது	CALL ME	CALL ME	CALL ME	CALL ME
60 வயது	CALL ME	CALL ME	CALL ME	CALL ME
	*Non-Smoker Preferred Plus Rates		*Non-Smoker Optimum Rates	

RESP

பிள்ளைகளுக்கான கல்விச் சேமிப்புத் திட்டம்

RESP

கனேடிய அரசு வழங்கும் நன்கொடை$7200 வரை பெற்றுக்கொள்ளவும் CLB $2000 வரை பெற்றுக்கொள்ளவும் என்மூலம் விண்ணப்பியுங்கள். RESP இல் 15 வருடங்கள் தொடர்ச்சியான எனது சேவையில் திருப்தியான ஆயிரக்கணக்கான பெற்றோர்கள்



தயாபரன் ஆறுமுகம்

Insurance broker

416-889-3088

905-426-6624

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய இடத்தில் புதுப்பொலிவுடன்

விஜய் அரைக்கும் ஆலை

VIJAY GRINDING MILL

- We Grind Dry Chilli, Spices, Rice Grains, Coffee at Reasonable Price
- Make Your Own Recipe and Healthy Food
- We Grind Wet Rice Too

Open 6 days a week 10:00 am - 8:00 pm
Wed. is closed

- மிளகாய், சகல பலசரக்குப் பொருட்கள், அரிசி வகைகள், தானியங்கள், கோப்பி, நியாய விலையில் அரைத்துக் கொடுக்கப்படும்.
- அரைப்பதற்குத் தேவையான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
- ஊற வைத்த அரிசி அரைத்துத் தரப்படும்.

*Some couditions apply.

YOU CAN GET IT SAME DAY!*

TEL: 416-613-5722, 416-908-3011

127 Westmore Drive #124, Etobicoke, ON, M9V 3Y6

MORTGAGE ALLIANCE

Access Inc.

mortgagealliance.com/juliusebreo
Independantly Owned and Operated Lc: 11404

5 Year Variable 2.10%
5 Year Fixed 2.59%

*Rates are subject to change without notice, OAC**

1st & 2nd Mortgages
Refinancing
0 Down Program
New to Canada
Second Home

Julius Ebreo, AMP

Accredited Mortgage Professional, Mortgage Agent, M13000741

jebreo@mortgagealliance.com

416-428-9466

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகச் செய்திகள்

நேபாள நிலநடுக்கத்தில் 80 லட்சம் பேர் பாதிப்பு -ஐ.நா.

நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக 80 லட்சம் பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. 14 லட்சம் பேர் உணவுக்காக பரிதவித்துவருகின்றனர்.

பூகம்பத்தால் காட்மாண்டு நகரில் பல கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகிவிட்டன. சர்வதேச நாடுகள் அளிக்கும் உதவிப் பொருட்கள் வர ஆரம்பித்துவிட்டாலும், மருந்து, மருத்துவ உபகரணங்கள், உணவு போன்றவற்றுக்கான தட்டுப்பாடு இன்னமும் நீடிக்கிறது. சனிக்கிழமையன்று நேபாளத்தில் 7.8 ரிக்டார் அளவுக்கு ஏற்பட்ட பூகம்பத்தினால், காட்மாண்டு நகரில் கட்டங்கள் நொறுங்கிப் போயிருக்கின்றன. இந்த பூகம்பம் கிராமப்புற பகுதிகளிலும் கடும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த பூகம்பத்தினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 4310ஆக உயர்ந்திருப்பதாக அரசு அதிகாரி ஒருவர் செவ்வாய்க்கிழமையன்று தெரிவித்தார்.

கிட்டத்தட்ட 8,000 பேர் காயமடைந்திருப்பதாக உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் லட்சுமி பிரசாத் தகால் தெரிவித்துள்ளார்.

நேபாளத்திலும் அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் தொடர்ந்து அதிர்வுகள் ஏற்பட்டுவருகின்றன. இதனால், காட்மாண்டு நகரில் வீடுகளில் உறங்குவதற்கு அச்சமடைந்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள், வீதிகளில் படுத்து உறங்கினர்.

தண்ணீர், உணவு, மின்சாரம் போன்றவற்றுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. தொற்றுநோய் பரவக்கூடும் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

ஆரம்பகட்ட மதிப்பீடுகளின்படியும், இந்த பூகம்பம் குறித்த சமீபத்திய விவரங்களின்படியும் 80 லட்சம் பேரும் 39 மாவட்டங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதில் மிகவும் பாதிக்கப்பட்ட 11 மாவட்டங்களில் 20 லட்சம் பேர் வசிக்கிறார்கள்" என ஐக்கிய நாடுகள் சபையின் உறைவிட ஒருங்கிணைப்பாளரின் சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது. எவரஸ்ட் சிகரத்தில் சிக்கியவர்களை ஹெலிகாப்டர்கள் மூலம் மீட்கும் பணி தொடர்ந்து நடந்துவருகிறது.

கடந்த 81 ஆண்டுகளில் நேபாளத்தில் ஏற்பட்டதிலேயே மிக மோசமான பூகம்பம் இதுதான். இதனால், எவரஸட் சிகரத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஏவரஸ்ட்டில் ஏற்பட்ட விபத்துகளில் மிக மோசமான விபத்து இது.

200க்கும் மேற்பட்டவர்கள் மலைப்பகுதியில் சிக்கியிருக்கின்றனர். இருந்தபோதும், ஹெலிகாப்டர்களின் மூலம் அவர்கள் தொடர்ந்து மீட்கப்பட்டுவருகின்றனர். திங்கட்கிழமையன்று 60 பேர் மீட்கப்பட்டனர் என சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கிட்டத்தட்ட நேபாளத்தின் முழு ராணுவமும் காவல்துறையும் தேடுதல் பணியிலும் மீட்புப் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நிலநடுக்கம் நடந்து 50 மணி நேரத்திற்குப் பிறகும், இடிபாடுகளிலிருந்து மக்கள் மீட்கப்பட்டுவருகின்றனர்.

நிறைய பேர் காயங்களுடன் மருத்துவமனைகளை அணுகிவருவதால், மருத்துவர்கள் திணறிவருகின்றனர். போர்வைகள், ஹெலிகாப்டர்கள், மருத்துவர்கள், ஓட்டுனர்கள் போன்றவற்றுக்குப் பெரும் தேவை இருப்பதாக நேபாள அரசு கூறியுள்ளது.

எங்களுக்கு மருத்துவ அணிகளையும் சிறப்பு நிவாரணப் பொருட்களையும் அளித்து உதவ வேண்டுமென வெளிநாடுகளைக் கேட்டுக்கொள்கிறோம். இந்தப் பிரச்சனையிலிருந்து விடுபட, வெளிநாட்டினரின் நிபுணத்துவம் எங்களுக்குத் தேவைப்படுகிறது" என அந்நாட்டின் முதன்மைச் செயலர் லீலா மணி படேல் தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா, பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தங்கள் உதவிகளை அனுப்பிவைத்துள்ளன.

ஆப்கானிஸ்தான் நிலச்சரிவில் 52 பேர் பலி

ஆப்கானிஸ்தானின், வடகிழக்கு பகுதியில் ஒரு கிராமத்தையே அடித்துச்சென்ற மிகப்பெரிய நிலச்சரிவில், குறைந்தது ஐம்பத்து இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தஜிகிஸ்தான் எல்லையை ஒட்டிய ஆப்கானிஸ்தானின் படக்சான் மாகாணத்தில் ஏற்பட்ட இந்த நிலச்சரிவில் நூறு வீடுகள் வரை அழிந்துள்ளன.

பலியானவர்களுள் அனேகமானோர் பெண்களும் சிறார்களுமே என மாகாண அதிகாரி ஒருவர் பிபிசியிடம் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பகுதி, நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், வான்வழியாக மட்டுமே அங்கு செல்ல முடிவதாகவும் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக அங்கு நடக்கும் மீட்புநடவடிக்கைகள் கணிசமான அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளன.

வசந்த காலத்தில் பனி கரைய ஆரம்பிக்கும் சமயத்தில் இந்த பிரதேசம் தொடர்ச்சியாக நிலச்சரிவால் பாதிப்பிற்குள்ளாகிறது.

இந்தோனேசியாவில் எட்டுபேருக்கு மரணதண்டனை நிறைவேற்றம்

இந்தோனேசிய நீதிமன்றத்தால் போதை மருந்து கடத்திய குற்றச்சாட்டின்பேரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட எட்டுபேரின் மரண தண்டனையும் செவ்வாய்க்கிழமை இரவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவர்களுக்கு மன்னிப்பு அளிக்கும்படி சர்வதேச அளவில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளையும் மீறி, மத்திய ஜாவா தீவில் இருக்கும் சிறைக்குள் உள்ளூர் நேரப்படி செவ்வாய்க்கிழமை நள்ளிரவுக்கு பிறகு (புதன்கிழமை துவங்கிய சமயம்) இவர்களின் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இவர்களுடன் மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒன்பதாவது நபரான பிலிப்பைன்ஸ் நாட்டைச்சேர்ந்த மேரி ஜேன் வெலொசோ என்கிற பெண்ணின் மரணதண்டனை கடைசி நேரத்தில் தள்ளிப்போடப்பட்டிருக்கிறது.

போதைமருந்தை கடத்துவதற்கான கருவியாக மேரி ஜேன் வெலொசோவை தான் பணியில் அமர்த்தியதாக கூறி பெண் ஒருவர் பிலிப்பைன்ஸ் நாட்டின் காவல்நிலையத்தில் தன்னைத்தானே ஒப்படைத்துக் கொண்டதைத் தொடர்ந்து, மேரிக்கான மரண தண்டனை நிறைவேற்றம் தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது.

மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட எட்டு ஆண்கள் ஆஸ்திரேலியா, பிரேசில், நைஜீரியா மற்றும் இந்தோனேயாவைச் சேர்ந்தவர்கள்.

தனது குடிமக்களான இருவர் மரணதண்டனையில் கொல்லப்பட்டால் அதற்கான எதிர்வினைகளுக்கு இந்தோனேசியா முகம் கொடுக்கவேண்டி வரும் என்று ஆஸ்திரேலியா எச்சரித்திருந்தது. ஆனால் குற்றவாளிகளை தண்டித்து தடுப்பதற்காகவே இந்த தண்டனை நிறைவேற்றப்படுவதாக இந்தோனேஷியா தெரிவித்திருக்கிறது.

WANT TO BE A DOCTOR?

JOIN ALL SAINTS UNIVERSITY SCHOOL OF MEDICINE
CAMPUSES LOCATED IN DOMINICA AND ST. VINCENT

ENTER DIRECTLY
FROM HIGHSCHOOL TO MEDICAL SCHOOL

LAST 2 YEARS (CLINICAL ROTATIONS) OF EDUCATION DONE IN TEACHING HOSPITALS IN THE USA

MD DEGREE PROGRAMS
- 3 year 4 months for BSc Graduates
- 4 Years 8 months for High School Graduates (includes Premedical Program)

PROVISONAL ADMISSION WITH MIDTERM MARKS
For more information and online application visit: www.allsaintsuniversity.org



ASUDOM ACADEMY OF SCIENCE TORONTO

50% SCHOLARSHIP FOR FIRST 3 YEARS OF ACADEMIC STUDY

Saints Seminar Information

May 10th 2014	July 26th 2014
Toronto	Toronto
Eastown Banquet Hall 2648 Eglinton Ave East, Scarborough, Ontario, M2J 2T7	Hampton Inn Toronto Airport 5515 Eglinton Ave W. Toronto ON M9C 5K5
7pm	7pm

TORONTO ADMISSION OPEN TILL JUNE 29TH
SPECIAL SUMMER MCAT CLASSES IN TORONTO

SEMINAR
January 30 , 2015 (Friday)
Time : 6.00 PM
Location: 5145 Steeles Ave W. Entrance B Suite 210 , North York , M9L 1R5

CANADIAN HEAD OFFICE: 5145 STEELES AVENUE WEST ENTRANCE C SUITE 223 TORONTO, ONTARIO

CALL: 416 743 9222
தமிழில் தொடர்புகளுக்கு: 416 839 6461

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு விற்பதற்கு, வாங்குவதற்கு, வாடகைக்கு கொடுக்க, பெற்றுக் கொள்ள அழையுங்கள்

ரொறன்ரோ மாநகரில் 25 வருடங்களுக்கு மேலாக வியாபாரத்துறையில் முன்னணி வகிப்பவர். அன்றும் இன்றும் எப்பொழுதும் உங்களோடு உதயன் ஐயம்பிள்ளை

Century 21

CENTURY 21 Green Realty Inc., Brokerage*
6980, MARITZ DRIVE, UNIT #8
Mississauga, ON. L5T 1Z3
Office: 905-565-9565
416-293-2121

Uthayan Iyampillai
Sales Representative
Dir: 416-827-1366
Email: iuk2410@gmail

www.iyamhomes.com

Mississauga
HWY 10/HWY 403
BR 3+2, WR 4
Lease $1,850/mth

Richmondhill
Yonge / Bantry
BR 1, WR 1
$279,000

Essa
Mark hart / Stevenson
BR 3, WR 2
$359,888

Brampton
Bovaird Rd. / Great Lakes Dr.
BR 4+1, WR 2
$399,800

Mississaga
HWY 10 / Barondale
BR 3 WR 4
$479,900

Oshawa
Adelaide / Town Line
BR 4+1, WR 3
$535,000

Vaughan
Weston / Rutherford
BR 3, WR 3
$ 549,900



Mississauga
Britania / Credit View
BR 4, WR 3
$589,000

Richmond Hill
Jefferson Side / Yonge
BR 4, WR 3
$595,000

Brampton
Sandalwood / Brisdale
BR 4 WR 4
$ 599,000

Mississauga
9 th Line / Derry
BR 3, WR 3
$599,000

Ajax
Kingston / Avdley
BR 3+1, WR 4
$629,900

Brampton
Bramalea / Sandalwood
BR 4+1, WR 4
$ 649,800



Ajax
Westney / Williamson
BR 5+1, WR 5
$499,900

Brampton
Mississauga Rd. / Olivia Marie
BR 4, WR 3
$839,000

24 மணித்தியாலத்தில் Mortgage வசதிகள் செய்து தரப்படும்
1st, 2nd, 3rd Mortgage

SOLVING THE NORTH AMERICA'S FINANCIAL PROBLEMS

One Family at a time Achieve Your Financial Dreams!



NOW HIRING FULL TIME/PART TIME AGENTS
WE TEACH YOU TO GET LICENSE FOR FREE

நீங்களும் காப்புறுதி முகவராகலாம்

LIFE INSURANCE
TRAVEL INSURANCE
DISABILITY INSURANCE
MORTGAGE INSURANCE
RESP, RRSP
BUSINESS INSURANCE AND MORE

CALL FOR MORE DETAILS
UTHAYAN
416-827-1366

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசி பலன்

01-05-2015 - 07-05-2015

தெல்லியூர் சிறி நடராஜ சர்மா

மேஷம்

அக்கம் பக்கத்தவருடன் கூடுதல் அன்பு வளரும். அனுபவ அறிவை பயன் படுத்தி சில நன்மை பெறுவீர்கள். உடன் பிறந்தவரின் செயலை குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் பராமரிப்பு தேவை ப்படும். புத்திரர் படிப்பு, வேலையில் கூடுதல் அக்கறை கொள்வர். எதிர்மறையானவற்றை சரி செய்வீர்கள். இல்லறத் துணை, உங்க ளின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழி லில் வளர்ச்சி பெற, புதிய அணுகுமுறை உதவும். பணியாளர், தங்களின் கடமையை உணருவர். பெண்கள், சிக்கனம் பின்பற்றுவர் நடை, உடை, செயல் வசீகரமாகும்.

ரிஷபம்

பொறாமை குணம் உள்ளவர்களிடம் விலகுவது நல்லது. குடும்பச் செலவுக்காக பணம் கடன் பெற வேண்டியதிருக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத் திரரின் செயல் சிறப்பு பெற ஆலோசனை சொல்வீர்கள். உடல்நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத் துணை, நீங்கள் விரும் பிய பொருள் வாங்கித் தருவார். தொழில், வியாபாரத்தில் லாப விகிதம் குறைப்பதால் சில நன்மை உண்டு. பணியாளர், குடும்ப நலன் கருதி செயல்படுவர். பெண்கள், கண வர் வழி உறவினர்களிடம் நற்பெயர் பெறுவர்.

மிதுனம்

புதிய இனங்களில் பண வரவு அதி- கரிக்கும். விவகாரங்களில் சுமுகத்தீர்வு கிடை க்கும். தாய்வழி சொந்தங்களின் எண்ணங்க ளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். புத்திரர் நற்செயலால் பெருமை தேடித் தருவர். பண க்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். இல்லறத் துணை ஒற்றுமை கொள்வார். தொழில் வளர அன்பு நிறைந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். பணியாளர், பாராட்டு, வெகுமதி பெறுவர். பெண்கள், வீட்டு உப யோகப் பொருள் வாங்குவர்.

கடகம்

நல்ல முயற்சி அத்தனையும் சிறப் பாக நிறைவேறும். குடும்ப உறுப்பினர்கள் கூடுதல் அன்பு பாராட்டுவர். பொன், பொருள், புகழ் நல் உழைப்பால் வந்து சேரும். சுற்று லா சென்று வர திட்டமிடுவீர்கள். புத்திரரின் மனக் குறையை மாற்றுவீர்கள். இல்லறத் துணையுடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில் சிறக்க அரசு உதவி பெறலாம். பணியாளர், கூடுதல் வேலை வாய் ப்பை ஏற்றுக் கொள்வர். பெண்கள், மகிழ்ச் சிகர வாழ்வு பெறுவர்.

சிம்மம்

பேச்சில் பண்பாடு நிறைந்திருக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு பின்பற் றவும். புத்திரர் நண்பருக்கு இணையாக கருத்து சொல்வர். எதிரி சொந்த சிரமங்க ளால் விலகுவார். இல்லறத் துணையின் மன தில் நம்பிக்கையை வளருங்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணியா ளர், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை ஏற்பதால் நன்மை வளரும். பெண்கள், பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

கன்னி

மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய பணி மேற்கொள்வீர்கள். கால்நடை வளர்ப் பில் லாபம் கூடும். சிலர், புதிய வீடு வாங்கு கிற முயற்சி நிறைவேறும். புத்திரருக்கு நல்ல நண்பர் உதவியாக வருவர். உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத் துணை குடு ம்ப நலம் பேணுவார். தொழில், வியாபாரத் தில் குறுக்கீடு வந்து விலகும். பணியாளர், புதிய தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும்.

துலாம்

சிந்தனை செயல்களில் நேர்மை அதிகரிக்கும். புதியவர்களின் அன்பு மகிழ்ச்சி தரும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். புத்திரர் கடந்த கால தவறுகளை சரி செய் வர். உடல் ஆரோக்கியம் பெற சத்தான உணவு உண்பீர்கள். இல்லறத் துணை வழி சார்ந்த உறவினர் உதவுவர். தொழில், வியா பாரத்தில் உள்ள குறுக்கீடுகளை அகற்று வீர்கள். பணியாளர், கூடுதல் பணி வாய்ப்பை ஏற்பர். பெண்கள், சேமிப்பு பணத்தில் பொருட்கள் வாங்குவர்.

விருச்சிகம்

மனமும், உடலும் புத்துணர்வு பெறும். நன்மைகள் நாளும் தேடி வரும். இயன்ற அளவு தானம், தர்மம் செய்வீர்கள். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். புத்திரரின் எதிர்கால வாழ்வுக்கு உரிய பணிபுரிவீர்கள். எதிர்மறையானவை விலகும். இல்லறத் துணையின் செயல் குளறுபடியா கலாம். தொழில், வியாபாரத்தில் லாப விக- ிதம் கூடும். பணியாளர், நற்பெயர் பெறுவர். பெண்கள், புத்தாடை அணிகலன் வாங்க அனுகூலம் உண்டு.

தனுசு

நண்பர்களின் எண்ணத்திற்கு மாறாக பேச வேண்டாம். சமூக நிகழ்வு மனக்க'டம் தரலாம். நம்பகத்தன்மை இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரருக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு தருவதால், ஆரோக்கியம் மேம்படும். எதிர்ப் பாளரிடம் விலகுவது நல்லது. இல்லறத் துணையின் நற்செயலை பாராட்டுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர், பணியிடத்தில் அதி கம் பேச வேண்டாம். பெண்கள், பணச்செல வில் சிக்கனம் பின்பற்றவும்.

மகரம்

வாழ்க்கைத் தரம் மேம்படும். தன்னை சார்ந்தவர்களுக்கு உதவுவீர்கள். இ'ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். வாகன பயன்பாடு சுமாராக இருக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நலம் பெற மருத்துவ சிகிச்சை உதவும். இல்லறத் துணை ஆலோசனை சொல்வார். தொழி லில் அபிவிருத்தி ஏற்படும். பணியாளர், குறித்த காலத்தில் பணி இலக்கு நிறைவேற் றுவர். பெண்கள், உறவினர் சுப நிகழ்ச்சிக்கு உதவுவர்.

கும்பம்

சவால்களை வெல்ல உரிய் தரு ணம் உருவாகும். நண்பரிடம் பெற்ற உதவி க்கு மறு உபகாரம் செய்வீர்கள். முருகப் பெருமானின் நல்லருள் துணை நிற்கும். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி உண்டு. புத்திரரின் திறமையை வியந்து வாழ்த்துவீர்கள. கால முறை உணவுப் பழக்கம் உடல் நலம் பாது காக்கும். இல்லறத் துணை உங்களின் பணி சிறக்க உதவுவார். தொழிலில் லாப விகிதம் கூடும். பணியாளர், கூடுதல் வேலைவாய்ப்பு சன்மானம் பெறுவர். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர்.

மீனம்

சாமர்த்திய செயல்களால் சிரமம் அணுகாமல் தவிர்ப்பீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை கூடும். வீடு, வாகன பாது காப்பில் உரிய கவனம் வேண்டும். புத்திரரின் சொல் வேதங்களின் கருத்துக்களை பிரதி- பலிக்கும். கண்களுக்கு எளிய பயிற்சியும், தகுந்த ஓய்வும் தர வேண்டும். இல்லறத் துணை நல்லன்பு கொள்வார். தொழில் சிற க்க, இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். பணியாளர், பணித்திறன் வளர்த்துக் கொள் வார். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடை க்கும்.

We are hiring experienced travel consultant with integrity and honesty to join our team.

CreativeTravels.ca

Book with Trust and Confidence

குறைந்த விலை
100% உத்தரவாதம்

ஆசியா. அமெரிக்கா. ஐரோப்பா. ஆபிரிக்கா.
அவுஸ்ரேலியா. மத்திய கிழக்கு மற்றும் அனைத்து
நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்

tico.ca Consumer protection for your travel investment
#50020450

விடுமுறைத் தொகுப்புக்கள் Vacation Packages
விமான சீட்டுக்கள் Flight Tickets
பயண பயணியர் கப்பல் சீட்டுக்கள் Cruise
விடுதிகள் Hotels
வாடகைக் கார்கள் Rental Cars
பயண காப்புறுதி Travel Insurance
சிறப்பு பயண காப்புறுதி Super Visa Insurance
விசா ஏற்பாடுகள் Visa Arragements

LOWEST PRICE PROMISE

IATA Accredited Agent

647-608-8647

www.CreativeTravels.ca
www.facebook.com/CreativeTravels.ca
vijaya@CreativeTravels.ca

open 7 days a week
7 AM to 10 PM

We are hiring experienced travel consultant with integrity and honesty to join our team.

ஜேம்ஸ் மூலிகை மருத்துவ நிலையம்

தீராத நோயினால் நீங்காத கவலையா?

கைநாடி பார்த்து நோயறிந்து நோய் வந்த காரணம், அதன் விபரங்களை உங்களுக்கு விளக்கமாக எடுத்துக்கூறி, ஆயுர்வேத முறைப்படி நூறுவீதம் பக்கவிளைவுகளற்ற மூலிகை மருந்துகள் தந்து சிகிச்சை அளிக்கிறார்.

குழந்தைகளுக்கு: பிறந்த ஒருவாரம் தொட்டு செங்கிரந்தி, கருந்கிரந்தி, சளி, சறளி, அஸ்மா, கிரந்தி, முட்டு, பசியின்மை, மலச்சிக்கல் போன்ற நோய்களுக்கு சில்லாலையில் இருந்து வருவிக்கப்பட்ட கிரந்தி எண்ணை, முக்கூட்டுக் குளிகை, கோரோசனை மாத்திரை ஆகிய மருந்துகளாலும்,

பெண்களுக்கு: மாதவிடாய் கோளாறுகள், கர்ப்பப்பை, சூலகத்தில் ஏற்படும் பிரச்சனைகள், வெள்ளைப்படுதல், தைரொய்ட், நிறைக் கூடிக்குறைதல், புற்றுநோய் மார்பு, குடல், ஈரல், சுவாசப்பை, புற்றுநோய்களை ஆரம்ப காலத்தில் விசேட மூலிகை மருந்துகளில் குணமாக்கப்படும்.

ஆண்களுக்கு: ஆண்மையின்மை, துரித இந்திரிய வெளியேற்றம், ஆண்குறி சுருங்குதல், ஆண்தாது எண்ணிக்கை கூட்டுதல் போன்ற சகல நோய்களுக்கும்,

தோல் நோய்கள்: கட்டுகள், கடிசொறி, எக்சிமா, சோறாசீஸ், தோலில் கறுப்புப் படிதல்.

நிறைகுறைத்தல்: (20-25) இறாத்தல் ஒரு மாதத்தில், பக்க விளைவுகளற்ற மூலிகை மருந்தினால்

மற்றும் பித்தப்பை, சலப்பைக்கல், மூக்கு அடைத்தல், நீங்காத தலைவலி, அஸ்மா, ஆங்கில் வைத்தியத்தால் நிரந்தரமாக மாற்ற முடியாத கொலஸ்ரோல், சலரோகம், இரத்த அழுத்தம் (பிறசர்), வாதம், வாதப்பிடிப்புகள், மொழிவாதம், சளி, பீனிசம், குடற்புண் போன்ற சகல நோய்களும் மீண்டும் வராமல் மாற்ற வைத்திய கலாநிதி ஜேம்ஸ் விமலனை அழையுங்கள்.

சேவை நேரம்: ஏழு நாட்களும் காலை 9.00 - மாலை 9.00

ஜேம்ஸ் விமலன் (Herbalist) DAMS
2813 Eglinton Ave. E. Scarborough
416-605-9775 / 416-613-5733

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாத்

தமிழ்க் கல்லூரி

Canadian Tamil Academy

8 Milner Ave., Scarborough, ON
Tel: 416.757.2006
www.tamilacademy.org
contact@tamilacademy.org

தமிழர் எங்கள் பேர்! தமிழே எமக்கு வேர்!

'துறைகள் தோறும் தமிழ் மாணவர் பெருமையுற வேண்டும்'

என்ற நோக்கத்தில், தமிழ்க் கல்லூரியால் நடத்தப்படும்

திறன் தேர்வு 2015

COMPETITIVE EXAMINATION 2015

விண்ணப்பப் படிவங்களை

தமிழ்க் கல்லூரியின் அனைத்து வளாகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இணையத்தில் பெற்றுக்கொள்ள

www.tamilacademy.org



அறிவியல் – Science (Grade 3 - Grade 8)

கணிதம் – Math (JK - Grade 9)

Languages

தமிழ் – Tamil (Grade 9 - Grade 12)

ஆங்கிலம் – English (JK - Grade 8)

பிரெஞ்சு – French (Grade4 - Grade 8)

இளம் ஆசிரியர் பயிற்சிநெறி:

மாணவர் மையக் கல்வி மற்றும் புதிய தொழில்நுட்ப வளங்களை சரியான வகையில் இணைத்துத் தமிழ் மொழியை எளிதாக, இளநிலை மாணவர்களுக்கு எவ்வாறு தரலாம் என்னும் அடிப்படையில் இளம் ஆசிரியர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. கனடாத் தமிழ்க் கல்லூரியில் தரம் 12 (ஏ எல் 4) பயின்று முடித்த மற்றும் பயின்று வருகின்ற மாணவர்கள் இப் பயிற்சிநெறியில் இணைந்து கொள்ளலாம்.

கனடாத் தமிழ்க் கல்லூரியின் தொடக்க நிலைத் தமிழ் வளாகங்களில் வகுப்பறை உதவியாளர்களாக இணைந்து பின் முழுநேர ஆசிரியர்களாக தொடக்கநிலை- உயர்நிலைகளில் வகுப்புகளில் இணைந்து பணியாற்றக் கூடிய வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

தன்னறிமுக (resume) விவரத்தை ஏப்ரல் 20, 2015க்கு முன்னர் கல்லூரியின் பொது மின்னஞ்சலுக்கு (contact@tamilacademy.org) அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கட்டுரை

யாழ். நல்லூர் அரச செயலக முன்னாள் செயலரும் - இந்நாள் தலைவரும்

வடமாகாணம் அரச அதிகாரிகளால் சீரழியும் நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கும் நிலையில் சில அரச அலுவலக தலைவர்களாலும் சீரழிகிறது. அதாவது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று வந்து தமது திருகுதாளங்களை மேற்கொள்கிறார்கள். அரச அதிகாரிகளுக்கு சளைத்தவர்கள் இல்லை என்று இவர்களும் பல்வேறு விதமான குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

அலுவலகத்தின் மீது மக்கள் கொண்டிருக்கும் அபகீர்த்திகள் பற்றியும் பத்திரிகைகளில் செய்திகளாக வெளிவருவதை நாம் பார்க்க முடிகிறது. அதேவேளை பத்திரிகைகளிலும் வெளிவராத செய்திகளை நாம் இந்தக் கட்டுரை மூலம் பார்க்க முடியும்.

அதாவது இவரின் அரச அலுவலக வேலை மக்களின் வேலை என்றில்லாமல் தான் இலாபம் ஈட்டும் வேலையாகப் பார்க்கிறார் என்பதை மக்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.



யாழ். நல்லூர் பிரதேசத்தில் உள்ள அரச அலுவலகம் ஒன்றின் தலைவரின் தில்லாலங்கடியை இந்தப் பத்தியில் பார்ப்போம். இவரைப் பற்றியும் இவர் பணியாற்றும் அரச

இவர் அரசுக்கு வால் பிடிக்கும் வேலைகளிலும் இறங்கிவிடுகின்றார். தமது பதவியை தக்க வைப்பதற்கும் அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கும் அரசியல்வாதிகள் முயற்சி

செய்து கொண்டிருக்கும்போது இவர். அந்த முயற்சியை கைவிட்டுவிட்டு பணம் சம்பாதிப் பதிலேயே குறியாக இருக்கிறார்.

கெட்ட வழியில் பணம் சம்பாதிக்கிறேனே மக்கள் என் மீது கடுப்பாகி இருப்பார்கள் அடுத்த தேர்தலில் வெற்றி பெற முடியாமல் போய்விடும் என்ற சிந்தனை ஒன்றுகூட இல்லாமல் கேட்டால் சுயேட்சையாகக் கேட்பேன் என்கிறாராம். சுயேட்சையாகக் கேட்டால் அரசு பணம் தரும் என்று தான் தோல்வியடைவது நிச்சயம் என்றாலும் பணம் கிடைக்கும் என்று நினைக்கிறாரே.

இவரை எப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வேட்பாளராக களம் இறக்கியது என்று கேட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் இவரைப் போலல்லவா இருக்கிறது என்று இவரால் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஈழநாட்டுக்காரன்

அப்படி இவர் என்ன செய்தார் என்று துருவினோம். நட்டு கழண்டு வந்தது. "மண்டைக்குள்ள ஒண்டும் இல்லாத இவரால் எப்படி இந்தப் பிரதேசம் முன்னேறும்" என்று அந்த அலுவலகத்தில் பணியாற்றும் ஒருவரைக் கேட்டேன். அவரோ, "யார் சொன்னது மண்டைக்குள்ள ஒன்றுமில்லை என்று அவரின் சேட் ஜீன்ஸ் பொக்கட்டுக்குள்ள எவ்வளவு பணம் இருக்கு என்று பார்த்தியலோ. ஒவ்வொரு நாளும் பணிக்கு வரும்போது வெறும் பொக்கட்டுடன்தான் வருவார். பணி முடிந்து வீட்டுக்குப் போகும்போது பொக்கட் நிறைய பணம் இருக்கும்" என்றார்.

நானோ, "அன்றைய சம்பளத்தை அன்றே எடுத்துக் கொண்டு போகிறாரோ" என்று கேட்டேன். அவரோ, "மக்களிடம் இலஞ்சமாக பறிக்கும் பணமாகும். பணத்தைக் கொடுத்தால் இவரிடம் இருந்து என்ன வேண்டுமானாலும் அனுமதியைப் பெற்று விடலாம்" என்றார்.

நானோ, "எது வேண்டுமென்றாலும் என்றால்" என்று அவனை ஒரு மாதிரிப் பார்க்க, அவனோ "சீ... சீ... அவ்வளவுக்கு கெட்ட ஆள் இல்லை" என்றார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடக்கும் தீய சம்பவங்களுக்கு பணம்தான் முக்கிய காரணமாக அமைகின்றது.

பணத்துக்காக எதை வேண்டுமாலும் செய்யும் அளவுக்கு வந்துவிட்டார்கள். இப்படி இருக்கையில் இவர் என்ன விதிவிலக்கா. மக்களின் வாக்குகளால் பதவிக்கு வந்தவர். மக்களின் அபிவிருத்தி வேலைகளைச் சரியாகச் செய்வதோடு மக்களின் தொழில்துறை முன்னேற்றத்துக்கு இவர் பக்கபலமாக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு தொழில்துறையில் ஈடுபடுபவர்களிடம். புதிய கட்டடம் கட்டுபவர்களிடம் இலஞ்சமாக பணத்தை வாங்கி விட்டு சட்டம் என்று பிழையான முறையில் அனுமதியைக் கொடுத்து விடுகிறார்.

இவருக்கு இலஞ்சம் கொடுப்பவர்களுக்கு ஒரு நீதியும் இலஞ்சம் கொடுக்காதவர்களுக்கு ஒரு நீதியுமாகச் செயற்படுகிறார். இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். மக்களுக்கு சேவை செய்ய வந்தவர் அந்த மக்களுக்கே தீங்கு செய்கிறார் என்றால் இவரை என்னவென்று சொல்ல.

இந்த அரச அலுவலகத்தில் முன்னாள் செயலாளராக இருந்தவர் தற்போது இடமாற்றம் பெற்று வடமாகாண சபையில் நிர்வாக அதிகாரியாக இருக்கிறார். இவர் செய்த காரியங்களைப் பார்த்து பார்த்து இவரும் செய்யத் தொடங்கினார். அப்படி என்ன இந்த நிர்வாக அதிகாரி செய்தார் என்று கேட்கிறீர்களா?

இதோ...

(1) கடந்த 02-05-2008 அன்று முறைகேடான முறையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. நூலக சேவகர் பிறேமையும் சுகாதாரத் தொழிலாளி மயில்வாகனத்தையும் வீதித்தொழிலாளி சதாணந்தனையும் வருமான வரி மேற்பார்வையாளராகவும் முன்னாள் செயலாளரினால் பதவி உயர்வு வழங்கியதோடு வீதித் தொழிலாளியாக நியமனம் பெற்ற ஒருவரை குறுகிய காலத்தில் நூலக சேவகர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

(2) தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து கட்டிட நிர்மாணப் பணியாளர் பயிற்சிக்கு இந்த அரச அலுவலகத்துக்கு வந்திருந்த 7 பேருக்கு கடந்த 01-10-2012 அன்று முன்னைய செயலாளரினால் நியமனம் வழங்கப்பட்டு மாதாந்த வேதனமும் வழங்கப்படுகிறது.

> **இவரின் அரச அலுவலக வேலை மக்களின் வேலை என்றில்லாமல் தான் இலாபம் ஈட்டும் வேலையாகப் பார்க்கிறார் என்பதை மக்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.**

(3) கடந்த ஆண்டு (10-01-2014) மின்னிணைப்பாளர் மற்றும் நூலக சேவகர் பதவிகளுக்கான நேர்முகத் தேர்வும் 11-04-2014 அன்று வேலை மேற்பார்வையாளர் சந்தை மேற்பார்வையாளர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் ஆகிய பதவிகளுக்கான நேர்முகத் தேர்வுகளும் நடத்தப்பட்டன. இந்த நேர்முகத் தேர்வுகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் சென்றிருந்தபோதும் இவர்கள் கொண்டுசென்ற ஆவணங்கள் எதுவும் தேர்வுக் குழுவினரால் பார்வையிடப்படவில்லை.

ஏனெனில் முன்னாள் செயலாளர் இந்நாள் தலைவர் சேர்ந்து தமக்குத் தெரிந்தவர்களுக்கு இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சு.கோகுலகுதன் 15 வருடங்களுக்கு மேல் மின்னிணைப்பாளராகவும் கோ.தயாளன் 15 வருடங்களுக்கு மேலாக நூலகத் தொழிலாளியாகவும் மு.டினேஸ் 7 வருடங்களுக்கு மேலாக வேலை மேற்பார்வையாளராகவும் ந.இரவிச்சந்திரன் இரு வருடங்களுக்கு மேலாக சந்தை மேற்பார்வையாளராகவும் ச.அன்ரனிதாஸ் இரு வருடங்களுக்கு மேலாக சுகாதார மேற்பார்வையாளராகவும் கடமையாற்றியுள்ளனர். இருந்தும் இவர்களது நியமனங்கள் தேர்வுக் குழுவினர் பார்வையிடாதபடி ஆவணங்களை மறைத்து முன்னாள் செயலாளரினாலும் தலைவரினாலும் நிராகரிக்கப்பட்டன.

(4) கடந்த ஆண்டு யாழ். வீதிகளில் நிறுவப்பட்டிருந்த விளம்பரப் பலகைகளையும் இரும்புக் குழாய்களையும் அகற்றுமாறு முன்னாள் செயலாளரினால் உத்தரவு போடப்பட்டு அகற்றப்பட்டது. அகற்றப்பட்ட பொருள்கள் முன்னாள் வடமாகாண பிரதம செயலாளரின் வீட்டில் கொண்டுபோய் போடப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

(5) உள்ளூராட்சி அலுவலகத்தில் நிர்வாக அதிகாரியாக பதவி உயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுச் சென்றபோதும் தான் முதலில் செயலாளராக வேலை செய்த நல்லூர் அரச அலுவலகத்தினை இன்றும் குழப்பி வருகிறார். முன்னாள் வடமாகாண பிரதம செயலாளரின் வீட்டு வேலைகளை நல்லூர் அரச அலுவலக பணியாளர்களைக் கொண்டு செய்து வருகிறார்.

(6) முன்னாள் வடமாகாண பிரதம செயலாளின் சேவை சீரின்மையால் அவரை இடமாற்றுமாறு கோரிக்கையை வடமாகாண முதலமைச்சர் விடுத்தார். அதனைத் தொடர்ந்து முன்னாள் வடமாகாண பிரதம செயலாளர் கொழும்புக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. உள்ளூராட்சித் தகவல்களை முன்னாள் வடமாகாண பிரதம செயலாளருக்கு இவர் வழங்கி வருகிறார்.

தொடர்ச்சி 82ம் பக்கம்...

SHAWN A.RSM
TRUCK & FORK LIFT
Driving School



• உடனடி வேலைவாய்ப்புகள்
• வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: தர்ஷன் / சாண்
416.297.5435
416.829.0603
60 Nugget Ave, Unit 9, Scarborough, ON, M1S 3A8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் ஒலிவர்...

59 ஆம் பக்கத் தொடர்ச்சி

* 2009 ஜூன் மாதம் பொருளாதாரப் பின்னடைவின் இறுதியில் தொழில் புரிந்த கனடியர்களை விட 1.2 மில்லியனுக்கு மேற்பட்ட கனடியர்கள் தற்பொழுது தொழில் புரிகிறார்கள். மேற்படி தேறிய புதிய தொழில்களுள் பெரும்பாலானவை தனியார் கைத்தொழில் நிறுவனங்களில் அதிக சம்பளத்துடன் கூடிய முழுநேரப் பதவிகளாக இருந்துள்ளன.

* 7 நாட்டுக் குழுமத்துள் (G-7) மிகச்சிறந்த பொருளாதார சாதனைகளுடன் மீட்சிபெற்ற நாடுகளுள் கனடா ஒன்று.

* மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) பொருளாதாரப் பின்னடைவைக்கு முந்திய மட்டங்களிலிருந்து கணிசமானளவு உயர்ந்துள்ளது - இது 7 நாட்டுக் குழுமத்துள் மிகச்சிறந்த சாதனை ஆகும்.

* தொடர்ந்து ஏழாவது ஆண்டாக கனடாவின் வங்கி முறைமையே உலகில் மிகச்சிறந்த வங்கி முறைமை என்று உலக பொருளாதார அரங்கு அதன் உலகளாவிய ஈடுகொடுப்பு குறித்த ஆண்டறிக்கையில் கணித்துள்ளது.

* 7 நாட்டுக் குழுமத்துள் (G-7) கனடாவிலேயே மொத்த வணிக வரிச்செலவுகள் மிகவும் குறைவு என்றும், அவை அமெரிக்காவில் உள்ளவற்றைவிட 46 சதவீதம் குறைவானவை என்றும் கே.பி.எம்.ஜி. (KPMG) கூறுகிறது.

* உலகிலேயே வணிகக் கவர்ச்சி மிகுந்த நாடுகளுள் இரண்டாவது நாடு கனடாவே என்று புளூம்பேர்க் (Bloomberg) கணித்துள்ளது.

* நாணயநிலை கணிக்கும் அமைப்புகள்- Moody's Investors Service, Fitch Ratings, Standard & Poor's and DBRS-நான்கும் மீண்டும் கனடாவின் உச்ச நிலையை உறுதிப்படுத்தியுள்ளன.

எதிர்வரும் ஆண்டிலும் கனடா அதன் உச்சநிலையை (AAA) பேணிக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கோள்

"2015ம் ஆண்டுக்கான மேற்படி பொருளாதார நடவடிக்கைத் திட்டம் தொழில்வாய்ப்புகளையும், அபிவிருத்தியையும், நெடுங்காலச் செழிப்பையும் தோற்றுவிக்கும். நாம் வாக்குறுதி அளித்தது போலவே இது ஒரு சமவரவுசெலவுத் திட்டம். பாடுபட்டு உழைக்கும் தனியாட்களுக்கும் குடும்பங்களுக்கும் வரிக் குறைப்பு வழங்கும் திட்டம். மதிநலமும் நெறிதிறமும் வாய்ந்த திட்டம். கனடியர்கள் மேலும் வளம்பெற்று, மேலும் பத்திரமாக, உலகில் எமது நாடு எய்தியிருக்கும் இடத்தில் மேலும் நம்பிக்கையுடன் வாழ்வதற்கு ஏதுவான திட்டம். பிரதம மந்திரி ஸ்டீபன் காப்பர் அவர்களின் வலிமைவாய்ந்த தலைமையில் கனடாவின் அரசிறை அகம் நன்னிலையில் இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் கனடியர்கள் ஆறித்தேறி அமர்ந்து கொள்ளலாம்".

நிதி அமைச்சர் ஜோ ஒலிவர்

மேலதிக விபரங்களுக்கான இணைப்பு

http://www.canada.ca/budget2015

இலங்கைச் செய்திகள்

சிகிரியா குன்றோவியச் சுவரில் கிறுக்கிய பெண் விடுதலை

சிகிரியா மலை ஓவியச் சுவரில் கிறுக்கியதால் தண்டனை அடைந்த பெண் இலங்கை ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு நேற்று வியாழக்கிழமை சிறைச்சாலையிலிருந்து விடுதலையானார்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த பெப்ரவரி மாதம் 14ம் திகதி முதல் கைதியாக இருந்த 28 வயதான சின்னத்தம்பி உதயசிறி சிறையிலிருந்து விடுதலையாகி தனது குடும்பத்துடன் மீண்டும் இணைந்துள்ளார்

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியை சேர்ந்த இவர் பழமையும் பாரம்பரியமும் மிக்க சிகிரியாவிற்கு பெப்ரவரி மாதம் 14ம் திகதி சுற்றுலா சென்றிருந்த் வேளை மலைக்குன்றிலுள்ள புராதன ஓவியங்கள் கொண்ட சுவரின் மீது பதிக்கப்பட்ட கண்ணாடியில் தனது பெயரை எழுதினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தம்புள்ள காவற்றுறையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

தமிழரசு...

15 ஆம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் "பயங்கரவாதிகளுக்குத்தான் நாங்க ஆதரவு" என்று சொல்வதை நாம் கேட்டுள்ளோம். அது அப்பாவித்தனமான கூற்று.

ஆனால் தந்தை செல்வா ஆரம்பித்த கட்சியில் பிந்திவந்து முளைத்த கொம்புகள், தாம் சட்டத்தரணிகள், முன்னாள் அரச உத்தியோகத்தர் என்ற மமதையில் முன்னாள் போராளிகள், மாவீரர்களைப் பயங்கரவாதிகள் என்றும் ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதம் எனவும் கூறும்போது எமது இதயம் வலிக்கிறது.

எந்தத் தைரியத்தில் இவர்கள் எமது பிள்ளைகளைக் கொச்சைப்படுத்துகிறார்கள். இதை எம்மால் ஏற்க முடியாது. இவர்களின் கூற்று தொடர்பாக தமிழரசுக் கட்சி தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும்.

அதன் அடிப்படையிலே நாங்கள் எமது எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக முடிவெடுக்க வேண்டியுள்ளது. இவர்கள் அம்பாந்தோட்டையிலோ பொலநறுவையிலோ அத்தனகலயிலோ போட்டியிடப் போகின்றார்கள் என்றால் பிரச்சினையில்லை. அடுத்த தேர்தலுக்கும் எம்மிடமல்லவா வரப்போகிறார்கள்.

(1) "பயங்கரவாதத்தை அழித்த இந்த அரசாங்கத்துக்கு விசர் நாய்களைக் கொல்வது என்பது கஸ்ரமான செயலல்ல" ஜூன் 9 ஆம் திகதி 2011 ஆம் ஆண்டு நாடாளுமன்றில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் ஆற்றிய உரை இது. நாடாளுமன்ற உரைகளைத் தொகுத்து வெளியிடும் அரசின் 'கசாட்' ல் பக்கம் 1336 இல் இவ்விடயம் காணப்படுகிறது. விலங்குகள் நலச்சட்டம் மீதான விவாதத்திலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

இவர் முன்னாள் அரச ஊழியர். சில காலம் பத்திரிகையாளராகவும் தன்னை இனம் காட்டிக்கொண்டவர், ஆகையால் இச்சொல்லின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டுதான் சொல்கிறார். தீட்டிய மரத்திலேயே கூர் பார்க்கும் முயற்சி இது. பயங்கரவாதம் என்ற பெயரால் யாரைச் சுட்டுகிறாரோ அவர்கள் மூலமே அரசியலுக்கு வந்தவர். அவர்கள் பரப்புரைக்காக ஐரோப்பிய நாடுகளுக்கு இவரை அனுப்பியபோது பேசாமல் கொள்ளாமல் தனது மகனையும் கூட்டிக்கொண்டுபோய் ஜேர்மனியில் விட்டவர். இன்று அந்த மகன் அரசியல் அடைக்கலம் பெற்றுள்ளார்.

உண்மையாகப் போராடியோர் நடுத்தெருவில் நிற்கின்றனர். ஏறிவந்த ஏணியை உதைத்த இவர்கள் அடுத்த தேர்தலுக்கு எதில் தொங்கி இறங்கி மக்கள் முன் வரப்போகிறார்கள்?

(2) கிளிநொச்சி நீதிமன்றில் தென்னிந்திய திருச்சபை தொடர்பான வழக்கொன்று நடைபெற்றது. அதில் ஒரு பகுதியினருக்காக வாதிட்ட தேசியப் பட்டியல் எம்.பி சுமந்திரன் மறுதரப்பினரை "இவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர்கள்" என்று நீதிபதிக்குச் சுட்டிக்காட்டினார். இங்கு ஒரு அரசு இருந்தது. அது நாற்படைகளையும் கொண்டிருந்தது. அதற்கென ஒரு நிர்வாக அமைப்பிருந்தது.

அதற்கு கிளிநொச்சிதான் தலைநகரமாக இருந்தது என்பதை உணர்ந்ததாலோ என்னவோ நீதிபதி இவரது வாதத்தை கணக்கில் எடுக்கவில்லை. ஒரு வழக்கில் இருந்து கிடைக்கக்கூடிய சில ஆயிரம் ரூபா பணத்துக்காக எமது பிள்ளைகளைப் பயங்கரவாதிகள் என்று கூறுகின்றார் என்றால் எமது தலைவிதியை நிர்ணயிக்கும் விடயங்களில் இவர் எவ்வாறு நடந்துகொள்வார்?

காணாமல் போனோரின் குடும்பங்களை பிரிட்டிஸ் பிரதமர் சந்திக்க முடியாமல் போனமை, எல்லோரும் சர்வதேச விசாரணை வேண்டும் என வலியுறுத்துகையில் உள்ளக விசாரணை பயனளிக்கும் என்று இவர் தனித்தவில் வாசிப்பது போன்ற விடயங்களின் பின்னணியில் என்னென்ன சூத்திரங்கள் இருக்கும் என்பதைத் தனியாக விபரிக்க வேண்டுமா? எனவே இந்த இருவரின் விடயத்திலும் கட்சியின் தலைவர் செயலர் உறுதியான முடிவு எடுக்கவேண்டும்.

இவர்கள் தமது நடத்தைகள், கூற்றுக்கள் தொடர்பாக எமது மக்களிடம் குறிப்பாக மாவீரர்களின் பெற்றோரிடம் முன்னாள் போராளிகளிடமோ மன்னிப்புக் கேட்கவேண்டும்,

வருத்தம் தெரிவிக்கவேண்டும். அதற்கான வழிமுறைகளை தலைவரும் செயலரும் ஆராய வேண்டும் இல்லையேல், இந்த இருவரின் கருத்துகளையும் கட்சி வழிமொழிவதாகத்தான் கொள்ளவேண்டும். இந்த விடயத்தில் விசமத்தனமான மௌனம் சாதித்தால் அது களநிலையைப் புரிந்ததாக இருக்காது.

முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்களின் வாக்குகளைப் பிரித்தெடுக்க ரணில்–வித்தியாதரன் வியூகங்களை வகுத்து வருகின்றனர். கடந்த தேர்தலில் மக்கள் மனமொத்து வாக்களித்திருந்ததால் வாக்குகள் சிதறடிக்கப்படாமல் இருந்திருந்தால் வெற்றிலைக்கு இரு ஆசனங்கள் மட்டும் கிடைத்திருக்கும்..

ஐக்கிய தேசியக் கட்சி ஆசனத்தைப் பெற்றிருக்காது. வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர் மீதான நம்பிக்கை வாக்களிப்பு வீதத்தை அதிகரித்தது. அந்த நம்பிக்கையில் எங்களுக்கு யாரின் வாக்குகள் போனாலும் கவலையில்லை என கட்சி தீர்மானிக்குமாயின் பயனடையப்போவது டக்ளசும் ரணிலுமதான். ஏனெனில் அவர் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின் ஒருகளுக்கென்று உள்ள வாக்குகள் கட்டாயம் விழும். ஆனால் ஏனைய மக்களின் வாக்களிப்பு வீதம் மிகக்குறையும். இதிலும் வாக்குகள் வேறு அணிகளுக்கு சிதறடிக்கப்படுமாயின் நிலைமை கவலைக்கிடமே.

"இறுதி யுத்தத்தில் இடம்பெற்றது இனப் படுகொலையே" என வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானத்தை கிழக்கு மாகாண சபையிலும் கொண்டுவரவேண்டும்.

அதுபோல பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும், பிள்ளையான் காலத்தில் பொலநறுவைச் சிங்களவருக்கு வழங்கப்பட்ட மேய்ச்சல் தரைக் காணிகளை மீளப்பெற வேண்டும், கல்முனையில் தனியான தமிழ் பிரதேச செயலகத்தை அமைக்கக் கோர வேண்டும் என மொத்தம் 4 கோரிக்கைகளை பிரேரணையாகக்கொண்டு வரவேண்டும் எனக் கோரியபோதும், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரத்தினத்தால் "வெங்காய அமைச்சர்" எனக்குறிப்பிடப்படும் செயலர் கி. துரைராஜசிங்கம் மௌனமாக இருக்கிறார். ஜே.வி.பி நீதிமன்று மூலம் வடகிழக்கு இணைப்பைப் பிரித்தது. தமிழரசுக் கட்சி தனது நடவடிக்கைகள் மூலம் வடக்கு வேறு கிழக்கு வேறு என்று உணர்த்துகிறது என்றே கொள்ளவேண்டியுள்ளது.

ஏனெனில் இனப்படுகொலை என்ற தீர்மானம், அரசியல் கைதிகள் விடுதலை போன்ற தீர்மானங்களை வடக்கு மாகாண சபை ஏற்கெனவே நிறைவேற்றியுள்ளதல்லவா?

இக்கட்டுரையைப் படிக்கும் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த மாவீரர் முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு இதனை அனுப்பி உதவுங்கள். பெரும்பாலும் விகிசாதாரத் தேர்தல் முறையின்கீழ் தான் அடுத்த பொதுத் தேர்தல் நடக்கவுள்ளது போலுள்ளது.

தொகுதி வாரியான தேர்தல் என்றால் சுமந்திரன் போட்டியிடும் தொகுதியிலிருந்து டக்ளஸ் வித்தியாதரனோ தெரிவாகும் நிலையுள்ளது. பிரபாகரன் பிறந்த வடமராட்சி மண்ணில் இருந்து போராளிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறும் சுமந்திரனுக்கு வாக்களிக்க மாவீரர் குடும்பத்தினர் முன்னாள் போராளிகள் செல்வார்கள் எனக் கட்சி நினைத்தால் அது யதார்த்தத்திற்கு முரணானது.

இவர்கள் இருவரையும் வேட்பாளர்களாக நிறுத்துவதா இல்லையா என்பதைக் கட்சி முடிவெடுக்கட்டும். ஆனால் இப்போதே அடுத்த தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக கனடிய ஊடகமொன்றுக்கு சுமந்திரன் கூறியுள்ளார். இதில் குறிப்பாகக் கூறவேண்டிய விடயம் போட்டியிட தான் கட்சியில் முறைப்படி விண்ணப்பிக்கத் தேவையில்லை என்ற அவரது இறுமாப்பான நிலைப்பாடு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின் ஒருமித்த நிலைப்பாடு எடுக்க முன்னரே இவரால் இப்படிக் கூறமுடிகின்றதென்றால் கட்சி யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது. மாவீரர் முன்னாள் போராளிகள் குடும்பங்களே கட்சியின் பதிலுக்கும் நடவடிக்கைக்கும் காத்திருப்போம்.

சுமந்திரனின் கொடும்பாவி எரித்தமைக்குப் பொங்கியெழுந்த வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் மற்றும் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் நல்ல தையல்காரரிடம் கொண்டுபோய் தமது வாயைத் தைக்கிறார்களா அல்லது மெல்லிய முணுமுணுப்பையாவது வெளியிடுவார்களா?

கடந்த 16 ஆம் திகதி கொழும்பு மகசீன் சிறையில் ஏச் வாட்டுக்கு சுமந்திரன் சென்றுள்ளார். இவருடன் வடக்கு முதல்வரின் அன்பளிப்புக்களைக்கொண்டு மாகாண சபை உறுப்பினர்கள் சயந்தன்,அஸ்மின்

ஆகியோரும் சென்றனர். "உங்களது விடயங்களை வெளியில் எவருக்கும் தெரிவிக்காதீர். அதனால் எந்தப் பயனும் உங்களுக்கு விளையாது என்று சுமந்திரன் தெரிவித்ததாக அறியமுடிகிறது. இதனை ஒரு எச்சரிக்கையாகவோ மிரட்டலாகவோ தான் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது பயங்கரவாதிகள் என்று தன்னால் குறிப்பிடப்படும் இவர்களின் விடயங்கள் தொடர்பாக மற்றவர்கள் ஏதும் நடவடிக்கை எடுக்கத் தான் அனுமதிக்கப்போவதில்லை எனவும் கருதவேண்டியுள்ளது.

அத்துடன் பொது மன்னிப்பு வழங்குங்கள் என்று கேட்கவேண்டாம் என்றும் கூறியுள்ளார். உங்களது விடுதலைக்கு இந்த அரசு நீடிக்க வேண்டும்" என்றும் கூறினாராம்.

அரசோ இன்றோ நாளையோ என்றுள்ளது. இந்த நிலையில் இந்த அரசு நீடிக்க வேண்டும் என்றால் அதுவரை உங்களுக்கு விடுதலை இல்லை என்ற கருத்துத்தான் மறைமுகமாக ஒலிக்கிறது. மற்றபடி "கடந்த அரசின் காலத்தில் நான் கோத்தபாயவுடன் டின்னருக்குப் போவதுண்டு. அங்கு உங்கள் விடயங்களைக் கதைப்பேன், நான் அரசுத்தரப்புடன் கிரிக்கெட் ஆடியது ராஜதந்திரம்" என்று கூறியதைப்போல இந்த அரசிலும் இவர்களின் விடுதலை தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் உட்பட பல வர்ணங்களை விட்டுள்ளார்.

இவர் தம்மை பயங்கரவாதிகள் என்று குறிப்பிட்டதை அரசியல் கைதிகள் அறிவர். என்ன செய்வது விடுதலை கிடைக்கும் வரையில் அவர்கள் ஊமைகள் "ஊமைகள் சபையில் உளறுவாயன் வித்துவான்" என்று வித்துவான் க.ந.வேலன் ஒரு முறை குறிப்பிட்டார். உண்மையாக தமது நலனில் அக்கறை கொண்டவர்களை அரசியற் கைதிகள் சரியாகவே இனங்கண்டுள்ளனர். அதனைத் தமது குடும்பத்தினருக்குத் தெரிவிக்காமலா இருப்பர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமைச்சர் ஒலிவர் முன்வைக்கும் சமவரவுசெலவுத் திட்டமும்

தொழில்வாய்ப்புகள், அபிவிருத்தி, பாதுகாப்புக்கான திட்டமும்

நிதி அமைச்சர் ஜோ ஒலிவர் 2015ம் ஆண்டுக்கான பொருளாதார நடவடிக்கைத் திட்டத்தை முன்வைத்தார். இது காப்பர் அரசாங்கத்தின் சமவரவுசெலவுத் திட்டம் தொழில்வாய்ப்புகள், அபிவிருத்தி, பாதுகாப்பு என்பவற்றுக்கான திட்டம். 2015ம் ஆண்டுக்கான பொருளாதார நடவடிக்கைத் திட்டம்:

* 2015ல் வரவுசெலவுத் திட்டத்தை சமப்படுத்துவதாக காப்பர் அரசாங்கம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும். கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் என்றுமில்லாவாறு கனடியர்கள் மத்திய அரசுக்குச் செலுத்தும் வரித்தொகையை மிகக்குறைந்த நிலையில் வைத்திருக்கும் அதேவேளை, சமவரவு செலவுத் திட்டங்களுக்கு அரசாங்கம் மீளும்.

* கனடாவை மேன்மேலும் சூழ்நிலைக்கு ஈடுகொடுக்கும் நாடாக்கி, தொழில்வாய்ப்பைத் தோற்றுவிக்கும் வணிக நிறுவனங்களைச் செழிக்க வைப்பதன் மூலமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முறையில் அடிப்படைக் கட்டமைப்புக்குத் துணை நிற்கும் அரசாங்கத்தின் பணியை விரிவுபடுத்தும் வண்ணம் புதிய, புதுமைவாய்ந்த முதலீடுகளை மேற்கொள்வதன் மூலமும் தொழில்கொள்வோர் நாடும் தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் மிகவும் தேர்ச்சிவாய்ந்த தொழிலாளர்களைப் பயிற்றுவதன் மூலமும் தொழில்வாய்ப்புகளுக்கும் அபிவிருத்திக்கும் துணைநிற்கும்.



* பாடுபட்டு உழைக்கும் குடும்பங்களுக்கும் தனியாட்களுக்கும் தொடர்ந்து வரிக்குறைப்பு மற்றும் பிற உதவிகளை வழங்கும் அதேவேளை அனைவருக்கும் வாய்ப்புகளைப் பெருக்குவதன் மூலம் குடும்பங்களும் சமூகங்களும் வளம்பெறத் துணைநிற்கும்.

* கனடிய ஆயுதப் படைகளுக்குத் துணை நின்று, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயங்கரவாத ஆபத்திலிருந்து கனடியர்களைப் பாதுகாப்பதன் மூலம் கனடியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

வரவுசெலவுத் திட்டத்தை சமப்படுத்தல்:

* பாரிய பொருளாதார பின்னடைவின் உச்சத்தில் $55.6 பில்லியனாக இருந்த பற்றாக்குறை தற்பொழுது குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2015-16ல் $1.4 பில்லியன் மிகை ஏற்படும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

* பாரிய பொருளாதார பின்னடைவுக்கு முந்திய $37 பில்லியன் படுகடனை காப்பர் அரசாங்கம் செலுத்திக் குறைத்துள்ளது. 7 நாட்டுக் குழுமத்துள் (G-7) கனடிய அரசாங்கத்தின் மொத்த தேறிய படுகடன் சுமை ஆகக்குறைவாக இருப்பதற்கும், 20 நாட்டுக் குழுமத்துள் (G-20) அது ஆகக்குறைவானவற்றுள் ஒன்றாக இருப்பதற்கும் அதுவே முக்கிய காரணம்.

* தொழில்வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதன் ஊடாகக் கனடியர்களின் கைகளில் அதிக பணத்தை மீதப்படுத்தும் காப்பர் அரசாங்கத்தின் அரசிறை நிர்வாகக் கொள்கையை உள்ளடக்கிய சமவரவுசெலவுத் திட்ட சட்டவாக்கம் முன்வைக்கப்படவுள்ளது.

* கனடிய குடும்பங்களும் தனியாட்களும் இறுக்கும் வரிகளை காப்பர் அரசாங்கம் மேலும் குறைப்பதற்கு சமவரவுசெலவுத் திட்டம் வழிவகுக்கிறது.

தொழில்வாய்ப்புகளுக்கும் அபிவிருத்திக்கும் துணைநிற்றல்:

* 2019ம் ஆண்டுக்கு முன்னர் சிறுவணிக வரியை 9 சதவீதமாகக் குறைத்தல் - தற்போதைக்கும் 2019ம், 20ம் ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் $2.7 பில்லியன்வரை மதிப்பிடப்பட்ட தொகையை தொழில்வாய்ப்பு தோற்றுவிக்கும் சிறுவணிக நிறுவனங்களுக்கும், அவற்றின் உடைமையாளர்களுக்கும் மீட்டளித்தல்.

* பொறிவகைகள், உபகரணங்கள் என்பவற்றைப் பொறுத்தவரை உற்பத்திவளத்தைப் பெருக்கும் முதலீட்டை ஊக்குவிக்கும் பொருட்டு உற்பத்தியாளர்களுக்கு 10 ஆண்டுக்கான துரித மூலதனச் செலவு உதவிப்படி வழங்குதல்.

* பண்ணை, கடற்றொழில் வணிக நிறுவனங்களுக்கான வாழ்நாள் மூலதன ஆதாயவரி விலக்கை $1 மில்லியன் வரை அதிகரித்தல்.

* கனடா சிறுவணிக நிதியீட்டுத் திட்டத்தின் ஊடாக கனடிய சிறு வணிக நிறுவனங்களுக்கு நிதிவசதியை மேம்படுத்தல்.

* கனடா வணிக விருத்தி வங்கி ஊடாகவும், கனடா ஏற்றுமதி விருத்தி அமைப்பு ஊடாகவும் சிறிய, மத்திம வணிக நிறுவனங்களுக்கு உதவும்பொருட்டு அளிக்கப்படும் சேவைகளை விரிவுபடுத்தல்.

* இளந்தொழில் முயற்சியாளர்களுக்குத் துணை நிற்கும் பொருட்டு இரண்டு ஆண்டுகளுக்கு கனடா இளந்தொழில் முயற்சி அமைப்புக்கு $14 மில்லியன் வழங்குதல்.

* வணிக உடைமையாளர்களாக விளங்கும் பெண்கள் வெற்றியீட்ட உதவும்பொருட்டு தொழில்முயற்சியில் ஈடுபடும் பெண்களுக்கான நடவடிக்கைத் திட்டத்துக்குத் துணை நிற்றல்.

* புதுமை படைக்கும் நிறுவனங்கள் விருத்தியடைந்து, தொழில் வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதற்கு ஏதுவாக தொழில்முயற்சி மூலதன நடவடிக்கைத் திட்டத்தின் ஊடாக உதவி புரிதல்.

* மாகாணங்களும், ஆள்புலங்களும் குறிக்கப்பட்ட செம்முத்திரைத் தொழில்களில் பணிப்பயிற்சி, சான்றிதழீட்டு விதிமுறைகளை இயைபுபடுத்த ஏதுவாக அவற்றுக்கு உதவியளித்தல்.

* அறிவியல் மற்றும் தொழினுட்பவியல் புத்துருவாக்கம் குறித்த அரசாங்கத்தின் புதிய திட்டத்தை முன்னகர்த்தும் பொருட்டு ஐந்து ஆண்டுகளுக்கு $1.5 பில்லியனுக்கு மேற்பட்ட நிதியை உலகத்திலேயே மிகச்சிறந்த ஆராய்ச்சி, அபிவிருத்தியில் முதலீடு செய்தல்.

* புதிய கனடா நிர்மாணத் திட்டத்துக் கமைய மாகாண, ஆள்புல, மாநகர அடிப்படைக் கட்டமைப்புக்கு தொடர்ந்தும் ஆண்டுதோறும் சராசரியாக $5.35 பில்லியன் வழங்குதல்.

* மாநகரங்களில் ஊர்திப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும், ஊர்திப் போக்குவரத்து முடங்காது பார்ப்பதற்கும் வேண்டிய புதிய அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்குடன் கூடிய புதிய பொது பயண நிதியம் ஒன்றைக் குறித்து 2017-18ல் தொடங்கி ஈராண்டுகளுக்கு $ 750 மில்லியன், அதன் பிறகு ஆண்டுதோறும் $1 பில்லியன் முதலீடு செய்தல்.

குடும்பங்களும் சமூகங்களும் வளம்பெற உதவுதல்:

* 2015ம் ஆண்டுக்கும் அடுத்த ஆண்டுகளுக்கும் செல்லுபடியாகும் வண்ணம் வரியற்ற வருடாந்த சேமிப்புக் கணக்கிற்கான உதவுதொகையை $10,000 வரை அதிகரித்தல்.

* முதியோர் தமது ஓய்வுகால சேமிப்பை மேலும் மீதப்படுத்தி, தமது ஓய்வுகால வருமானத் தேவைகளை மேலும் சிறப்பாக நிறைவேற்ற வழிவகுக்கும் பொருட்டு பதிவுற்ற ஓய்வூதிய வருமான நிதியிலிருந்து மீட்கும் ஆகக் குறைந்த தொகைகளைக் குறைத்தல்.

* முதியோரும் மாற்றுத்திறனாளிகளும் சுயாதீனமாக வாழும் வண்ணமும், தத்தம் வீடுகளில் தங்கியிருக்கும் வண்ணமும் அவர்களின் வீடுகளை மேலும் பத்திரமானவையாகவும், மேலும் மாற்றுத்திற வசதிகள் கொண்டவையாகவும் மாற்றுவதற்கு வேண்டிய திருத்த வேலைகளுக்கான செலவுகளை இறுப்பதற்கு உதவுமுகமாக வீட்டு மாற்றுத்திறவசதி வரிக் கழிவு புகுத்தல்.

* குறுங்கால கல்வித்திட்ட மாணவர்கள், கனடா தாழ்ந்த, மத்திம வருமான மாணவர்க்கான மானியம் பெறும் தகுதியை விரிவாக்குவதன் ஊடாக இரண்டாம் நிலைக்கு மேற்பட்ட கல்வி பயிலும் வசதியைப் பெருக்குதல்.

* தேவைகளைக் கணிக்கும் முறைமைக் கமைய பெற்றோரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் உதவுதொகையைக் குறைப்பதன் ஊடாக கனடா மாணவர் கடன் திட்டம் குடும்பங்களுக்கு உதவ வகைசெய்தல்.

* சமூக நல வீட்டு வசதி வழங்குவோர் தமது புதுப்பிக்க முடியாத, நெடுந்தவணை அடைமானங்களைத் தண்டமின்றித் திருப்பிச் செலுத்த அனுமதிப்பதன் ஊடாக கனடாவில் சமூகநல வீட்டுவசதிக்கு உதவும் நோக்குடன் எங்கள் சமூகங்களில் மிகவும் நலிந்து வாழ்வோருக்கு 2016-17ல் தொடங்கி நான்கு ஆண்டுகளுக்கு $150 மில்லியன் வழங்குதல்.

* பார்வை மட்டுப்பட்டவர்களுக்கு அச்சிட்ட பொருள்வகைகள் கிடைக்கும் வசதியை மேம்படுத்தல்.

* கனடிய கடல்நாய் ஆக்கங்களுக்கு புதிய சந்தைவாய்ப்பு ஈட்டுவதற்கு உதவும் பொருட்டு ஐந்து ஆண்டுகளுக்கு $5.7 மில்லியன் வழங்குதல்.

* மறவர்களும் அவர்களுடைய குடும்பங்களும் தமக்கு வேண்டிய உதவி பெறும் வண்ணம் மிதமான கடுமையான வலுவினத்துக்கு உள்ளாகிய மறவர்களுக்கு புதிய ஓய்வுகால வருமான உதவிப்படி வழங்குதல் மாற்றுத்திற மறவர்களுக்கான நிரந்தர பாதிப்பு உதவிப்படி வசதியைப் பெருக்குதல், மாற்றுத்திற பகுதி நேர சேமப்படை மறவர்களுக்கான ஊதிய இழப்பு உதவிப்படியை அதிகரித்தல், பராமரிப்பவர்களின் நலன்கருதி புதிய வரியற்ற குடும்ப பராமரிப்பாளர் நிவாரண உதவிப்படியைத் தோற்றுவித்தல், மறவர்களுக்கு தனித்தனி உதவி கிடைக்கும் வாய்ப்பை பெருக்குதல்.

* பாரதூரமாக நோய்வாய்ப்பட்ட மற்றும் இறக்கும் தறுவாயிலுள்ள குடும்ப அங்கத்தவர்களைப் பராமரிக்கும் கனடியர்களுக்கு மேலும் துணைநிற்கும் வண்ணம் ஆறு கிழமைகளுக்கு வழங்கப்படும் தொழில்வாய்ப்புக் காப்புறுதிக் கருணைப் பராமரிப்பு உதவிப்படியை ஆறு மாதங்களுக்கு வழங்குதல்.

கனடியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்:

* கனடிய ஆயுதப் படைகளுக்கு 10 ஆண்டுகளுக்கு ஏறத்தாழ $12 பில்லியன் வழங்கி தேசிய பாதுகாப்பு நிதியை அதிகரிப்பதன் ஊடாகக் கனடா தொடர்ந்தும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் போரிடும் வல்லமையுடன் பணியாற்றத் தயாரான படையினரைத் களமிறக்கும் நாடாக விளங்குவதை உறுதிப்படுத்தல்.

* ஈராக்-சிரியா இஸ்லாமிய அரசை (ISIS) எதிர்ப்பதற்கு கனடிய ஆயுதப் படைகளைக் களமிறக்க உதவும்பொருட்டு 2015-16ல் தேசிய பாதுகாப்புக்கு $360 மில்லியன் வழங்குதல்.

> 2015ம் ஆண்டுக்கான பொருளாதார நடவடிக்கைத் திட்டம் தொழில்வாய்ப்புகளுக்கும் அபிவிருத்திக்கும் துணை நிற்கிறது. குடும்பங்களும் சமூகங்களும் வளம்பெற உதவுகிறது. கனடியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறது.

* கனடிய தேசிய காவல்துறை (RCMP), கனடிய பாதுகாப்பு உளவுச் சேவை (CSIS), கனடா எல்லைச் சேவை முகமையகம் (CBSA) என்பவற்றுக்கு மேலதிக வளங்களை அளித்து பயங்கரவாதத்தை எதிர்த்து நிற்றல்.

* வெளிநாட்டு உளவுத்தகவல் திரட்டும் கனடாவின் திறனைப் பெருக்குதல்.

* எமது எல்லைகளின் திண்மையைப் பாதுகாத்தல், தெரிவுசெய்யப்பட்ட நாடுகளிலிருந்து நுழைவனுமதியுடன் வரும் ஆபத்துக் குறைந்த பயணிகள் சட்டபூர்வமாக கனடாவுக்கு பயணம் செய்ய வழிவகுத்தல்.

துரித விவரங்கள்

* காப்பரின் அரசாங்கம் வரிகளைக் குறைத்து, உதவிப்படிகளைக் கூட்டியபடியால், உழைப்பவர்கள் இருவருடன் கூடிய நால்வரைக் கொண்ட வகைமாதிரியான கனடியக் குடும்பத்துக்கு 2015ல் வரிக்குறைப்பும், $6,600 வரை அதிகரித்த உதவிப்படிகளும் கிடைக்கும்.

* இந்த அரசாங்கம் பதவியேற்றது முதல் ஆண்டுதோறும் வரிகளைக் குறைத்து வந்துள்ளது. மத்திய அரசு ஒட்டுமொத்தமாக மக்கள் மீது பொறுப்பித்துவந்த வரிப்பளு கடந்த 50 ஆண்டுகளுள் தற்பொழுது தான் மிகவும் தாழ்ந்துள்ளது என்பது உண்மையே.

தொடர்ச்சி 58ம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HOUSES FOR SALE


$298,888
DANFORTH AVE & VICTORIA PARK

$460,000
CURTIS CRES (MALVERN)


$479,900
MIDLAND & STEELES

$489,000
MIDLAND & EGLINTON

$489,900
DANFORTH & LAWRENCE

$499,900
MIDLAND & DANFORTH

$499,900
DANFORTH & ST.CLAIR

$499,900
DANFORTH & ST.CLAIR

$519,800
BRIMORTON & ORTON PARK

$540,000
SHEPPARD & MEADOWVALE

ROBERT SRIKARUNA B.SC.
Sales Representative
Dir: **416-567-9641**
Off: 416-289-3333
Email: roberts_ri@yahoo.ca

RE/MAX Above the Crowd!

வீடு வாங்க, விற்க
நம்பிக்கையுடன் அழையுங்கள்:
ரொபேட் ஸ்ரீகருணா
416-567-9641

RE/MAX Realtron Realty, Inc. Brokerage
(Each office independently Owned and operated)
885 Progress Ave. # 209, Toronto, On

பத்திரகாளி சோதிட நிலையம்
BADRAKALLI ASTROLOGY CENTER

Pandit Sri Hanuman
Kerala (Choddankiri)
416.846.2798
100% Guaranteed Result



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

பிளெக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2
GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

இன்று நேபாளம்... நாளை?

மிரட்டும் பூகம்பம்... மிரளும் தமிழகம்...

இறந்தவர்களின் எண்ணிக்கையைச் சரியாகக் கணிக்கக்கூட முடியாத அளவில் பூகம்பத்தின் கோரப் பிடியில் சிக்கியிருக்கிறது நேபாளம். பாரபட்சம் காட்டாமல் அனைத்துக் கட்டடங்களையும் சிதைத்து சின்னாபின்னமாக்கி இருக்க... அதன் அதிர்வலைகள் தமிழகம் வரை பதற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. இதில் இருந்து தற்காத்துக் கொள்ள தயாராக இருக்கிறோமா நாம்?

இது குறித்து பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த பொறியாளர் சுந்தரராஜனிடம் பேசினோம்.

"இயற்கைச் சீரழிவிலே மிகக் கொடூரமானது பூகம்பம்தான். அது, உயிர்களைக் கொல்வதுடன் நிற்காமல், அடுக்குமாடிக் கட்டடங்களையும் சுக்கு நூறாக்கிவிடும். அத்தகைய வீரியம் அதற்கு உண்டு. கடந்த காலங்களில், இந்தியாவின் வட மாநிலத்தில் லத்தூர் மற்றும் பூஜ் ஆகிய மாவட்டங்களில் மிகப் பெரிய பூகம்பங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

அதில், ஒரு கட்டடம்கூட மிஞ்சவில்லை. அனைத்தும் தரைமட்டமாயின. அந்த கோரச் சம்பவத்தைத் தொடந்து மத்திய அரசானது, கட்டடங்களுக்கான ஒரு வரைமுறையை வெளியிட்டது. அதன்படி, ஒரு கட்டடத்தை இப்படித்தான் கட்ட வேண்டும் என்ற விதிகளை அரசு வகுத்திருக்கிறது.

ஆனால், இன்று வரை அந்த விதிமுறைகளை யாருமே பின்பற்றுவதில்லை. அதைக் கண்காணிக்கவும் மத்திய அரசு தவறிவிட்டது.

1934ல் இமயமலையில் மிகப்பெரிய நில நடுக்கம் ஏற்பட்டது. அதுகுறித்த ஆய்வுகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று காலம் காலமாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கோரிக்கை வைத்தும் அந்த முயற்சி கிடப்பிலே இருந்ததுதான் மிச்சம். கடந்த ஆண்டு, மியாமி பல்கலைக்கழகத்தினர் வெளியிட்ட ஆய்வு, அனைவரையும் திகில் அடைய வைத்திருக்கிறது. அதில், இந்தியப் பெருங்கடலில் நீண்டகாலமாக பாறைகளுக்கு அடியில் அழுத்தம் ஒன்று உருவாகி வருகிறது. அது நாளுக்கு நாள் அதிகரித்து தன் ஆற்றலை வீரியப்படுத்திக்கொண்டிருக்கிறது.

இந்த அழுத்தம் வெளிப்படும்போது, 9.8 ரிக்டர் அளவு நில நடுக்கமும், 130 அடி அளவுள்ள அலைகளும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஏற்பட்டு உயிர்ச் சேதம் கடுமையாக இருக்கும் என்று கணித்திருக்கிறார்கள்.

இதுபோன்ற இயற்கைப் பேரழிவின்போது நம்மை காத்துக்கொள்ளும் வழிமுறைகள் என்னென்ன என்பதையும் நாம் அறிந்திருக்கவில்லை. இதனை முறையாகக் கற்றுக் கொடுத்திருக்க வேண்டியது நம் அரசுதான். அதன் விளைவுதான் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரை மாய்த்துக்கொள்ளும் செய்திகள். இயற்கையை சிதைத்து பாறைகளைக் குடைந்து ஆய்வுக் கூடங்கள் அமைப்பதுகூட பின்னாளில் கடுமையான சீரழிவுகளை ஏற்படுத்த வாய்ப்புகள் இருக்கின்றன.

பெரிய திட்டங்களால் என்றுமே பெரிய ஆபத்துகள் காத்து இருக்கின்றன" என்று எச்சரிக்கை செய்கிறார் அவர்.

